# அரங்கம்

செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்








வார இதழ் – இலவசம்

www.arangamnews.com

வெள்ளி, ஆனி 08, 2018. இதழ் - 16


# இலங்கை இராணுவத்தை 9 ஆகப் பிரியுங்கள் என்கிறார் விக்னேஸ்வரன்





இலங்கை அரசாங்கப் படைகளை 9 பிரிவாகப் பிரித்து, அவற்றை 9 மாகாணங்களுக்கு விநியோகிக்க வேண்டும் என்று வடக்கு முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன் கூறியுள்ளார்.

ஆனால், அரசாங்கம் இந்தக் கருத்தை புறக்கணித்து வருவதாகவும், வடக்கில் இலங்கை முதலீட்டு அபிவிருத்திச் சபையின் அலுவலகம் ஒன்றை திறந்துவைத்து உரையாற்றும் போது விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அமைதியான காலப்பகுதியில் ஒரு பெரிய இராணுவத்தை வைத்து பராமரிப்பதில் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களுக்கு இது இலகுவான தீர்வாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

'இராணுவத்தை 9 சம பிரிவுகளாக பிரியுங்கள், பிரித்து 9 மாகாணங்களுக்கு அவர்களை விநியோகியுங்கள்' என்றார் அவர்.

போர் முடிவுக்கு வந்த பின்னரும் எமது பகுதிகளில் இராணுவத்தை செறிவாக வைத்திருக்கும் பிரச்சினைக்கு இது தீர்வாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால் இவற்றுக்கு செவிசாய்க்காத அரசாங்கம் வேண்டும் என்றே படையை எங்கள் பகுதியில் வைத்திருக்கிறது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

வடமராட்சி கிழக்கு கடற்கரைப் பகுதியில் தற்போது ஏற்பட்டுள்ள பதற்றத்துக்கு இராணுவ பிரசன்னமே காரணம் என்று அவர் குற்றஞ்சாட்டுகிறார்.

அங்கு எமது பாரம்பரிய மீன்பிடி தளங்களை வெளிமாவட்ட மீனவரும் மற்றும் வெளியாரும் ஆக்கிரமிக்கிறார்கள் என்றார் விக்னேஸ்வரன்.

## மண்சரிவில் குழந்தை பலி



தெரணியகல பகுதியில் மலிபொட என்னும் இடத்தில் ஏற்பட்ட மண்சரிவில் இரண்டு வயது


தொடர்ச்சி... (பக்கம் -20 )










## ‘சீனாவுடனான ஒப்பந்தம் மீள்பரிசீலனை செய்யப்படும்’

சீனாவுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளில் உள்ள பல குறைபாடுகளை நீக்குவதற்காக இலங்கை அரசாங்கம் உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளை சீனாவுடன் நடத்தவுள்ளது.

சீனாவுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் சீனாவுக்கு பெரிதும் சாதகமான அம்சங்களைக் கொண்டிருப்பதாகவும், இலங்கையின் மீது அழுத்தங்களை கொடுப்பதற்கான ஒரு காரணியாக அது பயன்படுத்தப்படலாம் என்றும் பல விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இந்த நிலையிலேயே இந்த ஒப்பந்தத்தில் உள்ள சர்ச்சைக்குரிய விடயங்கள் குறித்து மீளாய்வு செய்வதற்காக அமைச்சர்கள் மட்டத்திலான சந்திப்புக்களை சீன அதிகாரிகளுடன் மேற்கொள்ளவுள்ளதாக அபிவிருத்தி யுக்திகள் மற்றும் சர்வதேச வணிக அமைச்சரான மலிக் சமரவிக்கிரம ஊடகங்களுக்கு கூறியுள்ளார்.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை எவ்வாறு தொடர்வது என்பது குறித்து இலங்கையில் அல்லது பீஜிங்கில் ஆகஸ்ட் மாதத்தில் பேசுவதற்காக தான் கேட்டிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

இந்த ஒப்பந்தங்கள் மஹிந்த ராஜபக்ஷ காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டதாகவும், ஆனால் ஆட்சி மாறிய பின்னர் அதில் மாற்றங்கள் ஏற்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

## தேரை இழுத்த ஜேசிபி வாகனம்





யாழ். தென்மராட்சி வரணி வடக்கில் உள்ள ஆலயம் ஒன்றில் ஜேசிபி வாகனம் கொண்டு தேர் இழுத்த சம்பவம் சமூக ஊடகங்களில் பரவலாக பேசப்படுகின்றது.

சித்திரத் தேரில் சுவாமி வீற்றிருக்க ஜேசிபி வாகனம் தேரை இழுத்தாக படங்கள் காண்பிக்கின்றன.

சாதிப் பிரச்சினையை மையமாக வைத்து இந்தச் சம்பவம் பலராலும் விமர்சிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் இவ்வாறானதொரு நிகழ்வு இடம்பெற்றுள்ளமை பலராலும் வேதனையோடு பேசப்படுகிறது.

## பல்கலைக்கழகங்களின் பகிடிவதையை கட்டுப்படுத்த கைத்தொலைபேசி செயலி அறிமுகம்

பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பகிடிவதையை கட்டுப்படுத்துவதற்காக கைத்தொலைபேசி செயலி வகையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிமுகம் செய்துள்ளது.

பகிடிவதையை கட்டுபடுத்தும் பொறுப்பு உபவேந்தர்கள், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் ஆகியோரை சாரும் என்று அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புதிய தொலைபேசி செயலியை அறிமுகம் செய்யும் நிகழ்வில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தற்சமயம் பகிடிவதை மிலேச்சத்தனமானதாக மாறியிருக்கிறது. சிலரின் பாலியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் ஆயுதமாக இது மாறியிருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஆண்டில் பகிடிவதை தொடர்பான 280 சம்பவங்கள் பற்றி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான பகிடிவதையினால் அதிகளவிலான மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் இணைந்து கொள்ள விரும்புவதில்லை என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பகிடிவதை காரணமாக சில மாணவர்கள் பல்கலைக்கழகங்களை விட்டு இடையில் விலகிச் செல்கிறார்கள். சில மாணவர் அமைப்புக்களும் பொறுப்பற்ற விதத்தில் சட்டவிரோதமான முறையில் செயற்பட்டு வருகின்றன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## ‘காணாமல் போனோர் விபரம் எம்மிடம் கிடையாது’

இறுதிக்ககட்ட யுத்தத்தில் சரணடைந்தவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்;கள, மற்றும் 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்கு முன்னரான காலப்பகுதியில், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் ஆகியோரின்; விபரங்களை தற்போது வெளியிட முடியாதெனவும், அவ்வாறானவர்களின் பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியல் தம்மிடம் இல்லையென்றும் காணாமல் போவோரை கண்டறியும் அலுவலகம் தெரிவித்துள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றிய விபரங்களை கண்டறியும் அலுவலகத்தின் தவிசாளர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் கடந்த 2ஆம் திகதி முல்லைத்திவு செலயகத்தில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை சந்தித்து உரையாடியிருந்தார்.

அந்த உரையாடலின்போது, சரணடைந்த மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியலை வெளியிட தயாராகவுள்ளதாகவும் அது குறித்து படை உயர் அதிகாரிகளிடமும் விபரங்களை கோரியுள்ளதாகவும் கூறியதாக அப்போது செய்திகள் வெளியாகியிருந்தன.

சட்டத்தரணி சாலிய பீரிஸ் அவ்வாறு கூறியதை, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள். ஊடகங்களுக்கும் கூறியிருந்தனர். ஆனால் அவ்வாறு கூறப்படவில்லை என்றும் சரணடைந்த மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விபரங்கள் அடங்கிய பெயர்ப் பட்டியல் தமது

தொடர்ச்சி... (பக்கம் -03 )

## திருமலையின் மூத்த விளையாட்டு வீரர் சாதனை

(கதிரவன் திருகோணமலை)

இலங்கை வளர்ந்தோர் மெய்வல்லுநர் சங்கம் வருடாந்தம் வளர்ந்தோர் மத்தியில் அவர்களின் திறமைகளை வெளிக்காட்ட போட்டிகளை நடத்தி வருகிறது. இவ்வருடம் 15வது தடவையாக கடந்த வாரம் 2ம் 3ம் திகதிகளில் கொழும்பு சுகததாஸா மைதானத்தில் நடத்தியது. இப்போட்டியில் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த அல்பிரட் நோயல் செல்லப்பிள்ளை (05.09.1924) 90 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான பிரிவில் 4 போட்டிகளில் பங்கு கொண்டு முதலிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

ஈட்டி எறிதல் 8.37 மீற்றர், 100மீற்றர் 30.0 செக்கன், 200மீற்றர் 67.7 செக்கன், 5000 மீற்றர் வேகநடை 48 நிமிடம் 01.4 செக்கன் நேரத்தில் முதலிடங்களைப் பெற்று தங்கத்தை தனதாக்கிக் கொண்டார்.

வருடாந்தம் நடத்தப்படும் போட்டிகளில் தொடர்ச்சியாக 15 தடவைகள் இவர் பங்கு கொண்டு வருகிறார். மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் பழைய மாணவரான இவர் அரச சேவையில் களஞ்சிய பொறுப்பாளராக இருந்து 1979ம் வருடம் ஓய்வு பெற்றவராவார். 1949ம் வருடம் தொடக்கம் அரச சேவை காரணமாக திருகோணமலை வந்த இவர் தொடர்ச்சியாக இங்கு வசித்து வருகிறார்.

## குடியேறிகள் படகு கவிழ்ந்து 46 பேர் பலி



சோமாலியாவில் இருந்து ஏமனுக்குச் செல்ல முயற்சி செய்த குடியேறிகள் பயணம் செய்த படகு கவிழ்ந்ததில், குறைந்தது 46 குடியேறிகள் நீரில் மூழ்கிவிட்டதாக ஐ.நா. (ஐக்கிய நாடுகள் சபை) அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஏமன் கடற்கரையில் அப்பால் உள்ள பெரும் அலைகள் நிரம்பிய கடலில் குடியேறிகள் சென்ற படகு தலைகீழாக கவிழ்ந்ததில், மேலும் 16 பேர் காணாமல் போயுள்ளதாக ஐஔஎம் எனப்படுகின்ற குடியேற்றத்திற்கான சர்வதேச அமைப்பு கூறியுள்ளது.

போசாஸோ துறைமுகத்தில் இருந்து குறைந்தது 100 பேரை ஏற்றிச்சென்ற அந்த படகில் பயணம் செய்தவர்கள் ஏமன் மற்றும் பிற வளைகுடா நாடுகளில் வேலை தேடி கிளம்பியதாக விபத்தில் உயிர் தப்பியவர்கள் குறிப்பிட்டனர்.

குடியேறிகள் அனைவரும் எத்தியோப்பிய நாட்டினர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதன்கிழமை காலை இந்த படகு கடலில் கவிழ்ந்ததாக ஐஔஎம(IOM) தெரிவித்துள்ளது. இந்த படகு விபத்தில் இறந்தவர்களில் 37 பேர் ஆண்கள், 9 பேர் பெண்கள் ஆவர். விபத்துக்குள்ளான படகில் பயணம் செய்தவர்களில் பலரும் உயிர்காப்பு சாதனங்கள் எதுவுமின்றி பயணம் செய்ததாக உயிர் தப்பியவர்கள் தெரிவித்தனர்.

## புல்லுமலை மக்கள் ஜனாதிபதிக்கு கடிதம்.



பெரிய புல்லுமலைப் பகுதியில், குடிநீர் போத்தல் உற்பத்தித் தொழிற்சாலை அமைப்பதாகக் கூறப்படும் பணிகளை உடனடியாக நிறுத்துமாறு கோரி, அப்பிரதேச மக்களால் ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

‘அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மட்டக்களப்பு பதுளை வீதியிலுள்ள அதிகமான பகுதிகளில் முழுமையான நீர்ப்பற்றாக்குறை காணப்படுகிறது. இவ்வாறு நீர்ப்பற்றாக்குறை காணப்படும் பகுதிகளில், நிலக்கீழ் நீர், குளங்கள், உன்னிச்சை நீர்ப்பாசனத் திட்டம் போன்றவற்றின் மூலம் நீரைப் பெற்று அத்தண்ணீரை போத்தல்களில் அடைத்து விற்பனை செய்யும் தொழிற்சாலையாக, இத்திட்டம் அமையவுள்ளதாக, எம்மால் அறியக்கூடியதாகவுள்ளது.

குடிப்பதற்கே நீர் இல்லாமல் அல்லோலப்படும் இவ்வேளையில், மழை நீர் மூலம் குளங்களில் சேமிக்கப்பட்டுள்ள நீரையோ அல்லது நிலக்கீழ் நீர் மூலமோ அல்லது நீர்ப்பாசனத் திட்டம் மூலமோ வழங்கப்படும் நீரைப் பயன்படுத்தி, இதுபோன்ற தொழிற்சாலை செயற்படுமாயின், எமது பகுதி மக்கள் குடிப்பதற்கு நீர் இன்றி பலதரப்பட்ட நோய்களுக்கும் இன்னல்களுக்கும் முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.

எனவே, இத்தொழிற்சாலை அமைப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் அனைத்து நடவடிக்கைகளும் உடன் நிறுத்த வேண்டும்” என அக்கடித்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே செங்கலடிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பெரிய புல்லுமலையில் அமைக்கப்படுகின்ற குடிநீர் போத்தல் உற்பத்தித் தொழிற்சாலை விவகாரத்துக்கும் தனக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் கலாநிதி எம். எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ‘குறித்த தொழிற்சாலை சட்டத்துக்கு முரணாக அமைக்கப்படுவதாக கூறுபவர்கள் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதன் மூலம் தமது சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்றும், இந்த விவகாரத்தில் எவ்வித சம்பந்தமும் இல்லாத தன்னை தொடர்புபடுத்தி விசமத்தனமான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், தான் தொழிற்சாலை அமைப்பதற்காக எந்த ஒத்துழைப்புக்களையும் வழங்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்று திங்கட்கிழமை புல்லுமலையில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.



## பஸ் விபத்தில் இருவர் பலி



நிட்டம்புவ - பஸ்யால பிரதான வீதியின் முருதுவல பகுதியில் வியாழன் (07) காலை இரண்டு பேருந்துகள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மாவனல்லையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த பேருந்தும் கொழும்பில் இருந்து அநுராதபுரம் நோக்கி பயணித்த பேருந்தும் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டன.

விபத்தில் மாவனல்லை பகுதியை சாமர தனுஷ்க குலரத்ன என்னும் 31 வயதுடைய இராணுவ அதிகாரி ஒருவரும், கோகலை பகுதியை சேர்ந்த திலன் சதுரங்க சேனநாயக்க என்னும் 22 வயதுடைய ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

விபத்து தொடர்பில் இரண்டு பேருந்துகளின் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நிட்டம்புவ பொலிஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மானநஸ்ட வழக்குகளை வாபஸ் பெற்ற அமைச்சர்



சிங்கள பத்திரிகை மீது தான் தாக்கல் செய்த மானநஸ்ட வழக்கை அமைச்சர் பாட்டாலி சம்பிக ரணவக்க வாபஸ் பெற்றுள்ளார்.

தன்னுடைய நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியதாக கூறி மௌபிம பத்திரிகை நிறுவனத்தின் மீது தொடுக்கப்பட்டிருந்த இரண்டு வழக்குகளையும் அமைச்சர் பாட்டலி சம்பிக ரணவக்க மீளப்பெற்றுக்கொண்டுள்ளார்.

மௌபிம பத்திரிகை நிறுவனத்தின் மீது 1 பில்லியன் மற்றும் 500 மில்லியன் இழப்பீடு கோரி தொடுக்கப்பட்டிருந்த மானநஷ்ட வழக்குகள் இரண்டையே இவ்வாறு அமைச்சர் பாட்டலி சம்பிக ரணவக்கவால் மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதனையடுத்து கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இந்த இரண்டு வழக்குகளையும் வியாழனன்று (07) இரத்து செய்வதாக அறிவித்துள்ளது.

## கழிவு பிளாஸ்ரிக்கை வாங்கி மீள்சுழற்சிக்குட்படுத்தும் திட்டம்



கழிவாக வீசப்படும் பிளாஸ்ரிக் வெற்று போத்தல்களை விலைக்கு வாங்கி, அவற்றை மீள்சுழற்சிக்குட்படுத்துவதோடு திண்மக் கழிவுகளை முகாமைத்துவம் செய்து சூழலைப் பாதுகாக்கும் திட்டத்தை அமுல்படுத்தபோவதாக மட்டக்களப்பு மாநகர சபை நிலையியற் குழுக்களின் சுகாதாரப் பிரிவுத் தலைவர் சிவம் பாக்கியநாதன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகர சபைப் பிரிவில் இது தொடர்பான வேலைத் திட்டம் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதுபற்றி ஞாயிற்றுக்கிழமை 03.06.2018 மேலும் தெரிவித்த அவர்,

மட்டக்களப்பு மாநகர சபையினால் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகளில் பிளாஸ்ரிக் போத்தல்களை தரம்பிரித்து மீள்சுழற்சிக்குட்படுத்தும் செயற்திட்டத்திற்கு நிதி அனுசரணை வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆசிய பவுண்டேஷன், பெய்ரா குறூப் மற்றும் மட்டக்களப்பு மாநகர சபை என்பனவற்றினால் கைச்சாத்திடப்படவுள்ளது.

இவ் ஒப்பந்தத்தின் மூலம் மக்கள் கழிவுகளாக வீசும் பிளாஸ்ரிக் போத்தல்களை ஒரு கிலோ இருபது ரூபாவிற்கு (20.00) கொள்வனவு செய்வதற்கான திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

மேலும், கழிக்கப்படும் பிளாஸ்ரிக் போத்தல்களை சேகரிப்போரை ஊக்குவிக்கும் நோக்கொடு அவர்களுக்கு மேலதிகமாக ஊக்குவிப்புத் தொகையும் வழங்கப்படவுள்ளது.

“வாழ்விற்கு திரும்பிக் கொடு“ எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், காலி மாநகர சபைகள் மற்றும் பியகம பிரதேச சபையின் நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட குறித்த உள்ளூராட்சி மன்ற அங்கத்தினர்களுக்கான தெளிவுபடுத்தும் செயலமர்வும் ஏற்கெனவே இடம்பெற்றுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை 01.06.2018 இடம்பெற்ற இச்செயலமர்வில் மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் என். மணிவண்ணன், பிரதி ஆணையாளர் என். தனஞ்செயன், சுகாதார நிலையியற் குழுவின் தலைவர் சிவம் பாக்கியநாதன், மாநகர உறுப்பினர் பா. குஜாஜினி, நிர்வாக உத்தியோகத்தர் வி. ரோஹினி, முகாமைத்துவ உதவியாளர் மற்றும் சுகாதாரப் பிரிவின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

## ‘காணாமல் போனோர் விபரம் எம்மிடம் தொடர்ச்சி...கிடையாது’



அலுவலகத்தில் இல்லையென்று மாத்திரமே சட்டத்தரணி சாலிய பீரிஸ் கூறியதாக, குறித்த அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் பெயர் விபரங்களை வெளியிடவுள்ளதாக சட்டத்தரணி சாலிய பீரிஸ் கூறினார் என்று கொழும்பில் உள்ள மற்றுமொரு உயர் அரச அதிகாரி தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பெயர் விபரங்கள் அடங்கிய பெயர்ப்பட்டியலை கையளிக்க படை உயர் அதிகாரிகள் மறுப்பு தெரிவித்தால், காணாமல்போவோரை கண்டறியும் அலுவலகம் இவ்வாறு அறிக்கை வெளியிட்டுள்ளதாகவும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

## நிரம்பி வழியும் விமலசுந்தர

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளில் கடுமையான மழை பெய்து வருவதால், விமலசுந்தர நீர்த்தேக்கம் நிரம்பி வழியத் தொடங்கியுள்ளது.
நோர்ட்டன் பிரிட்ஜ் போலிஸார் இதனை ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளனர்.
இன்று காலை முதல் விமலசுந்தர நீர் மின் உற்பத்தி ஆலைப் பகுதியில் கடுமையான மழை பெய்து வருகின்றது.
கடும் மழை காரணமாக லக்ஸ்ஸபான நீர்த்தேக்கத்தின் வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன.

## தேசிய ஒற்றுமை மற்றும் சமய நல்லிணக்கத்தை மேம்படுத்தும் மட்டு மாவட்ட இப்தார் நிகழ்வு

தேசிய ஒற்றுமை மற்றும் சமய நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்கில் நடத்தப்படும் மட்டக்களப்பு மாவட்ட இப்தார் நிகழ்வு மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பாலமுனை நடுவோடை கடற்கரையில் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மாணிக்கம் உதயகுமார் தலைமையில் நடைபெறும் இவ் இப்தார் நிகழ்வில், பிரதம அதிதியாக தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க மற்றும் அரச கரும மொழிகள் பிரதி அமைச்சர் அலிசாஹிர் மௌலானா கலந்து கொள்கிறார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகம், மண்முனைப்பற்று பிரதேச செயலகம் ஆகியன இணைந்து இவ் இப்தார் நிகழ்வினை ஏற்பாடு செய்துள்ளன.

## பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய இருவருக்கு சிறை

இரு பெண்களை கடத்தி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய இருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

சமுபுகஸ்கந்த பொலிஸ் நிலையத்தை சேர்ந்த முன்னாள் சப் இன்ஸ்பெக்டர் மற்றும் பாதுகாப்பு உதவியாளர் இருவரும் 2003ஆம் ஆண்டில் இரு பெண்களை கடத்தி, பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதற்காகவே அவர்களுக்கு 20 வருடங்களும் 6 மாதங்களும் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இரு பெண்களுக்கும் தலா 2 லட்சம் ரூபாய் நஸ்ட ஈடு வழங்குமாறும் நீதிமன்றம் குற்றவாளிகளை பணித்துள்ளது.

2003 ஆம் ஆண்டு பெப்ரவரி 18ஆம் திகதி பம்பலப்பிட்டியவில் வைத்து இந்தப் பெண்களை இவர்கள் கடத்தி, பாலியல் வல்லுறவு கொண்டதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

## தமிழகத்தில் நீட் தேர்வு தோல்வியால் இன்னுமொரு மாணவி தற்கொலை



தமிழகத்தில் நீட் தேர்வில் தோல்வி அடைந்ததைத் தாங்க முடியாமல் திருச்சி சமயபுரம் அருகே சுபஸ்ரீ என்ற மாணவி நேற்று (புதன்கிழமை)தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

கடந்த செவ்வாய்கிழமை அன்று மருத்துவ படிப்புக்கான தேசிய தகுதித் தேர்வான நீட் தேர்வு முடிவுகள் வெளியாகின.

ஏற்கனவே, செஞ்சியைச் சேர்ந்த மாணவி பிரதீபா விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்ட நிலையில், தற்போது மேலும் ஒரு மாணவி தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இதுகுறித்து கொள்ளிடம் போலீசார் விசாரணை செய்து வருகின்றனர்.

சமயபுரம் அருகே நம்பர் 1 டோல்கேட் திருவள்ளுவர் நகரைச் சேர்ந்தவர் கண்ணன். இவர் திருச்சி கண்டோன்மெண்ட் கிளை அரசு போக்குவரத்து கழக ஓட்டுநராகவும், அண்ணா தொழிற்சங்க தலைவராகவும் உள்ளார். இவருடைய மகளான சுபஸ்ரீ (18), இந்த வருடம் 12-ஆம் வகுப்பில் 907 மதிப்பெண்கள் எடுத்து திருச்சியில் உள்ள தனியார் பள்ளியில் நீட் தேர்வும் எழுதினார்.

நீட் தேர்வு முடிவில் 24 மதிப்பெண்கள் மட்டுமே எடுத்து தோல்வியுற்றார். இதனால் மிகவும் மனமுடைந்த நிலையில் இருந்த சுபஸ்ரீ, நேற்று (புதன்கிழமை) இரவு வீட்டில் இருந்த மின்விசிறியில் தனது துப்பட்டாவால் தூக்குமாட்டிக் கொண்டார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய சுபஸ்ரீயின் தந்தை கண்ணண், ”நீட் தேர்வை முற்றிலும் நீக்க வேண்டும்” என்றார். இனிமேல் நீட் தேர்வினால் ஒரு மாணவ மாணவியைக் கூட நாம் இழக்கக் கூடாது என்று குறிப்பிட்ட அவர், தற்கொலை ஒரு தீர்வாகாது““ என்றார்.

# இலங்கையின் சுற்றுலாத்துறை வளர்ச்சி நீடிக்குமா?



இந்த வருடத்தின் முதல் ஐந்து மாதங்களுக்குள் இலங்கைக்கு வந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை பத்து லட்சத்தை தாண்டி விட்டதாக இலங்கை சுற்றுலாத்துறை கூறுகின்றது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகின்ற போது இது 14.7 வீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் அது கூறுகின்றது. அதற்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது கடந்த வருடத்தில் இதே காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 6.2 வீதத்தால் அதிகரித்துள்ளது.

ஒரு போர் கடந்துபோன தேசத்தில், அதிலும் தனது கணிசமான வருமானத்துக்காக சுற்றுலாத்துறையை நம்பியிருக்கும் ஒரு நாட்டுக்கு இது நல்ல ஒரு செய்திதான். அதுவும் வருகையின் வீதம் படிப்படியாக வருடா வருடம் அதிகரித்து வருவதும் சிறப்பான நிலைமைதான்.

ஆனால், இதில் நமது பங்களிப்பு என்ன என்பதையும் பார்த்தாக வேண்டும். கண்டி கலவரங்கள் உண்மையில் இந்த சுற்றுலாப் பயணிகள் வருகையை கண்டிப்பாக பாதித்திருக்கும். இதனை இல்லை என்று சொல்ல அனைத்துத் தரப்பினரும் தயங்கவே செய்கின்றனர்.
குறிப்பாக ஐரோப்பிய பயணிகளின் வருகையை இது கணிசமாக பாதித்திருக்கும்.

இருந்தாலும் இங்கு நல்ல விடயம் என்னவென்றால் இங்கு தற்போது வரும் சுற்றுலாப் பயணிகளில் அதிகமானவர்கள் இந்தியர்க்ள். இவர்கள் தமது நாட்டிலும் கணிசமான வன்செயல்களுக்குள் பல இடங்களுக்கும் பயணித்துப் பழக்கப்பட்டவர்கள்.

இதனால், கண்டி கலவரம் போன்றவற்றுக்கு மத்தியிலும் அவர்களது வருகை பெரிதும் பாதிக்கப்படவில்லை.

ஆனால், சுற்றுலாத்துறை வருமானத்தை அதிகரிப்பதாயில் இலங்கை ஐரோப்பிய பயணிகளின் வருகையை ஊக்குவித்தாக

**பூபாலரட்ணம் சீவகன்**

வேண்டும். அதுவும் புலம்பெயர்ந்து அங்கு வாழ்கின்ற இலங்கையரின் வருகையை ஊக்குவிப்பது நல்ல சுற்றுலாத்துறை வருமானத்துக்கு வழி செய்யும்.

ஆனால், இங்கு அப்படியான நிலைமை இன்னமும் பூரணமாக உருவாகிவிட்டது என்று சொல்வதற்கில்லை. இங்கு வரும் புலம்பெயர் தமிழர் இன்னமும் மாற்றாந்தாய் மனப்பாங்குடனே அணுகப்படுகிறார்கள். அதேவேளை ஏனைய ஐரோப்பிய பயணிகளை கவர்வதாயின், இங்கு மிகவும் சுமூகமான ஒரு நிலைமை உருவாக்கப்பட வேண்டும். ஆனால், இங்குள்ள சுற்றுலா வரவேற்பு முறைகள் பெரிது நட்பு ரீதியானதாக இல்லை என்பதே பலரது கருத்தாக இருக்கின்றது. அண்மையில்கூட பல ஐரோப்பிய சுற்றுலாப் பயணிகள் தாக்கப்பட்ட, அல்லது சிப்பந்திகளால், ஏனையோரால் மோசமாக நடத்தப்பட்ட சம்பவங்கள் அப்படியான பயணிகள் மனத்தில் சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளன.

அதனைவிட கண்டி வன்செயல்கள் போன்ற இனரீதியான வன்செயல்களும் சுற்றுலாத்துறைக்கு நேரடியாக அல்லாவிட்டாலும், நீண்ட கால அடிப்படையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிடும்.

அது மாத்திரமல்லாமல், குடிவரவு திணைக்களமும், இறங்கு தளங்களில் உள்ள தமது கருமபீடங்களை பயணிகளுக்கு நட்பு ரீதியானவையாக்க வேண்டும்.

சுற்றுலாத்துறையால் இலங்கையில் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் என்பவை ஒரு புறம் கையாளப் படவேண்டியவையாக இருந்தாலும், சுற்றுலாப்பயணிகளால் வரும் வருமானம் அதிகரிக்க வேண்டும், நீடிக்க வேண்டும் என்றால் அந்த துறையின் இன்னமும் அதிக கவனத்தை குவிக்க வேண்டும்.

இது அரசாங்கம் மாத்திரமல்ல, மக்களும் சேர்ந்து செய்ய வேண்டிய விடயந்தான்.

உண்மையில் இங்கு பெருமளவில் வரும் பயணிகள் இந்தியர்களாக இருந்தாலும், சில இடங்களில், குறிப்பாக சுற்றுலாப் பகுதிகளில் அவர்கள் நடத்தப்படும் விதம் மனதை நோகச் செய்வதாக இருந்ததை எனது சொந்த அனுபவத்திலேயே பார்த்திருக்கின்றேன். அவையும் தவிர்க்கப்பட வேண்டும்.

இவற்றில் இலங்கையின் சுற்றுலாத்துறை பெரும் கவனம் செலுத்த வேண்டும்.

அதேவேளை இலங்கை பாலியல் சுற்றுலா போன்ற தவறான போக்குகளுக்கான இடம் என்ற பெயரையும் ஏற்படுத்திக்கொள்ளாமல் கவனமாக நடந்துகொள்ளவும் வேண்டும்.

## நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தொடர்பு என்பது பொய் என்கிறார் சபாநாயகர்

பேர்பச்சுவல் ட்ரஸரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸிடம் பணம் பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லது வேறு நபர்களின் பட்டியல் ஏதும் இல்லை என அதற்குப் பொறுப்பான அனைத்துத் தரப்பினரும் தமக்கு அறிவித்துள்ளதாக சபாநாயகர் கரு ஜயசூரிய இன்று பாராளுமன்றில் அறிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு அதிகாரிகள் 25 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்கு அமைய முதல் அறிக்கைகள் பொய்யானவை என பொலிஸார் அறிவித்துள்ளதாக சபாநாயகர் மேலும் தெரிவித்தார்.

அர்ஜுன் அலோசியஸிடம் பணம் பெற்றதாகப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் தெளிவுபடுத்தும் விதமாகச் சபாநாயகர் இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக பெரும் எண்ணிக்கையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் அர்ஜுன் அலோசியஸ் குழுவிடம் பணம் பெற்றதாக செய்திகள் பல ஊடகங்களில் வெளியாகியிருந்தன.

அரங்கம்
செய்திகள்
தொடர்புகளுக்கு
ஆசிரியர்- பூ.சீவகன்
227, பார் வீதி, மட்டக்களப்பு

அரங்கம் பத்திரிகை நிறுவனத்தின் விளம்பர முகவர்கள்

மட்டக்களப்பு

ARANGAM
071 399 9091
070 300 9001

EAST LINK AGENCY POST OFFICE
077 180 1400
196,TRINCO ROAD,BATTICALOA

SHALOM DIGITAL STUDIO
077 632 1079
63,ST ANTONIS LANE,BATTICALOA

DINA ADVERTISING
077 712 0809
183/1,NEW KALMUNAI ROAD, KALLADY,BATTICALOA

ST.ANTONY
077 470 1373
MAIN STREET, VALAICHCHENAI

TERRY
077 618 5 209

கொழும்பு

ARANGAM
arangamads@gmail.com
070 345 6800
071 399 9091

SIVA
077 503 8997
077 721 7341

S.K. RAMESH
077 360 0161
65.MANNING PLACE WELLAWATTA

UK +44 776 935 409
+44 208 422 5917
67,KEMPTON AVENUE NORTHOLT,UB5 4HG,UK

## மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய அதிபர் அலுவலக ஒழுங்கமைப்பு போட்டியில் மூன்று பாடசாலைகளுக்கு முதலிடம்.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட அதிபர் அலுவலகம் ஒழுங்கமைப்பு போட்டியில் மரப்பாலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, காஞ்சிரங்குடா காமாட்சி வித்தியாலயம், கன்னன்குடா மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகள் முதலிடங்களைப் பெற்றுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம் தெரிவித்தார்.

ஆவணங்களை ஒழுங்குபடுத்தி முறையாக பேணுதலை ஊக்குப்படுத்தும் வகையிலும், செயற்திறனை மேம்படுத்தும் நோக்கிலும், அதிபர்களின் ஆளுமையைவிருத்தி செய்யும் பொருட்டும் இப்போட்டி நடாத்தப்பட்டது.


ஆரம்பப்பிரிவு, இடைநிலைப்பிரிவு, உயர்நிலைப்பிரிவு எனும் மூன்று பிரிவு பாடசாலைகளிடையே நடாத்தப்பட்ட போட்டியில், ஆரம்பப்பிரிவு பாடசாலைகளில் மரப்பாலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை முதலாம் இடத்தினையும், முதலைக்குடா கனிஸ்ட வித்தியாலயம் இரண்டாம் இடத்தினையும், மணிபுரம் விக்னேஸ்வரா வித்தியாலயம் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டன. இடைநிலைப்பிரிவில் காஞ்சிரங்குடா காமாட்சி வித்தியாலயம் முதலிடத்தினையும், காயன்குடா கண்ணகி வித்தியாலயம் இரண்டாம் இடத்தினையும், உன்னிச்சை 8ம் கட்டை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மூன்றாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டன. உயர்நிலை பாடசாலைகளில் கன்னன்குடா மகா வித்தியாலயம் முதலிடத்தினையும், கொக்கட்டிச்சோலை இராமகிருஸ்ணமிசன் வித்தியாலயம் இரண்டாம் இடத்தினையும், மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டுள்ளன.



# இளைஞர் மாநாடு நடத்தும் விக்னேஸ்வரன்

## ஆட்சியின் ஆரம்பத்தில் செய்ய வேண்டியதை இறுதியில் செய்யும் நோக்கம் என்ன?

தமிழ் இளைய தலைமுறையினரின் பிரச்சினைகளை ஆராய்தல், அவர்களை ஆளுமையும் ஆற்றலும் உள்ளவர்களாக உருவாக்குதல், அவர்களை அரசியல் மயப்படுத்துதல், போருக்குப் பிந்திய இளைய தலைமுறையின் நிலை, அவர்களின் நடத்தைகளை ஆற்றுப்படுத்தல் என்று பெரியதொரு வேலைத்திட்டப் பட்டியலை அறிவித்திருக்கிறது தமிழ் மக்கள் பேரவை.



முதலமைச்சருடைய - மன்னிக்கவும் பேரவையின் இணைத்தலைவருடைய

**கருணாகரன்**

மிக விரைவில் இளையோர் மாநாடொன்றைக் கூட்டவேண்டும் என்ற அறிப்பையும் கூடவே விடுத்திருக்கிறது. தமிழ் மக்கள் பேரவையை உருவாக்கிய நோக்கங்களில் இளையோருடைய எதிர்காலத்தைப் பற்றிய அக்கறையைக் கொள்வதும் ஒன்று. அத்துடன், நேர்மையான அரசியல் கலாச்சாரம் ஒன்றை உருவாக்குவதைப் பற்றியும் தேர்தல் விஞ்ஞாபனங்களில் கூறப்படுவதையெல்லாம் செயற்படுத்தும் பொறுப்பை அரசியல் கட்சிகள் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்கான வழிவகைகளைப் பற்றியும் சிந்திக்கப்படும் எனவும் பேரவை தெரிவித்திருக்கிறது.

05.06.2018 அன்று யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர்களில் ஒருவரான வடமாகாண முதலமைச்சர் க.வி. விக்கினேஸ்வரன் இந்த அறிவிப்பை விடுத்திருக்கிறார். இதில் அவர் ஊடகவியலாளர்களிடம் விடுத்த கோரிக்கையே முக்கியமானது. இந்த நோக்கத்தின் உச்சம் அல்லது மையக்குறியே ஊடகவியலாளர்கள்தான். தமது அறிவிப்புகளை மக்களிடம் கொண்டு செல்வதற்கு ஊடகவியலாளர்கள் மகாபாரதத்தில் செயற்பட்ட பார்த்தசாரதியைப் போலச்செயற்பட வேண்டும் என்று வினயமாகக் கேட்டுள்ளார்.

நேரடியாகப் பார்த்தால், இந்த அறிவிப்பு கவனத்திற்குரிய பல விடயங்களை உள்ளடக்கியிருக்கிறது. குறிப்பாகத் தமது கடந்த கால அரசியல் பணிகளைப் பற்றிய மீளாய்வையும் உள்ளடக்கியுள்ளது. போரினால் பாதிக்கப்பட்ட சமூகமொன்றுக்கு ஆற்றப்பட்டிருக்க வேண்டிய அவசியப் பணிகள் கவனம் கொள்ளப்படாமையைப் பற்றிய குறிப்பை இந்த அறிவிப்புக் கொண்டுள்ளது. இப்படிப் பலவற்றைக் குறிப்பிடலாம்.

ஆனால், இதன் உள்ளே மறைந்திருக்கும் ரகசிய நோக்கு நம்மைக் கலவரமடைய வைக்கிறது. ஏனென்றால், விக்கினேஸ்வரன் அறிவித்திருக்கிற இந்த விடயங்கள் எல்லாம் அவர் உள்பட அனைவரும் ஏற்கனவே தெளிவாக அறிந்தவை. அதிலும் பேரவைக்காரருக்கு இதைப்பற்றித் தெளிவாகத் தெரியும்.

அப்படித் தெரிந்து கொண்டே இவ்வளவு நாளும் அதற்கான வேலைகளைச் செய்வதைப்பற்றி எவரும் அக்கறைப்பட்டிருக்கவில்லை. அதற்கும் தமக்கும் சம்மந்தமே இல்லை என்பதைப் போலவும் அரசாங்கம் நிதியைத் தந்தால்தான் தம்மால் எதையும் செய்ய முடியும் எனவும் வாழாதிருந்தனர். இப்போதுதான் மக்களின் மீது கரிசனை பிறந்திருக்கிறது. அகக் கண் திறந்துள்ளது. இது ஏன் என்றால், அடுத்து வரப்போகிற மாகாணசபைத் தேர்தலுக்கான முன்னேற்பாடே.

மாகாணசபைத் தேர்தலில் பெரும்பாலும் விக்கினேஸ்வரன் தலைமையிலான ஒரு அணி வடக்கில் களம் இறங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கிழக்கிலும் வடக்கிலுமாக களமிறக்கப்படும் அணிகளுக்கு தமிழ் மக்கள் பேரவை வழிநடத்தல் அமைப்பாக மறைமுகமாகச் செயற்படும். இதற்கான முன்னோட்டமாகவே இளைய தலைமுறையைக் குறி வைத்த இளையோர் மாநாடு. ஆனால், இந்த மாநாடு வடக்கில் நடத்தப்படுமா? அல்லது கிழக்கில் நடக்குமா என்று இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இருந்தாலும் வடக்குக் கிழக்கு மற்றும் கொழும்பு உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளில் இருந்தும் இளைய தலைமுறையினர் பங்கேற்பார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் பணிகளுககு எப்போதும் இளைய தலைமுறை அவசியம். இளைய தலைமுறையை எந்தத் தரப்பு தன் கையில் வைத்திருக்கிறதோ அந்தத் தரப்பு வெற்றிக்கு அருகில் இருக்கிறது என்று பொருள். இளைய தலைமுறையின் ஆதரவு என்பது வலுமிக்க சண்டையணியின் பலத்துக்கு நிகரானது. எனவேதான் கைமுந்தி இந்தக் காரியத்தை பேரவை செய்கிறது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கைகளில் இளைய தலைமுறையின் பலமும் வளமும் சென்று விடக் கூடாது என்பதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கை இது. ஆனால், இதில் எந்தளவுக்கு பேரவை வெற்றியடையும் என்று தெரியவில்லை. இதை விக்கினேஸ்வரனும் உணர்ந்திருக்கிறார். எனவேதான் அவர் ஊடகங்கள் இதற்கான பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

புதிய அரசியல் மாற்றங்களுக்குப்பதிலாக சீர்திருத்த அரசியலைப்பற்றியே விக்கினேஸ்வரனின் அறிவிப்பு சொல்கிறது. மாற்றங்களைச் செய்வதற்குப் பதிலாக சீரமைப்புகளை உண்டாக்குதலே பேரவையின் நோக்கம். தமிழ்ச்சமூகத்திற்கு இது எந்தளவுக்குப் பொருத்தமாக இருக்கும்?

ஏனென்றால் தமிழ்ச்சமூகம் பல வகையிலும் உள் – வெளி (அக- புற ) நெருக்கடிகளால் சிதைவடைந்துள்ளது. இதற்கு தயக்கமில்லாத முறையில் ஒரு அறுவைச் சிகிச்சை தேவை. அப்படிச் செய்தால்தான் இதனுள்ளே உறைந்து போயிருக்கும் சீழையும் தீராத வலியையும் போக்க முடியும். இல்லையென்றால் புதிய லேபலில் பழைய கள்ளே திரும்பவும்



கிடைக்கும்.

எல்லாவற்றுக்கும் மேலாக இந்த இளையோர் மாநாடு மற்றும் பேரவையின் வேலைத்திட்டங்கள் யாழ்ப்பாணத்துக்கு வெளியே எப்போது வரப்போகின்றன? அல்லது யாழ்ப்பாணத்துக்கு மட்டும்தானா என்பதை விக்கினேஸ்வரனோ பேரவையோ அறிவிக்கட்டும்.

அதற்குப் பிறகு என்ன செய்வது என்று யோசிக்கலாம்.

## தமிழர் என்பதால் பிச்சைக்காசு தருவதுபோல் 28வருடங்களின் பின் நஸ்டஈடா?’

‘1990 – 1995 காலப்பகுதிகளில் எமது பகுதியில் இடம்பெற்ற பேரழிவிற்கு, 28வருடங்களின் பின்னர் தற்போது ஆயிரம் ரூபாய்க் கணக்கில் நஸ்ட்டஈடு தருகிறார்கள். தமிழர்கள் என்பதால் இந்தப் பாரபட்சமா? இது நீதியா? நியாயமா? ‘ என்று சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான அம்பாறை மாவட்ட அமையத்தின் செயலாளர் திருமதி மேரி அந்தோனி சீற்றத்துடன் பேசியுள்ளார்.



இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் கல்முனைப்பிராந்திய பணிமனை ஏற்பாடுசெய்த சிவில் சமுகப்பிரதிநிதிகளுடனான சமுகநல்லிணக்கச் செயலமர்வில் உரையாற்றிய போதே திருக்கோவில்



வினாயகபுரத்தைச் சேர்ந்த பிரதிநிதி மேரி மேற்கண்டவாறு ஆக்ரோசமாகக்கூறினார்.

கல்முனைப் பணிமனையில் நடைபெற்ற அமர்வில் அவர் மேலும் பேசுகையில்:

‘போட்டோக் கொப்பி எடுத்தெடுத்து அலுத்துவிட்டது. போட்டோக் கொப்பிகளுடன் இந்த அதிகாரிகளின் பின்னால் அலைந்து திரிந்து ஏகப்பட்ட விண்ணப்பங்களை கேட்போரிடமெல்லாம் அனுப்பிவைத்தோம்.

இடையில் அந்த ஆணைக்குழு, இந்த ஆணைக்குழு என்றுகூறி காணாமல் போனோர் பாதிக்கப்பட்டோர் என்று சாட்சியமளிக்க அழைப்பார்கள். அதற்கும் பஸ் ஏறிவந்து சாட்சியமளித்தோம். ஆனால் ஒன்றுமே நடக்கவில்லை. ஆன பலன் எதுவுமேயில்லை. அனைத்தும் வெறும்கண்துடைப்பே.

வந்த அதிகாரிகளுக்கு கொடுப்பனவு வட்டா. ஊடகங்களுக்கு தீனி. ஆனால் எம்போன்ற ஏழைகளுக்கு 5 சதமும் கிடைக்கவில்லை.

1990-95களில் உயிரிழந்திருந்தால் 1லட்சருபாவாது கிடைத்திருக்கும். ஆனால் லட்சக்கணக்கான வீடுகளை இழந்த எம்மக்களுக்கு இன்று நஸ்ட்ஈடாக 2000ருபாவும் 3000ருபாவும் தருகிறார்கள். இது நியாயமா?

எம்மில் பலர் மனநோயாளிகளாக மாறியுள்ளனர். எம்மைப்பார்க்க யாருமேயில்லை. வாழ்க்கை வெறுத்துவிட்டது.

அண்மையில் கண்டி திகனயில் இடம்பெற்ற சம்பவத்தில் பாதிக்கப்பட்டோருக்கு உடனடியாக 5லட்சருபா நஸ்ட்டஈடு வழங்கப்பட்டது. அது நல்லது. ஆனால் அதேபோன்று 20- 28வருடங்களுக்கு முன்பு யுத்தத்தாலும் வன்முறையாலும் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கும் அந்த நீதி வழங்கப்பட்டிருக்க வேண்டுமே. அது ஏன்? தமிழர் என்பதால் இந்தப்புறக்கணிப்பா?

**காரைதீவு நிருபர் சகா**

தேர்தல் என்றால் பல வேசங்களோடு பலரும் வருவார்கள். அவர்கள் பாட்டில் வலை வீசுவார்கள். தங்களுக்குத் தேவையான வாக்குகள் நிரம்பிவிட்டால் பின்னர் இந்தப்பக்கமே திரும்பிப் பார்க்கமாட்டார்கள்.

அம்பாறை மாவட்டம் அதிலும் எமது திருக்கோவிலின் விநாயகபுரம், பாலக்குடா, சின்னத்தோட்டம் காயத்திரிகிராமம், தாண்டியடி, தாமரைக்குளம் காஞ்சிரங்குடா போன்ற தமிழர் கிராமங்கள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுவருகின்றன.’ என்று கூறினார்

மலைகளைப் பேசவிடுங்கள்

# இலங்கை (யில்) தமிழர்கள்

## வடகிழக்குத் தமிழர் – மலையகத் தமிழர் அடிப்படை வேறுபாடு என்ன?

இலங்கையில் தமிழ் மக்கள் என்போர் குறித்த அக்கறை இலங்கையில் வாழும் நிலையை கொண்டிராத அல்லது இலங்கைக்கே வந்திராத அல்லது இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களிடையே அதிகமாக உள்ளது.

இலங்கையில் நடைபெற்ற இலங்கைத் தமிழ் மக்கள் சார்ந்த நீண்ட போர், அதன் தொடர்ச்சியாக இடம்பெற்ற நிகழ்வுகள் இலங்கையில் வாழும் தமிழர்கள் குறித்த சர்வதேச தமிழர்களின் பார்வையை விசாலப்படுத்தியுள்ளது எனலாம். தற்போது யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் தமிழ் மக்களின் நிலைப்பாடு அவர்கள் வாழிடமாகக் கொண்டுள்ள தளத்திற்கு தளம் மாறுபட்டு காணப்படுகின்றது.

இலங்கையின் கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் நிலைப்பாடும், வடக்கில் வாழும் தமிழ் மக்களின் நிலைப்பாடும் தற்போதைய நிலையில் ஒரே மாதிரியானவைதானா என்கின்ற ஆய்வு அவசியமாகின்றது. வன்னியில் வாழும் மக்களின் கோரிக்கைகளில் மாற்றங்கள் தோன்றியுள்ளனவா? உரிமைக்காக குரல் எழுப்பி உறவுகளை உயிர்த் தியாகம் செய்த மக்கள் இன்று தமது அடிப்படை வாழ்வாதார பிரச்சினைகள் குறித்த பேசும் நிலைக்கும் ஆளாகியுள்ளனர்.

இவ்வாறு இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களை பூர்வீகமாகக்கொண்ட தமிழர்கள் மாத்திரமல்லாது தமிழர் என்கின்ற பொது அடையாளத்தினால் போரின் நேரடியானதும் மறைமுகமானதுமான தாக்கத்திற்கு உள்ளான இலங்கை வாழ் (இந்திய வம்சாவளி) மலையக மக்களும் இலங்கையில் வாழும் தமிழர்கள்தான் என விவரணப்படுத்தும் தேவையும் இந்த காலகட்டத்தில் எழுகின்றது.

இந்த பத்தி இலங்கையில் வாழும் தமிழர்களுள் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் பூர்வீக இலங்கைத்தமிழர்கள் மற்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே மலைநாட்டு பிரதேச மத்திய, ஊவா, சப்ரகமுவ உள்ளிட்ட இலங்கையின் மத்திய, தென் மாகாணங்களில் பரந்துவாழும் இந்திய வம்சாவளி இலங்கைத் தமிழர்களான மலையகத் தமிழர்கள் குறித்த ஒரு சமாந்தர பார்வையாக அமைகிறது.

இலங்கைத் தமிழர் (Sri Lankan Tamils) என்போர் யார்? மலையகத் தமிழர்(Upcountry Tamils) என்போர் யார்? ஏன் தமிழர்கள் ஒற்றுமையாக ‘தமிழர்கள்’ என்ற நிலையில் மாத்திரம் வாழமுடியாது என்பன போன்ற வினாக்கள் பலராலும் பரவலாக விவாதிக்கப்படுகின்றது. எனினும் இவ்வாறு வேறுபடுத்தி அறியப்படுவதற்கான காரணங்கள் பற்றிய ஆய்வுகள் குறைவாக உள்ளதன் அடிப்படையில் இந்த பத்தி இன்றைய களநிலையில்; இலங்கையில் வாழும் தமிழர்கள் பற்றியதான பார்வையை செலுத்த முனைகின்றது. இலங்கையில் வாழும் இலங்கைத் தமிழருக்கும் மலையகத் தமிழருக்குமான அடிப்படை வேறுபாட்டினை பின்வருமாறு அடையாளப்படுத்திக் கொள்ளலாம்.

1. இலங்கையில் பூர்வீகமாக வாழ்ந்து இலங்கைத் தமிழர்கள் தங்கள் சுயநிர்ணய உரிமையுடன் இலங்கையில் இருந்து பிரிந்து வாழும் எண்ணத்தோடு ஆரம்பித்து நடாத்திய யுத்தம் மூன்று தசாப்தங்களை கடந்து பாரிய மக்கள் அழிவுடன் முடிவுற்ற நிலையில் அவர்களது தற்போதைய கோரிக்கைகள் “சுயநிர்ணய உரிமை” என்ற கருத்து நிலைக்குள் இலங்கை மக்களாக தங்களை மீளவும் புதுப்பித்துக் கொள்ள காட்டும் பிரயத்தனம் அல்லது தேவைப்பாடு பற்றிய ஒரு நிலை.

2. இருநூற்றைம்பது வருடங்களுக்கு முன்பாக காலனித்துவ ஆட்சியாளர்களால் ஆரம்பிக்கப்பட்ட பெருந்தோட்ட (முதலாளித்துவ) பயிர்ச்செய்கை கட்டமைப்புக்கு தொழிலாளிகளாக அழைத்து வரப்பட்ட இந்திய வம்சாவளி தமிழர்கள் தங்களை இலங்கை நாட்டின் தனித்துவமான ‘தேசிய இனமாக’ வளர்த்தெடுத்து இன்று தம்மை “மலையகத் தமிழர்”களாக அடையாளப்படுத்திக் கொண்ட நிலையில் அந்த கருத்துருவாக்கத்தை அடையாளப்படுத்தலில் (identification) நிலைப்படுத்துவதில் (positioning) அவர்கள் காட்டிக் கொள்கின்ற அக்கறை.

கிடைக்கத்தகு தகவல்களின் படி இலங்கையில் வாழுகிற இலங்கைத்தமிழர்களின் எண்ணிக்கை மொத்த சனத்தொகையில் 12 சதவீதமாகவும் மலையகத்தமிழர்களின் எண்ணிக்கை 7 சதவீதமாகவும் உள்ளது. இந்த அளவு தற்போதைய நிலையில் எந்த அளவுக்கு நேர்த்தியானது என்பது கேள்விக்குறி. 2011 ஆம் எடுக்கப்பட்ட கணிப்பீட்டின் பெறுபேறுகள் வேறுபட்ட தொகையினை பதிலாகத் தரக்கூடும்.

மலையகத் தமிழர், இலங்கைத் தமிழர் என இரண்டு வகைத் தமிழர்களும் “தமிழர்” என்ற அடிப்படையில் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் ஒன்றாயினும் அதன் வடிவங்கள் வேறுப்பட்டன. இது கூர்ந்து அவதானிக்கப்பட வேண்டிய ஒரு விடயம். இந்த கூர்மையான பார்வை நிலை அல்லது ஆய்வு நிலை பற்றியெல்லாம் பேசுவதற்கு முன்பாக இந்த இரண்டு வகை தமிழர்களுக்கும் இடையே அடிப்படையில் உள்ள வேறுபாடுகள் என்ன? என பார்ப்பது அவசியம். இவ்வாறு வேறுபடுத்தி பார்க்கின்றபோது “பிரதேசவாத” கண்ணோட்டம் என்று கொள்ளாது உணர்ச்சி நிலைகளை (Emotional) தள்ளிவைத்து யதார்த்த நிலையை முன்னிறுத்தி விளக்கப்படுத்தல் / விளங்கிக் கொள்ளப்படுதல் முக்கியத்துவமுடையது.

இலங்கையை பூர்வீகமாகக் கொண்டு வாழும் ஈழத் தமிழர் அல்லது இலங்கைத் தமிழர் என்போர் படிப்படியாக முன்னோக்கி பல்லாயிரம் வருடங்களாக வளர்த்தெடுத்து தங்களை தங்களுக்கேயுரிய பண்பாட்டு, பழக்கவழக்க, கலாசார, சட்ட நடைமுறை (தேச வழமைச் சட்டம், முக்குகச் சட்டம்), கல்வி அடிப்படையில் உறுதிபெற்று, பூர்வீக சிங்கள மக்களில் இருந்து பிரிந்து சென்று “தனித்து” வாழ கோரிக்கை விடுக்கும் நிலையில் இலங்கை ஆட்சியாளர்களுடன் உறவாடி (எதிர்மறை உறவுக்கொண்டேனும் negative relationship) வருபவர்கள் எனவும்,

மலையகத் தமிழர் என்போர் இருநூற்றைம்பது வருடங்களுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்டு இலங்கை நாட்டில் கூலிகளாக வாழத் தொடங்கி படிப்படியாக இலங்கையராகி இலங்கையில் வசித்து, பிரித்தானியர் இலங்கையை விட்டுப்போகும் கடைசி நாட்களில் இலங்கை நாட்டில் குடியுரிமை பெற்று (1931-டொனமூர்) பின்னர் சுதேச இலங்கை ஆட்சியாளர்களால் சுதந்திரத்துக்குப்பின் (1948) அந்த குடியுரிமை பறிக்கப்படட்டு பின்னர், 1977க்கு பின்னர் இழந்த குடியுரிமையை படிப்படியாக, கட்டங்கட்டமாக மீளப் பெற்று இன்று தங்களை இலங்கை நாட்டின் பிரஜையாக மீண்டும் மீண்டும் வலியுறுத்தி இறுகத் தக்கவைத்துக் கொள்ள பிரயத்தனப்படுவோர் எனவும் கொள்ளலாம்.

இதுதான் இந்த இலங்கையில் வாழும் தமிழரிடையே உள்ள அடிப்படை வெறுபாடு எனினும் அதன் வெறுபாட்டு குணாம்சங்களை அட்டவணையிட்டும் பார்க்கலாம்.

இந்த பத்துவித வேறுபாட்டு குணாம்சங்களையும் கடந்து இன்னும் ஆழமான பார்வையை செலுத்தலாம். மேற்சொன்னவை அடிப்படையானவை. எனவே அடிப்படையில் “இலங்கைத் தமிழருக்கும்” “மலையகத்தமிழருக்கு”மான வேறுபாடு தங்களது அடிப்படை அரசியல் கோரிக்கையில் அதாவது இலங்கையில் இருந்து பிரிந்து போகுதல் (சுயநிர்ணய உரிமை Self Determination) இலங்கையராக ஸ்திரப்படுத்துதல் (Stabilization) என்பதில் இருந்து எழுகின்றது.

(தொடரும்)

மல்லியப்புசந்தி திலகர்

**ஒரு தரப்பு இலங்கையில் தம்மை நிலைப்படுத்திக்கொள்ள விளைய அடுத்த தரப்பு இலங்கையில் இருந்து பிரிந்துபோவதை கொள்கையாகக் கொண்டுள்ளது.**

| | இலங்கைத் (ஈழத்) தமிழர் | மலையகத் தமிழர் |
|---|---|---|
| 01 | இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள் | இந்தியாவை பூர்வீகமாகக் கொண்டவர்கள் |
| 02 | இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இலங்கைப் பாரம்பரியத்தை கொண்டவர்கள் | இருநூற்றாண்டு கால இலங்கை பாரம்பரியத்தை கொண்டவர்கள் |
| 03 | இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைக் அடிப்படையாகக் கொண்டு வாழ்பவர்கள் | இலங்கையின் மத்திய மலைநாட்டு பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு வாழ்பவர்கள் |
| 04 | பெரும்பாலும் நிலவுடமைச் சமூகத்தைச் சார்ந்தவர்கள் | பெரும்பாலும் தொழிலாளர்வர்க்கத்தை சார்ந்தவர்கள் |
| 05 | பொது சட்டத்துக்கு மேலாக ‘தேச வழமைச் சட்டம்’ எனும் வழக்காற்று சட்டத்திற்கு ஆட்பட்டவர்கள் | பொதுச் சட்டத்துக்குள்ளும் விசேட சட்ட ஏற்பாடுகளுக்கும் ஆட்பட்டவர்கள் உ-ம் 1948குடியுரிமை பறிப்புச் சட்டம் இந்தியன் பாகிஸ்த்தான் குடியுரிமைச் சட்டம் |
| 06 | தமிழ்மொழி பேச்சுவழக்கில் பாணர் பரம்பரை, இந்திய மலையாளப் பாரம்பரியச் சொற்பண்பு கலந்த தமிழ் உச்சரிப்பு பாணியும் கொண்டவர்கள். | தமிழ்மொழி பேச்சு வழக்கில் (இந்திய) தமிழ்நாட்டு (தென்) பாரம்பரிய சொற்கள் கலந்த உச்சரிப்பும், பாணியும் கொண்டவர்கள். |
| | | |
| 07 | இலங்கையில் ஆளும் வர்க்கத்துடன் தங்களை இலங்கை நாட்டில் வலுவான பிரஜைகளாக அல்லது அதிகாரமிக்கவர்களாக உறுதிப்படுத்த ஒப்பந்தங்களை செய்தவர்கள் உதாரணம்: பண்டா - செல்வா ஒப்பந்தம் டட்லி - செல்வா ஒப்பந்தம் ஜே.ஆர்- ராஜீவ் ஒப்பந்தம் ரணில் - பிரபாகரன் ஒப்பந்தம் | இலங்கையில் இருந்து வெளியேற அதாவது தாம் இலங்கையர் இல்லையெனும் நிலைக்குத் தள்ளப்பட்டு, இலங்கை அரசுடனான ஒப்பந்தங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள். உதாரணம்: பண்டாரநாயக்கா - பாஜ்பாய் ஒப்பந்தம் ஸ்ரீமா - சாஸ்திரி |
| 08 | தங்களது அரசியல் இருப்பை உறுதிப்படுத்த அரசியற் கட்சிகளையும், விடுதலை இயக்கங்களையும் கருவிகளாக கையாண்டவர்கள், கையாள்பவர்கள். | தங்களது அரசியல் தளத்தை தொழிற்சங்க பலத்தின் ஊடாக கட்டியெழுப்பியவர்கள், தக்க வைத்துக் கொண்டிருப்பவர்கள் |
| 09 | இலங்கையில் தனித்தேசிய இனமாக இருந்துக் கொண்டு அதிலிருந்து அடுத்த கட்டமாக ‘தனி நாடு’ கோரிக்கையை முன்வைத்தவர்கள் | இலங்கையின் தனித்தேசிய இனமாக தங்களை வளர்த்தெடுக்கும் அதேவேளை தங்களை ‘முழுமையான’ இலங்கை பிரஜையாக நிலை நிறுத்திக்கொள்ள சதா பிரயத்தனம் செய்து கொண்டிருப்பவர்கள். |
| 10 | ‘இலங்கைத் தமிழர்’ ‘ஈழத்தமிழர்’ ‘புலம்பெயர் தமிழர்’ என்ற மூன்று நிலையிலும் தங்களை தனிநாட்டு கோரிக்கையின்பால் இலங்கையிலிருந்து பிரிந்துசென்று ‘தமிழீழம்’ எனும் நாட்டுக்குரிய மக்களாக தம்மை அடையாளப்படுத்தும் (Identify) மனநிலையை கொண்டவர்கள் | கூலிகள், கள்ளத்தோணிகள், தோட்ட தொழிலாளர்கள், இந்திய வம்சாவளியினர், இந்தியத் தமிழர் என படிப்படியாக மாற்றம் பெற்று ‘மலையகத்தமிழர்’ எனும் தேசிய அடையாளத்துடன் இலங்கையர்களாக தம்மை நிலைப்படுத்தும் மனநிலையில் உள்ளவர்கள். |





# பட்டறிவு

## போராட்டமின்றிய வாழ்வு சத்தியப்பட்டதுண்டா?

“எதற்கெடுத்தாலும் போராட்டம் என்றால் தமிழ்நாடே சுடுகாடாகிவிடும்” ரஜினி சொன்ன இந்த வார்த்தை இன்று தமிழ் சமூகத்தில் முக்கிய பேசுபொருளாகியிருக்கிறது. அசுர பந்தாவுடன் அரசியலுக்கு வரும் ஒருவர் போராட்டம் என்பதன் பொருள் பற்றி கொண்டிருக்கிற விளக்கம் நம்மெல்லோரையும் விசனமடையச் செய்திருக்கிறது. சரி அதென்ன போராட்ட.ம்.

முதலில் போராட்டம் இன்றிய ஒரு வாழ்வு சாத்தியம் தானா? மனித இனம் தளைத்து நிற்பதற்கு போராட்டம் இன்று சாத்தியப்பட்டிருக்குமா? உலகில் வாழும் சகல உயிரினங்களும் போராடித் தான் தம்மைத் தற்காத்திருக்கின்றன. போராடித் தான் வளர்ச்சியுற்றிருக்கிறது. ஆதி மனித இனம் விலங்குகளிலிருந்து தற்காத்துக் கொள்ள மட்டுமன்றி தனது பசியை ஆற்றுவதற்கு வேட்டையாடுவதற்கும் சேர்த்து போராடித்தான் வாழ்க்கையை அமைத்துக்கொண்டுள்ளது. உலக உயிரினங்கள் அனைத்தின் பிறப்பும், ஆரம்பமும் போராட்டத்துடன் தான் இவ்வுலகுக்கு பிரவேசிக்கின்றன.

முடிவுறாப் போராட்டமே மனித வாழ்க்கையை வளர்ச்சிக்கு கொண்டுவந்துள்ளது. சமூக மாற்றமும் அப்படித்தான் நிகழ்ந்திருக்கிறது. மனித வாழ்க்கையை தகவமைத்துக்கொள்ள வழியேற்படுத்தித் தந்துள்ளது. போராட்டத்தின் பயனாகத்தான் மனிதகுலத்தின் இருப்பைத் தக்கவைக்க; முழுப் பரிணாம வளர்ச்சியிலும் கண்டுபிடிப்புகளை இடையறாத் தந்திருக்கின்றன.

விரும்பியோ விரும்பாமலோ நாம் போராட்டங்களின் பங்காளிகள். வாழ்க்கைப் பயணத்தின் அங்கம். போராட்டமே வாழ்க்கை வழிமுறை. அதுமனித இருப்புக்கு கொடுக்கப்படும் விலை. உலகில் சகல வெற்றிக்கும் போராட்டம் ஏதோ ஒரு வடிவத்தில் விலையாக கொடுக்கப்பட்டிருக்கும்.

எதிரியும் எதிரியின் வழிமுறையுமே நமது ஆயுதம் எது, போராட்ட வழிமுறை எவை என்பதைத் தீர்மானிக்கிறது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஆக்கிரமிப்புக்கு எதிராக காந்தியின் வழிமுறை அகிம்சை என்றால், சுபாஷ் சந்திரபோஸின் வழிமுறை ஆயுதவழிமுறையாக தெரிவதன் காரணம் விடுதலையை வென்றெடுப்பதற்கான அடிப்படை தந்திரோபாயம் பற்றிய இரு வேறு வழிமுறைகள். இந்திய விடுதலைக்கு இந்த இரண்டுக்குமே பங்குண்டு. போராட்டம் என்பது பல்வேறு வடிவங்களைக் கொண்டிருக்கிறது.

**‘போராட்டம் பற்றிய ரஜினியின் புரிதலும் வாழ்வுக்காகவே போராடிப் பழகிய மக்களின் புரிதலும் ஒன்றல்ல’**




“கல் எறிவது” பாலஸ்தீனத்தின் போராட்ட வடிவக் குறியீடாக ஆகியிருப்பது அவர்களுக்கு கல்லெறியத் தெரியும் என்பதால் அல்ல. அல்லது கல்லெறிந்து விடுதலையைப் பெற்றுவிடலாம் என்பதால் அல்ல. மாறாக சொந்த நிலம் சுற்றிலும் ஆக்கிரமிக்கப்பட்டு, போரை எதிர்கொள்ள



சகல ஆயுத விநியோக வழிகளும் மூடப்பட்ட நிலையில் சாமான்யர்களின் உச்சபட்ச ஆயுதம் கற்கள் மட்டும் தான் என்பதால் தான்.

பேரழிவை எதிர்த்துநிற்க கற்களை விட உச்சபட்ச ஆயுதம் இன்றிய சாமான்யர்களாக; எதிரியை எந்தளவும் எதிர்த்துநிற்கும் ஓர்மம் உள்ள மக்களாக அவர்கள் எப்போதோ ஆக்கப்பட்டுவிட்டார்கள்.

2014 ஆம் ஆண்டு நோர்வேயில் நிகழ்ந்த ஒரு இசைக்கச்சேரியொன்றின் போது மேடையில் தோன்றிய ஒரு இளம் சோடி அம்மேடையில் வைத்து பாலுறவு புரிந்தது. அந்தச் சம்பவம் அன்றே சகல செய்திகளிலும் இடத்தைப் பிடித்துக்கொண்டது. பொலிசாரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டதன் பின்னர் ஊடகங்கள் அவர்களிடம் ஏன் இப்படி செய்தீர்கள் என்று வினவினர்.

அவர்கள் இருவரும் சூழலியலாளர்கள். காடழிப்பு எதிரான தமது போராட்டத்தின் கவனயீர்ப்பு உத்தி என்றார்கள் அவர்கள். ஒருவகையில் அவர்களின் போராட்ட உத்தி கணிசமான அளவு வெற்றி பெற்றிருந்தது. அவர்களின் பின்னால் துரத்திய ஊடகங்களை, அவர்கள் காடழிப்பு பற்றிய கவன ஈர்ப்புக்கான பிரச்சாரத்திற்கு அதிகபட்சம் பயன்படுத்திக்கொண்டார்கள். சரி - பிழைக்கப்பால் அது அவர்களின் போராட்ட வடிவம்.

போராட்டத்தில் எத்தகைய வீரியத்தைப் பாய்ச்ச வேண்டும் என்பதை எதிரியே தீர்மானிக்கின்றான்.

“உனது ஆயுதத்தை எதிரியே தீர்மானிக்கிறான்” என்கிற சேகுவேராவின் வசனம் உலகப் பிரசித்தம் பெற்றது.

களங்கள் மாறுகின்றன, போராட்டத்தளபாடங்களும், போருக்கான நியாங்களும் மாறுகின்றன, போர் வடிவங்களும் மாறுகின்றன ஆனால் போர்கள் நின்றதில்லை. போர் உத்திகள் மாறிக்கொண்டு தான் இருக்கின்றன. போராட்டத்துக்கான அவசியம் நின்றுபோனதாக மனித வரலாற்றில் எங்கும் இருந்ததில்லை.

தனி மனித வாழ்க்கை தான் எத்தனை விதமான போராட்டங்களை எதிர்கொண்டு வருகிறது. போராட்டத்தின் களங்கள் தான் மாறுகின்றன. அதன் பண்பு, வடிவம், அளவு என்பன மாறக்கூடும் ஆனால் போராட்டம் இருந்துகொண்டுதான் இருகின்றது.

நீதியும், ஜனநாயகமும், சமத்துவமும் இருந்துவிட்டால் போராடுவதற்கு ஏது தேவை. ஆனால் மெய்யுலகு அதுவல்ல. இதைத் தான் மாவோ சே துங் “அனைத்து போராட்டங்களும் புரிந்து கொள்ளப்பட்டால், அற்புதங்கள் சாத்தியமாகும்” (Once all struggle is grasped, miracles are possible) என்பார்.

எதிர்த்துப் போரிடும் சக்திகள் விரும்பிப் போரை ஏற்றுக்கொண்டதில்லை. தமது இருப்புக்கு பாதகம் விளைகையில் போராடி எதிர்கொள்வதற்கு தள்ளப்படுகின்றன.

“தக்கன பிழைத்தல் அல்லன மடிதல்” என்பது ஒரு பிரபல்யக் கோட்பாடு. “இருப்புக்கான போராட்டம்” (Struggle for Existence) என்று டார்வின் வெளிப்படுத்திய கோட்பாடானது “தக்கன பிழைக்கும்” (The survival of the fittest) என்கிற தலைப்பில் அக்கருத்தாக்கம் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது. மனித இனம் பரிணாமமடைந்ததன் இரகசியமே இந்த விதி தான்.

தமது பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அரசாங்கத்தை தேர்ந்தெடுக்கின்றனர் மக்கள். அந்த அரசு மக்களைப் பாதுகாப்பதற்குப் பதில் மக்கள் விரோத சக்திகளை பாதுகாத்தால் மக்கள் எங்கு செல்வார்கள். அல்லது அரசே மக்கள் விரோத நடவடிக்கைளில் இறங்கினால் எங்கு போய்த்தான் முறையிடுவார்கள். மக்களின் நியாயமான கோரிக்கைகளை உதாசீனம் செய்தால், நிராகரித்தால், மறுத்தால் மக்களின் தெரிவு தான் என்ன? அரச இயந்திரமே அடக்குமுறையை நேரடியாக மேற்கொண்டால் மக்களின் தெரிவுதான் என்ன? கையறு நிலைக்கு தள்ளப்பட்ட பாதிக்கப்பட்ட தரப்பு தமக்கான நீதியை தேடிக்கொள்ளும் வழிதான் என்ன?

ஏற்றத்தாழ்வுள்ள சமூக அமைப்பில் சலுகை பெற்ற சக்திகளின் வாழ்வும் - அடக்கப்படும் மக்களின் வாழ்வும் ஒன்றல்ல. ரஜினியின் தேவையும் சாதாரண மக்களின் தேவையும் ஒன்றல்ல. ரஜினியின் போராட்டமும் மக்களின் போராட்டமும் ஒன்றல்ல. ஆக போராட்டம் பற்றிய ரஜினியின் புரிதலும் வாழ்வுக்காகவே போராடிப் பழகிய மக்களின் புரிதலும் ஒன்றல்ல.

**சமூக அநீதிகளுக்கு எதிரான விடயத்தில் ரஜினி பார்வையாளன், மக்கள் பங்காளர்**

மக்களின் போராட்டம் ரஜினிக்காவும் தான் என்கிற எளிய புரிதல் கூட ரஜினிக்கு இல்லை என்பது ரஜினியின் வர்க்கப் பார்வை. ஒடுக்கப்படும் மக்களின் நெஞ்சுறுதியை சீண்டிப்பார்த்து, கேலி செய்து அதிகார வர்க்கத்தை காப்பாற்றும் சொல்; அவரது “போராடாதே” என்கிற சொல். “போராட்டம்” என்பது ரஜினிக்கு என்னவாகவாவது இருக்கட்டும். மக்களுக்கு அது பொழுது போக்கல்ல. சுகமானதும் அல்ல.

சமூக அநீதிகளுக்கு எதிரான விடயத்தில் ரஜினி பார்வையாளன், மக்கள் பங்காளர். போராட்டம் என்பது எவரும் விரும்பி ஏற்றுக்கொண்டதல்ல. அவை திணிக்கப்பட்டவை. போராடியே வாழக் கற்றுக்கொண்ட மக்களுக்கு அதைப் புரிந்துகொள்வதில் எந்த மயக்கமும் இருக்காது. போராட்டத்துக்காகப் போராடும் நிலைக்கு தள்ளப்பட்டவர்கள் அம்மக்கள்.

போராட்டமின்றி மாற்றமில்லை, போராட்டமின்றி வாழ்க்கையில்லை

என்.சரவணன்



## நடந்தாய் வாழி களனிகங்கை...... அங்கம் - 05

# கீரைப்பயிர்களுக்கு பாலூட்டும் தாய்க்கு கோபம் வந்தால் என்ன நடக்கும்...?

”கீரை இல்லா ஊரும், கிழவன் இல்லா ஊரும் ஒன்றுதான்” என்று எமது முன்னோர்கள் சொல்வார்கள். கீரை ஆரோக்கியமான வாழ்வுக்கு உகந்தது. கிழவன் அனுபவங்களின் உறைவிடம்.

கீரைக்குப் பேசத்தெரியாது. ஆனால், உடலுக்கு ஆரோக்கியத்தையும் புத்துணர்ச்சியையும் நீண்ட ஆயுளையும், நல்ல நினைவாற்றலையும் தரும்! வயது முதிர்ந்த கிழவர், வாழ்க்கைப்பாதையில் தான் கற்றதையும் பெற்றதையும் படிப்பினையாக சொல்லி நல்வழி காட்டுவார்.

கிழவர்களை தாத்தா எனவும் கிழவிகளை பாட்டி என்றும் அழைப்பதுடன் எமது தமிழ் சமூகத்தில் மாத்திரமன்றி இலங்கையில் சிங்கள, இஸ்லாமிய சமூகத்தவர்கள் மத்தியில் மதிப்பிற்குரிய பெரியவர்கள் எனவும் கருதப்படுபவர்கள்.

அக்காலத்தில் பாட்டி வைத்தியம் மிகவும் புகழ்பெற்றிருந்தது. முக்கியமாக பாட்டிமார் இயற்கை மருத்துவத்தை எமக்கு அறிமுகப்படுத்தியவர்கள். மூலிகைகளின் மூலம் பல நோய்களை குணப்படுத்தியவர்கள்.

எனது அம்மாவின் அம்மாவாகிய எனது பாட்டி தையலம்மா, பாடசாலைக்கே செல்லாதவர். கையொப்பமும் இடத்தெரியாதவர். கைநாட்டில்தான் காலம் கடத்தியவர். ஆஸ்பத்திரி பக்கம் செல்லாதவர். அவ்வாறு சென்றிருந்தாலும் தனக்கு தெரிந்த நோயாளரை பார்த்து சுகம் விசாரிக்கத்தான் சென்றிருப்பார்.

பாட்டிவைத்தியத்திலும் கைதேர்ந்தவர். 95 வயது வரையிலும் வாழ்ந்தவர்.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையில் எங்கள் பாட்டி, மருத்துவம் செய்திருப்பதை அருகிலிருந்து பார்த்து வளர்ந்திருக்கின்றேன். வீட்டில் பாட்டி பல கீரைவகைகளை வளர்த்தார். கீரைகளின் பலன் பற்றி நீண்ட விரிவுரையாற்றக்கூடிய அறிவும் பெற்றிருந்தார்.

குப்பை மேட்டில் வளரும் தாவரமான குப்பைமேனி கீரையின் மகிமை, மருத்துவ குணம் பற்றியும் சொல்லியிருக்கிறார்.

இலங்கை தலைநகரைப் பொறுத்தவரையில் களனி கங்கைக்கரைகளில்தான் கீரைவகைகள் பெருமளவில் பயிரிடப்பட்டன. களனி கங்கையின் தண்ணீரை நம்பியே பல ஏழைக் குடும்பங்கள் கீரை உற்பத்தியில் ஈடுபட்டு தமது வாழ்விற்கு ஆதாரம் தேடிவருகின்றன.

களனி கங்கை தீரத்தில் ஏராளமான கீரைத்தோட்டங்களை இன்றும் நீங்கள் காணமுடியும்.

தலைநகரின் பிரதேச சந்தைகளுக்கு மாத்திரமின்றி ஏனைய ஊர்களுக்கும் இங்கிருந்துதான் கீரை வகைகள் வருகின்றன.

தலைநகரில் இரத்மலானையில் அமைந்துள்ள சித்தாலேப ஆயுள்வேத மருத்துவமனைக்குச் சென்றிருக்கிறீர்களா...?

## களனி கங்கை தீரத்தின் கீரைத்தோட்டங்களின் கதை இது

அங்கு வந்து சிகிச்சைக்காக தங்கியிருக்கும் நோயாளர்களின் மதிய உணவில் வல்லாரைச்சம்பல் அல்லது வல்லாரை கடையல் நிச்சயம் இடம்பெறும். வல்லாரை நினைவாற்றலுக்கு மாத்திரமின்றி, ஆர்த்ரைட்டீஸ் போன்ற எலும்பு - நரம்பு சம்பந்தப்பட்ட நோய்களினதும் நிவாரணி என்பதனால்தான் அந்த மருத்துவனையில் வல்லாரைக்கீரைக்கு தனி மரியாதை தரப்படுகிறது. சிங்களத்தில் இதனை ”கொடுகொல” என்பர்.



பரிசுத்த வேதாகமம் பைபிளில் ஒரு வாசகம் இவ்வாறு வருகிறது:

”நல்ல நிலத்தை பண்படுத்தி அதில் ஒரு நல்ல பயிரின் விதையை விதைத்தால், அந்த விதை முப்பதாகவும், அறுபதாகவும், நூறாகவும் பெருகிப் பலன் கொடுக்கும். அதேபோன்று நல்ல எண்ணங்களை மனதில் விதைத்தால், அது பலருக்கும் பலனளிப்பதோடு இறைவனுடைய நல்லாசிகளும் கிடைக்கும். ”

எமது முன்னோர்கள் விஞ்ஞான தொழில் நுட்பத்திற்கு முற்பட்ட காலத்திலேயே நிலத்தில் நெல் முதல் பல்வேறுவகைப்பட்ட தானியங்களையும் கீரை வகைகளையும் பயிரிட்டு தத்தம் நாட்டு மக்களுக்கும் பொருளாதாரத்திற்கும் வளம் சேர்த்தார்கள். ஆரோக்கியத்தை பேணிவந்தார்கள்.

சமகாலத்தில் மக்கள் விரைவு உணவு (Fast Food Culture) கலாசாரத்திற்கு அடிமையாகி ஆரோக்கியத்தை கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால் நோயுற்று ஆயுளையும் குறைத்துக்கொள்கிறார்கள்.

இலங்கையில் களனி கங்கை ஓடிக்கொண்டிருக்கும் களனி பிரதேசத்தை சுற்றியிருக்கும் கொகிலவத்தை, மீதொட்டமுல்லை, கொலன்னாவ, ஊறுகொடவத்தை, பேலியாகொடை முதலான இடங்களில் ஏராளமான கீரைத்தோட்டங்களை பார்த்திருப்பீர்கள். இந்தப் பயிர்களை நம்பியும் அவற்றுக்குத் தேவைப்படும் களனி கங்கையின் நீரை நம்பியும் பல ஏழைக்குடும்பங்கள் வாழ்கின்றன.

அந்தக்கீரைத்தோட்டங்களுக்கு பாலூற்றும் தாயாகவும் விளங்குபவள் இந்த கல்யாணி என்ற களனி! இந்தத்தாய்க்கும் கோபம் வந்தால், வெள்ளமும் வரும். தான் பாலூற்றி வளர்த்த கீரைகளையும் சேதப்படுத்திவிடுவாள்!
கொகில வத்தை என்ற பெயரின் ரிஷிமூலமே கொகில என்ற பயிர்தான்.

கொகில கீரை, கொகில கிழங்கு முதலானவற்றுக்கும் சில மருத்துவ சிகிச்சைக்குரிய குணங்கள் இருக்கின்றன. கொகிலவத்தை பிரதேசத்திலிருந்து ஒரு சிங்களப் பத்திரிகையும் 1978 -1983 காலப்பகுதியில் வெளியானது.

அங்கு களனி கங்கை கரையோரத்தில்தான் மக்கள் விடுதலை முன்னணியின் பத்திரிகை அலுவலகம் இயங்கியது. அங்கிருந்து, நியமுவா, செஞ்சக்தி, ரது பலய, Red Power முதலான பத்திரிகைகளை மக்கள் விடுதலை முன்னணி, 1983 இல் அன்றைய ஜே.ஆரின் அரசினால் தடைசெய்யப்படும் வரையில் வெளியிட்டது. அங்கிருந்த சில தோழர்களும் கொல்லப்பட்டு, இதே களனி கங்கையில்தான் வீசப்பட்டனர். எனவே களனி கங்கை வளமும் தந்துள்ளது, துயரத்தையும் பகிர்ந்துள்ளது.

**‘நல்ல நிலத்தை பண்படுத்தி அதில் ஒரு நல்ல பயிரின் விதையை விதைத்தால், அந்த விதை முப்பதாகவும், அறுபதாகவும், நூறாகவும் பெருகிப் பலன் கொடுக்கும்’’ - வேதாகமம்**

இந்தப்பதிவை சமகாலத்தில் இலங்கையில் பல பகுதிகள் வெள்ள அநர்த்தத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் பின்னணியில் எழுதுகின்றோம். கடும் மழையின் காரணத்தால் நாட்டில் 19 மாவட்டங்கள் வெள்ளத்தினாலும் மண்சரிவுகளினாலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. ஒரு இலட்சத்து முப்பதினாயிரம் பேர்வரையில் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் பலர் நீரில் மூழ்கி இறந்துள்ளதாகவும் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

மனிதர்களுக்கு கோபம் வந்தால் என்ன நடக்கும் என்பது தெரியும்! இயற்கைக்கு கோபம் வந்தால் அது விளைவிக்கும் பேரனர்த்தங்கள்தான் சொல்லும். நதிகள் எப்போதும் போன்று மலைகளிலிருந்து ஊற்றெடுத்துக்கொண்டுதானிருக்கும். காலநிலை மாறும்போது, வர்ணபகவான் அள்ளிக்கொடுப்பது மழையைத்தான். அந்த மழை நிலத்திலும் நதிகளிலும் தழுவும்போது வெள்ளப்பெருக்கு தோன்றும். நதிகளின் நீர்மட்டம் உயர்ந்து ஊருக்குள் வந்து ஊர்மக்களை துரத்தியடிக்கும். எமது தேசத்தில் இந்த அனர்த்தங்கள் காலத்துக்கு காலம் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன.

வெள்ளம் பெருகினால், மக்களுக்கு மட்டுமல்ல, நதிக்கரையை அண்டியிருக்கும் வயல்கள், தோட்ட நிலங்கள், கீரைத்தோட்டங்கள் யாவும் நீரில் மூழ்கிவிடும்.

இந்தப்பதிவை எழுதிக்கொண்டிருக்கும் வேளையில் களனி கங்கையில் நீர்மட்டம் குறைந்துகொண்டு வருகிறது என்ற செய்தி கிடைத்துள்ளது. எனினும் பாதிக்கப்படும் மக்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகள் விடயத்திலும்

ரஸஞானி




குழறுபடிகளுக்கும் குறைவில்லை.

முள்ளங்கி, பொன்னாங்கன்னி, வல்லாரை, சிறுகுறிஞ்சா, அகத்தி, தூதுவளை, பசளி, முளைக்கீரை, கொத்தமல்லி கீரை, புதினா, சிறுகீரை, முருங்கைக்கீரை, முடக்கத்தான் கீரை, கற்பூரவல்லி, வெந்தயக்கீரை, மனைத்தக்காளிக்கீரை, வல்லாரை இவ்வாறு கீரைவகைகளில் ஏராளமுண்டு.

ஒவ்வொரு கீரைக்கும் வெவ்வேறு விதமான நோய் நிவாரணக்குணங்கள் இருக்கின்றன. இந்தப் பூவலகில் வாழும் மாந்தர்களுக்கு எத்தனையோ இயல்புகள் இருப்பதுபோன்று, கீரைவகைகளுக்கும் எத்தனையோ இயல்புகள் இருக்கின்றன.

எந்தக்கீரை எதற்கு நல்லது, எதற்குத்தீயது என்ற உண்மையையும் எமது முன்னோர்கள்தான் ஆய்வுசெய்து சொல்லியிருக்கிறார்கள்.

மழைக்காலங்களில் நதிகள் அகன்று விரிந்து ஓடுவதற்கேற்ற பிரதேசங்கள் மட்டுப்படுத்தப்படல், சட்டவிரோத கட்டிடங்கள் அமைத்தல், குப்பைகளையும் கழிவுப்பொருட்களையும் நதிகளில் வீசுதல், வடிகாலமைப்பின் சீர்கேடுகள் என்பனவே வெள்ளப்பெருக்கிற்கு காரணம். அத்துடன் தாழ்நிலப்பிரதேசங்களில் கட்டிடங்கள் வீடுகள் அமைத்தல், நதிநீர்செல்லவேண்டிய இடங்களில் வெள்ளம்தான் பெருகும். அதனால் அந்தக்கட்டிடங்களும் வீடுகளும் மூழ்கும்.

எனவே ஓடும் கங்கைகளுக்கு சினமூட்டுபவர்கள் மக்கள்தான்.

கங்கைகளை போற்றுவோம். எங்கள் முன்னோர்களை கொண்டாடுவோம்.

(தொடரும்)




# அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்) பகுதி 05

1962ல் புதிதாக ஏற்படுத்தப்பெற்ற அம்பாறை மாவட்டத்தில் சிங்களவர்கள் அம்பாறை தேர்தல் தொகுதியிலிருந்து ஒரு அரசியல் பிரதிநிதித்துவத்தையும் முஸ்லிம்கள் கல்முனை, நிந்தவூர், பொத்துவில் ஆகிய தொகுதிகளிலிருந்து மூன்று அரசியல் பிரதிகளையும் கொண்டிருக்க, அம்பாறை மாவட்டத் தமிழர்களோ தங்களுக்கென




ஓர் அரசியல் பிரதிநிதியற்ற அரசியல் அநாதைகள் ஆக்கப்பெற்றனர். இந்த நிலைமை 1977 வரை நீடித்தது. இதனால் “அம்பாறை மாவட்டத் தமிழர்கள்“ நாட்டின் ஏனைய பகுதி மக்களுடனும் அம்பாறை மாவட்டத்தின் ஏனைய சமூகத்தினருடனும் ஒப்பிடுகையில் சமூக பொருளாதார அரசியல் வளர்ச்சிப் போக்கில் சுமார் 30 வருடங்கள் பின்தங்கியவர்களானார்கள்.

இந்த 30 வருட (1947-1977) காலத்தில் தேர்தல் தொகுதி எல்லைகள் மீள் நிர்ணயத்தின் போது மட்டுமல்ல அவ்வப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கத்தினால் நிருவாகச் சீர்திருத்தங்களும் உள்ளூராட்சிச் சீர்திருத்தங்களும் அறிமுகம் செய்யப்பெற்று, அவற்றிற்கேற்ப நிருவாக மற்றும் உள்ளூராட்சி அலகுகளுக்கான எல்லைகள் நிர்ணயம் செய்யப்பெற்ற வேளைகளிலும் உள்ளூராட்சி சபைகள் தரமுயர்த்தப்பட்ட வேளைகளிலும் அம்றை மாவட்டத் தமிழர்களின் சமூக பொருளாதார அரசியல் அபிலாஷைகள் கவனத்தில் கொள்ளப்பெறாமல் அவர்களுக்குத் தொடர்ந்து பாரபட்சமே இழைக்கப்பெற்றது. இப்பிரதேச முஸ்லிம் அரசியல்வாதிகளினால் திட்டமிட்டு இழைக்கப்பெற்ற இப்பாரபட்சங்களை தமிழரசுக்கட்சி “சும்மா“ பார்த்துக்கொண்டிருந்தது.



இந்த 30 வருட காலத்தில் இழைக்கப்பெற்ற பாரபட்சங்களினால் விளைந்த தாக்கங்களின் பாதகமான பலனை இன்றும் கூட அம்பாறை மாவட்டத் தமிழர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவ்வப்போது திட்டமிட்டு ஏற்படுத்தப்பெற்ற தமிழ்-முஸ்லிம் இனக் கலவரங்களினாலும் அம்பாறை மாவட்டத் தமிழர்கள் பாதிப்புக்குள்ளாகி நிர்க்கதியாகி நின்ற வேளைகளிலெல்லாம் தமிழரசுக்கட்சித் தலைவர்கள் இப்பகுதிக்கு விஜயம் செய்து பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிடம் தமிழ்-முஸ்லிம் ஒற்றுமையை உதட்டளவில் ஓதிவிட்டுச் சென்றார்களேயொழிய, பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பரிகாரம் பெற்றுக் கொடுக்கவோ அல்லது அம்மக்களின் அடிப்படைப் பிச்சினைகளுக்குத் தீர்வுகாணவோ அவர்களுக்கு இயலாது போயிற்று. அதற்கான அரசியல் வல்லமையும் தமிழரசுக் கட்சியிடம் இருக்கவில்லை. அதற்கான அக்கறையும் யாழ் மேலாதிக்க சிந்தனை கொண்ட தமிழரசுக் கட்சித் தலைவர்களிடம் இருக்கவில்லை. அவர்கள் வெறுமனே பாராளுமன்றப் பதவி அரசியலுக்குத் தேவையான கட்சி அரசியலுக்குத்தான்

தம்பியப்பா கோபாலகிருஸ்ணண்

முக்கியத்துவம் அளித்தார்கள். இன்றும் அப்போக்குத்தான் தொடர்கிறது.

### 1976 ல் தேர்தல் தொகுதி எல்லைகள் மீள் நிர்ணயம்.

சுதந்திர இலங்கையில் 30 வருடங்களாக அம்பாறை மாவட்டத் தமிழர்கள் தங்களுக்கென்று தங்களால் தெரிவு செய்யப்பெற்ற தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரைக் கொண்டிராது அரசியல் அனாதைகளாக வாழ்ந்த பரிதாபமான நிலைமை 1976 இல் அரசினால் நியமிக்கப்பெற்ற மொரகொட தலைமையிலான தேர்தல் தொகுதி எல்லைகள் மீள் நிர்ணய ஆணைக்குழுவினால் கவனத்தில் எடுக்கப்பெற்று அதன் காரணமாக 1976 இல் ஏற்படுத்தப்பெற்ற புதிய பொத்துவில் தொகுதி முஸ்லிம் ஒருவரும் தமிழர் ஒருவரும் தெரிவு செய்யப்பெறும் நோக்குடன் “இரட்டை அங்கத்தவர் தொகுதி“ யாக்கப்பெற்றது.

அம்பாறை மாவட்டத் தமிழர்களிடையேகுறைக்கப்பெற்றது. வடக்கு மாகாணத்தில் விளங்கிய பொது அமைப்புக்கள்பாராளுமன்ற உறுப்பினர்களின் மூலம் மேற்படி ஆணைக்குழுவிற்குச்எண்ணிக்கையைக் கூட்டுவதற்காக கிழக்கு சமர்ப்பிக்கப்பெற்ற யோசனைகளுக்கானமாகாணத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களின் மகஜர்களைப் புள்ளி விபரங்களுடனும்எண்ணிக்கையக் குறைப்பதுத் வரை படங்களுடனும் தயாரித்துக் கொடுத்துதமிழரசுக்கட்சி துணை போனது. இதுவும் உதவுவதில் இக்கட்டுரை ஆசிரியரும்யாழ் மேலாதிக்க சிந்தனைகளின் பங்களிப்புச் செய்திருந்தார். அவருடன்வெளிப்பாடே ஆகும். இந்த விடயத்தை இணைந்து அக்ரைப்பற்றைச் சேர்ந்தமேலும் விளங்கப்படுத்துதல் இக்கட்டத்தில் வீடமைப்பு அதிகாரசபைப் பொறியியலாளர் காலஞ்சென்ற வே.சண்முகநாதன் அவர்களும் பணியாற்றிருந்தார். தம்பிலுவிலைச் சேர்ந்தவரும் முன்னைய பொத்துவில் தொகுதியில் இரு தடவைகள் பாராளுமன்றத் தேர்தலில் சுயேச்சையாக போட்டியிட்டு வெற்றிவாய்ப்பை இழந்தவருமான அக்ரைப்பற்று தெற்கு (திருக்கோவில்) கிராமசபையின் முன்னாள் தலைவர் காலஞ்சென்ற என்.தர்மலிங்கம் மற்றும் காரைதீவு கிராம சபையின் முன்னாள் தலைவர்களான காலஞ்சென்ற வினாயகமூர்த்தி, பரசுராமன் ஆகியோரும் அப்போது காரைதீவில் செயற்பட காலஞ்சென்ற (பெரிய) கணபதிப்பிள்ளை அதிபர் அவர்களின் தலைமையிலான “அம்பாறை மாவட்டத் தமிழர் மகாசபை“ யும் இது விடயமாக எடுத்துக்கொண்ட




அக்கறையும் மேற்கொண்ட உழைப்பும்பொருத்தமென எண்ணுகிறேன். பதிவுசெய்யப்பெற வேண்டியவைகளாகும்.

1972 குயரசு அரசியலமைப்பின் தமிழரசுக்கட்சியை மட்டுமே நம்பியிராத,அறிமுகத்தைத் தொடர்ந்து அகில தமிழரசுக்கட்சியின் செயற்பாடுகளின்இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் மீது விமர்சனப் பார்வை கொண்டஇலங்கைத் தமிழரசுக் கட்சியும் இணைந்து அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சமூக“தமிழர் கூட்டணி“ ஆகிப் பின் 1976 இல் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்களின்“தமிழர் விடுதலைக் கூட்டணி“ எனும் உழைப்பினாலேயே இப்புதிய பொத்துவில்அரசியல் கட்சியாகப் பதிவ செய்து தொகுதி முஸ்லிம் ஒருவரும் தமிழர்கொண்டன. 1970 இல் நடைபெற்ற ஒருவரும் தெரிவுசெய்யப்பெறும்பாராளுமன்றத் தேர்தலில் வவுனியாத் வகையில் இரட்டை அங்கத்தவர் தொகுதிதொகுதியில் தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த ஆக்கப்பெற்றது. எக்ஸ்.எம்.செல்லத்தம்பு வெற்றியீட்டித் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் ஆனால் தமிழரசுக் கட்சியோதா.சிவசிதம்பரம் தோல்வியுற்றிருந்தார். பொத்துவில் தொகுதியை இரட்டைஇப்போது தமிழ் காங்கிரசும் தமிழரசுக் அங்கத்தவர் தொகுதியாக ஆக்கிகட்சியும் இணைந்து தமிழர் விடுதலைக் அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்குகூட்டணி உருவாகியிருந்ததால் அடுத்து பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் பெற்றுக்வரப்போகின்ற 1977ம் ஆண்டுப் பாராளுமன்றப் கொடுப்பதற்காகவே திருகோணமலைபொதுத்தேர்தலில் வவுனியாத் தொகுதிக்கான மாவட்டத்தில் புதிதாக 1976 இல் “சேருவில“தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் எனும் சிங்களத் தொகுதியொன்றுநியமனத்தைத் தமிழ்க் காங்கிரசைச் சேர்ந்த உருவாகத் தாம் விட்டுக்கொடுத்ததாகத்தா.சிதசிதம்பரம் அவர்களுக்கு வழங்குவதாக கதையளந்தது. வழக்கமாகத்அல்லதுதமிழரசுக்கட்சியைச் சேர்ந்த தமிழரசுக்கட்சி கையாளும் “தெருத்எஸ்.எம்.செல்லத்தம்புவிற்கு வழங்குவதா தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்குஎன்ற விடயத்தில் கட்சிக்குள் எழக்கூடிய உடைக்கும்“ தந்திரம்தான் இது. பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய மார்க்கமாகத் தமிழரசுக் கட்சி தேர்தல் தொகுதி உண்மையில் நடந்தது என்னவென்றால்எல்லைகள் மீள்நிர்ணய ஆணைக்குழுவிடம் வடமாகாணத்தில் வன்னிப் பகுதியில்புதிதாகத் தனியான “முல்லைத் தீவு“ “முல்லைத்தீவு“ எனும் புதிய தொகுதியைதொகுதியை யாசித்தது. முல்லைத்தீவுத் உருவாக்கி அதன் வேட்பாளராகத்தொகுதி 1976 இல் உருவாக்கப்பெற்றது. தங்கள் கட்சியைச் சேர்ந்த எக்ஸ்.எம்.இதன்படி 1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில் செல்லத்தம்புவை நிறுத்துவதற்காகவேவவுனியாத் தொகுதி வேட்பாளர் நியமனம் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலைதா.சிவசிதம்பரம் அவர்களுக்கும் முல்லைத் மாவட்டத்தில் “சேருவில“ எனும்தீவு தொகுதி வேட்பாளர் நியமனம் எக்ஸ். சிங்களத்தொகுதி உருவாகத்எம்.செல்லத்தம்புவிற்கும் தமிழர் விடுதலைக் தமிழரசுக்கட்சி விட்டுக்கொடுத்தது. இந்தகூட்டணியால் வழங்கப் பெற்றன. இதைப் நடைமுறையின் போது ஏற்கனவே தமிழர்பெற்றுக் கொள்வதற்காகத்தான் தமிழரசுக் ஒருவரும் முஸ்லிம் ஒருவரும் தெரிவுகட்சி திருகோணமலை மாவட்டத்தில் செய்யப்படும் வகையில் 1959 இல் இரட்டைபுதிதாகச் “சேருவில“ எனும் சிங்களப் அங்கத்தவர் தொகுதி ஆக்கப்பெற்ற மூதூர்பெரும்பான்மைத் தொகுதி உருவாக விட்டுக் ர் தொகுதி 1976 இல் முஸ்லிம்களைப்கொடுத்ததே தவிர பொத்துவில் தொகுதியை பெரும்பான்மையாகக் கொண்ட ஒற்றைஇரட்டை அங்கத்தவர் தொகுதியாக்கி அங்கத்தவர் தொகுதியாக்கப் பெற்றது.அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்குத் இதனால் திருகோணமலை மாவட்டத்தில்தமிழ்ப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் முன்பு மூதூர் மற்றும் திருகோணமலைத்பெற்றுக் கொடுப்பதற்காக அல்ல. தமிழரசுக் தொகுதிகளிலிருந்து இரு தமிழ்ப் பாராளுன்றகட்சியின் இந்தத் “திருகுதாள“ அரசியலைக் உறுப்பினர்களைக் கொண்டிருந்த நிலைகாலம் தாழ்த்தி இப்போதாவது அம்பாறை மாறி திருகோணமலைத் தொகுதியிலிருந்துமாவட்டத் தமிழர்கள் புரிந்து கொள்ள மட்டும் ஒரேயொரு பிரதிநிதித்துவமேவேண்டும். கிடைக்கும் வகையில் எண்ணிக்கை

--தொடரும்--

# ‘அம்மான் கண்’



குளக்கோட்டனின் அரண்மனை பரபரப்புக்கு எப்போதும் பஞ்சமிருக்காது. அவன் எப்போதும் சுறுசுறுப்பாக இயங்கும் மன்னன் அன்றும் அப்படித்தான் எதற்காகவோ காத்துக் கொண்டிருந்தவனை வாயிற் காவலின் வரவு ஒரு சேதியைக் கொணர்ந்தது. புலவர் மதி மாறனார் வருகையை கூறி நின்றான் அவன்.
மன்னா என அழைத்த குரலோடு மாறனார் பாடத் தொடங்கினார்
“வரமுடைக் குளம் அமைத்த
வண்டமிழ் வேந்தே குடி முறை காக்கவே குவலயம் வந்தாய் திறமுடை உன் படை திசை தொறும் வெல்லும் உரமுடை நெஞ்சா உளமுற பணிந்தேன்”
எனப் பணிய மன்னன் தன் இருக்கையை விட்டு இறங்கி புலவரைப் பணிந்து நின்றான்.

“வந்த சேதி” என மன்னன் வினவ
“அரசே நான் கொட்டியாரத்தின் பல ஊர்களுக்கும் பயணம் செய்து வருகிறேன் செந்தமிழும் சுவையுமாய் செழித்திருக்கும் சேனையூர் முதல் பள்ளிக்குடியிருப்பு, கிளிவெட்டி இகங்கை வேலி இதிருக்கரசை, சீர் பூத்த





ஓவியம் சேனையூர் கிருஸ்ணா

தென் வெருகல், இசம்பூரணப் புலவர் வாழும் சம்பூர் என் பயணம் இனிதாய் அமைந்தது. உங்கள் கட்டளையேற்று அங்கெல்லாம் சென்று உங்கள் நிலத்தின் நீட்சியின் அழகை கண்டு வந்தேன்.
தம்பலகாமம் சென்றேன், எல்லாம் சிறப்பாகவே உள்ளன ஆனால்....“
“ஆனால்’ என நிறுத்தி விட்டீர்கள் தொடருங்கள் எதுவாக இருந்தாலும் மறைக்க வேண்டாம் “
“ஒரு நிறைவான இடத்தில் மறைவான சிக்கல் ஒன்று”
“என்ன என்ன” “நீங்கள் சதுர்வேதி மங்கலத்தை ஒட்டி நிர்மாணித்து வரும் அந்த பிரமாண்டமான குளம் வானுயர்ந்து நிற்கிறது ஆனால்”

“ஏன் புலவரே என் பொறுமையயை சோதிக்கிறீர்கள் நேற்று மாலையும் நான் அங்கு சென்றுதான் வந்தேன் எந்த பிரச்சினையும் இருந்ததாகத் தெரியவில்லையே”

“இன்று காலையில்தான் நானும் தம்பலகாமத்து புலவர் வாலனாரும் சென்று வந்தோம் அதிகாலையில் அந்த இடம் எவ்வளவு அழகாகாக இருந்தது தெரியுமா? பெருங் கடல் ஒன்றை பெயர்த்து அந்த இடத்தில் கொண்டு வைத்தது போல அழகு. சுற்றி வர இருக்கும் மலைத்தொடர், குன்றுகளுக்கு நிகராக நிமிர்ந்து நிற்கும் குளக்கட்டு, குளக்கட்டிலிருந்து பார்க்கும் போது பரந்திருக்கும் வயல்வெளிகளின் நீட்சி எல்லாம் உங்கள் பெருமையை பேசும் சாட்சிகளாய்”

“என்னைப் பாராட்ட வேண்டாம். சொல்ல வந்த விசயத்தை பீடிகையில்லாமல் சொல்லுங்கள் நீங்கள் எதையோ மறைக்க பார்க்கிறீர்கள்”

“இல்லை மன்னா எல்லாம் சிறப்பாகத்தான் உள்ளன நீர் வந்து மோதி அலையடிக்கிறது, நீர் வெளியேறும் பெருவாசல் இன்னமும் முடிக்க முடியாமல் வழுக்கிக் கொண்டு நிக்கிறது. இனி வரும் காலம் பெரும் மழைக்காலம் விரைவில் அந்தப் பணி முடிய வேண்டும். இல்லாவிட்டால் பெருவெள்ளமாய் உருவாகும் தண்ணீர் குளத்தையே அடித்துச் சென்று விடும் அபாயம் இருக்கிறது.“
“இன்று எல்லாம் முடிந்து விடும் நாளை பௌர்ணமியில் பெரு விழாவொன்றை செய்வதற்கான ஏற்பாடுகள் சதுர்வேதி மங்கலத்தில் நடைபெறுகின்றன “
“நாங்களும் எல்லாவற்றையும் பார்த்து விட்டுத்தான் வந்தோம் தம்பலகாமத்து ஆட்டக் கலைஞர்கள் உட்பட எல்லோரும் சதுர்வேத மங்கலத்து புறநகர் பகுதிகளில் கூடியிருக்கின்றனர்“
“எனக்கு இன்னமும் விளங்கவில்லை நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள் என்று“

“மன்னா நீங்கள் கலக்கமடைய வேண்டாம் குளத்து நீரேந்து பகுதியின் பிரதான வெளியேற்றும் வாயில் எத்தனை முறை கட்டினாலும் உடைப்பெடுத்து ஓடுகிறது என்ன செய்தும் அதனைத் தடுக்க முடியவில்லை நம்முடைய பொறியாளர்கள் எத்தனையோ முறை முயன்றும் தோற்றுப்போய் நிற்கிறார்கள் தாங்கள் வரப் பயந்து என்னை உங்களிடம் அனுப்பி வைத்திருக்கிறார்கள்”

“என்ன ஆச்சரியம் புலவரே நான் எத்தனையோ குளங்களை கட்டியிருக்கிறேன் எங்கும் இதுபோல் நட்டக்கவில்லை கொட்டியாரத்தில் எத்தனை குளங்கள் எல்லாம் ஒழுங்காகத்தானே இருந்தன என்ன இங்கு என்ன நடந்தது.”
“மன்னா பொறுமையாக கேளுங்கள் உடைப்பெடுக்கும் இடத்தில் ஒரு தலைச்சன் பிள்ளையை உயிரோடு வைத்துக் கட்டினால்தான் உடைப்பு அடைபடுமாம் அல்லாவிட்டால் நாம் எடுத்த இந்த பிரமாண்டமான முயற்சி பல்லாயிரம் மக்களுக்கான வாழ்வாதாரம் பாழ்பட்டு விடும்“

மன்னன் அதிர்ந்தான் தன்னிடம் பிள்ளையில்லையே என வருத்தம் கொண்டான் என்ன செய்வது என்று தெரியாமல் கலங்கி நின்றான்.



அரண்மனையில் தன் தங்கையின் மகனைத் தவிர வேறு எவரும் கிடையாது தங்கை மகன் தீரன் அவன் மீது பாசத்தைக் கொட்டி வளர்த்தவன் இவன்தான். எப்போதும் அம்மான்

**மருதடி மாறன்**

அம்மான் என்று இவன் பின்னால் வளைய வந்து செல்லம் பொழிபவன்.

“புலவரே இதற்கொரு வழி சொல்லுங்கள் நான் நிர்மாணித்த குளத்தை அழியவிடுவதா? முடியாது என்ன செய்தாவது மக்களின் வாழ்வாதாரத்துக்கு வழி செய்ய வேணும். என்னுயிரை என் உடலை அந்த இடத்தில் வைத்துக் கட்டச் சொல்லுங்கள் நானும் தலைச்சன் பிள்ளைதான்”
“மன்னா நீங்கள் தலைச்சன் பிள்ளைதான் மறுப்பதற்கில்லை ஆனால் இளம் பிள்ளை வேணும் என்பதாக சொல்கிறார்கள் என் மனமும் இதனை ஒப்பவில்லை ஒரு செய்தியாகத்தான் இதனை சொல்ல வந்தேன் மன்னா”

“என் வியளத்தை சதுர்வேதி மங்கலத்துக்கு அனுப்புங்கள் உரிய ஆயத்தங்களை செய்யும்படி, நாளை நான் உரிய உயரிய ஆயத்தங்களுடன் மாலை பௌர்ணமி நிலவு எரிக்கும் தருணம் அங்கு பிரசன்னமாவேன் என்றான்“

புலவரை அனுப்பி வைத்த மன்னன் நேராகத் தங்கையின் இருப்பிடம் நோக்கி நகர்ந்தான் எழிலி இன்முகத்துடன் வரவேற்றாள் எழிலியின் கைகளை பற்றிய மன்னன்;

“என் உயிரைக் கூட உனக்கு தருவேன், உன் உயிர் வேணும் எனக்கு”

“என்ன அண்ணா சொல்கிறீர்கள் உங்களுக்கில்லாத உயிர் எனக்கெதற்கு எப்போது வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள்”

“தங்கையே நான் உயிர் என்று சொன்னது உன் மகன் தீரனை”

“ம்ம்ம் என்ன போர்க்களத்துக்கு தானே, தாராளமாக கூட்டிப் போங்கள் அவன் என் மகன் அல்ல. உங்கள் மகன் நீங்கள்தானே அவனை வளர்த்தீர்கள்”

“தங்காய் இது போர்க்களத்தை விட ஆபத்தானது இங்கு போனால் திரும்ப முடியாது”

“எது ஆனாலும் உன் விருப்பம்“என்று நின்றாள் தங்கை எழிலி.

“நான் மக்களுக்காக அவர்கள் வாழ்வாதாரத்துக்காக உருவாக்கும் குளம் அதன் நீர் வழி அடைக்க அடைக்க உடைப்பெடுத்துக் கொண்டே இருக்கிறது. அந்த இடத்தில் ஒரு தலைச்சன் பிள்ளையை வைத்துக் கட்டினால்தான் அந்த பகுதி அடைபடுமாம் .. அதுதான்...“
“அண்ணா...“..என்ற அவள் அலறல் அந்த அரண்மனையையே அதிர வைத்தது. இரவு நேரமானதால் சற்று உறங்கிக் கிடந்த காவலர்களும் துடித்தெழுந்தனர். அண்ணா என அதிர்ந்த அவள்

“உங்கள் விருப்பம் உங்கள் பிள்ளை”

எனச் சொல்லி விட்டு ஓடி விட்டாள் தீரன் எதுவுமே அறியாதவனாய் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான் கோணைத் தென்றல் வீசும் அரண்மனை கடலின் நாதத்தில் கட்டுண்டு கிடக்க கட்டிலில் படுத்திருந்த மருமகனை அணைத்து முத்தமிட்டு தாலாட்டிசைத்தான் மன்னன்.

அடுத்த நாள் இருள் பரவி நிலவு எழும்பும் நேரம் குளத்துவாசல் மதகுக் கண்கள் அருகே மன்னன், புலவர், பொறியாளர்கள் அமைச்சர்கள், புரோகிதர்கள், எழிலி ஆடகசௌந்தரி என குறிப்பிட்ட சிலரே கூடியிருக்க, பொறியாளர்கள் தீரனை அணைக்கட்டில் வைக்க, பாய்ந்து மடைகளை உடைத்த நீர் அடங்க, ‘அம்மான் என் கண்’ எனும் தீரனின் குரல் ஒலிக்க, மன்னன் உட்பட எல்லோரும் அசைவற்று சிலையாய் உறைய, அமைதியானது அந்த குளத்தின் நீரேந்து வாயில்.
இன்றும் அந்த வழியால் செல்லும் போவோர் வருவோர் எல்லாம் ‘அம்மான் கண்’ என ஒலி கேட்குதா என சோகத்துடனே கடந்து செல்கின்றனர்..

(எங்கள் ஊரில் சேனையூர் கட்டைபறிச்சான் பகுதியில் காலம் காலமாக சொல்லப்பட்டு வரும் கர்ணபரம்பரைக் கதையை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டது)



# புத்தரும் நதி நீர்ப் பிரச்சினையும்

புத்தரைப் பற்றி நமக்குக் கிடைக்கும் செய்திகளில் பெரும்பாலானவை உண்மைக்கு மாறானவையே. அவர் ஒரு பரம நாத்திகர். ஆனால் அவர் திருமாலின் ஒன்பதவது அவதாரம் என்று கதை கட்டிக் கொண்டு இருப்பவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர் ஒரு முரணற்ற லோகாயதவாதி அதாவது பொருள் முதல்வாதி. ஆனால் அவர் பெயரில் கணக்கற்ற ஆன்மீகக் கதைகள் உலவிக் கொண்டு இருக்கின்றன.

புத்தர் துறவியாவார் என்று சோதிடர்கள் சொன்னதால், அவ்வாறு ஆகி விடாமல் தடுக்க அவரை வெளி உலகமே தெரியாமல் வளர்த்ததாக நமக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து இருக்கிறார்கள். அவர் எதேச்சையாக ஒரு நாள் ஒரு பிச்சைக்காரனைப் பார்த்ததாகவும், இன்னொரு நாள் நோயாளி ஒருவரைப் பார்த்ததாகவும், இன்னொரு நாள் மரணம் எய்திய ஒரு மனிதனைப் பார்த்ததாகவும் அவற்றின் மூலம் இவ்வுலகின் “நிலையாமைத்” தத்துவத்தைப் புரிந்து கொண்டதாகவும் நமக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து இருக்கிறார்கள்.



உலகின் நிலையாமையைக் கண்டு “மனம் கலங்கிய” அவர் இதற்கு விடை தேடும் பொருட்டுத் துறவு பூண்டார் என்றும், அதன் பின் ஒரு நாள் போதி (அரச) மரத்தடியில் திடீரென ஞானம் உதித்ததாகவும், தர்க்கவாதத்திற்குச் சற்றும் பொருத்தம் இல்லாத கதையை வலுக்கட்டாயமாக மக்களின் மனங்களில் திணித்து வைத்து இருக்கிறார்கள்.

ஆனால் அது உண்மையா? இல்லவே இல்லை. உண்மை இதற்கு முற்றிலும் மாறானது. புத்தர் துறவு பூண நேர்ந்த காரணத்தை அண்ணல் அம்பேத்கர் அவருடைய “புத்தமும் அவருடைய தம்மமும்” என்ற நூலில் தெளிவாக விளக்குகிறார்.
கபிலவஸ்து சாக்கியர்களின் தலைநகரம். அங்கே சாக்கிய மன்னர் சுத்தோதனரின் மகனாகப் பிறந்தவர் தான் புத்தர். .பெற்றோர்கள் அவருக்கு இட்ட பெயர் கவுதம சித்தார்த்தர். கவுதம சித்தார்த்தர் மற்றவர்களைப் போல் தான் வளர்க்கப்பட்டாரே ஒழிய வெளி உலகம் தெரியாமல் வளர்க்கப்படவில்லை.
அவருக்கு இருபது வயது நிரம்பிய உடன் சாக்கிய சங்கத்தில் உறுப்பினராக இணைக்கப்பட்டார். அவர் சங்கத்தில் சேர்க்கப்பட்டு எட்டு ஆண்டுகள் வரை பிரச்சினை இல்லாமல் காலம் சுமுகமாகவே சென்றது.



அவருடைய இருபத்து எட்டாவது வயதில் ஒரு பிரச்சினை தோன்றியது.
சாக்கிய நாடும் கோலிய நாடும் அண்டை நாடுகள். இரு நாடுகளும் விவசாயத்திற்கு ரோகினி ஆற்றின் நீரைப் பகிர்ந்து கொண்டு இருந்தன. நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில் இரு நாட்டினருக்கும் இடையே சச்சரவுகள் வருவதும் பேச்சு வார்த்தைகள் மூலமாகவோ சிறு சிறு மோதல்களினாலோ தீர்வு காண்பதும் வழக்கமான ஒன்றாக இருந்தது. அந்த ஆண்டு சச்சரவு மிகப் பெரிதாகி, போர் தொடுக்கும் அளவிற்கு முற்றி விட்டது. இதைப் பற்றி விவாதிக்க, படைத்தலைவர் சங்கத்தைக் கூட்டினார்.

நடந்த சச்சரவுகளை விளக்கி விட்டு இதைத் தீர்க்கக் கோலியர்கள் மீது படை எடுக்க வேண்டும் என்று கூறினார்.

ஆனால் கவுதம சித்தார்த்தரும் அவருடைய நண்பர்கள் சிலரும் போர் தேவை இல்லை என விவாதித்தனர். வினாவிற்கு விடையும், விடைக்கு மேல் வினாக்களுமாக விவாதம் தொடர்ந்தது. இறுதியில் கவுதம சித்தார்த்தரின் அறிவுக் கூர்மையான விவாதம் “கோலியர்களுக்குத் தண்ணீர் தர மறுப்பதும், அவர்கள் மீது போர் தொடுக்க முனைவதும் நியாயம் அல்ல” என்று உணர்த்தியது.

ஆனால் படைத் தலைவர் விவாதத்தைத் திசை திருப்பி வாக்கெடுப்பு நடத்த வேண்டினார். அவ்விதமே வாக்கெடுப்பும் நடத்தப்பட்டது. மிகப் பெரும்பான்மையான உறுப்பினர்கள் போர் நடத்தவே விரும்பினர். ஆனால் கவுதம் சித்தார்த்தரால் இம்முடிவை ஏற்க முடியவில்லை.

சங்கத்தின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் முடிவு செய்தால், மற்றவர்களும் அதன்படி நடக்க வேண்டும். அப்படி நடக்க மறுப்பவர்களுக்குத் தண்டனை அளிக்கச் சங்கத்திற்கு அதிகாரம் இருந்தது. சங்க விதிகளின்படி, சங்கத்தின் முடிவுக்குக் கட்டுப்பட மறுப்பவரின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யலாம்; அல்லது அவரை நாடு கடத்தலாம்; அல்லது அவருக்கு மரண தண்டனை அளிக்கலாம்.

ஆனால் கவுதம சித்தார்த்தர் விஷயத்தில் தண்டனையை நிறைவேற்றுவதில் ஒரு சிக்கல் இருந்தது. சாக்கிய நாடு கோசலப் பேரரசின் கீழ் ஒரு சிற்றரசாக இருந்தது. கவுதம சித்தார்த்தர் அறிவிலும் அழகிலும் பண்பிலும் மிகச் சிறந்த மனிதராக இருந்தார். அவருடைய ஆளுமை கோசலப் பேரரசரை மிகவும் கவர்ந்து இருந்தது. பேரரசர் கவுதமர் மேல் அளவு கடந்த அன்பு கொண்டிருந்தார். இப்பொழுது அவருக்குத் தண்டனை அளித்தால் பேரரசர் நிச்சயமாகத் தலையிடுவார். அப்படித் தலையிட்டால் சங்கத்தின் முடிவு தவறு என்று உணர்ந்து சங்கத்தின் மீதே நடவடிக்கை எடுக்கத் தயங்க மாட்டார்.

**இராமியா**

இக்கட்டில் மாட்டிக் கொண்ட படைத் தலைவர் கவுதம சித்தார்த்தரிடம் பேரரசரின் அன்பைப் பெற்ற ஆணவத்தில் சங்கத்தை எதிர்க்கிறாயா எனக் கோபமாகக் கேட்டார். கவுதம சித்தார்த்தர் தனக்கு அவ்வித ஆணவம் இல்லை என்றும், இந்த இக்கட்டில் இருந்து மீள்வதற்கான தீர்வைத் தானே தருவதாகவும் கூறினார். சங்க விதிகளின்படி நாடு கடத்துவது ஒரு தண்டனை ஆகும் என்று சுட்டிக் காட்டி, அதற்கு ஈடாகத் தானே துறவு பூண்டு நாடு விட்டுச் சென்று விடுவதாகக் கூறினார். சங்கத்தைப் பொறுத்த மட்டில் அவரை நாடு கடத்தியது போல் ஆகி விடும் என்றும், பேரரசர் சங்கத்தின் மேல் குறை காண முடியாது என்றும் விளக்கினார்.

இவ்வாறு கூறி, கவுதம சித்தார்த்தர் துறவறம் பூண்டு சென்றார் .புத்தரின் துறவறம் இந்தச் சூழ்நிலையில் தான் நிகழ்ந்ததே ஒழிய, பார்ப்பனர்கள் கட்டி விட்ட கதைகளின் போல் அல்ல.

நன்றி : இனியொரு

# தாதியை குறிவைத்த மாபாவி யார்?

(இஸ்ரேல் - பாலத்தீன எல்லையில் நடந்துவரும் சண்டையில் இஸ்ரேல் படைகள் சுட்டதில் காயமடைந்த ஒருவருக்கு மருத்துவ உதவி வழங்கச் சென்றபோது, கடந்த வெள்ளிக்கிழமை, இஸ்ரேலால் சுட்டுக் கொல்லப்பட்ட 21 வயதாகும் பெண் தன்னார்வலர் ரஸன் அல்-நஜாரின் இறுதிச் சடங்கில் ஆயிரக்கணக்கான பாலத்தீனர்கள் கலந்துகொண்டனர்.

சண்டை நடக்கும் பகுதியில் பணியாற்றும் மருத்துவப் பணியாளர்களின் பாதுகாப்பு குறித்து ஐ.நா கவலை தெரிவித்துள்ளது. இது குறித்த ஒரு பாலஸ்தீன அபிமானியின் கவிதை...)

---- மதுராப்புர,
கலைமகன் பைரூஸ் ---



இஸ்லாத்தையும் இஸ்லாமியரையும்
இல்லாதொழிப்பதற்காக
இஸ்ரேலிய மமதையோடு
இம்சிக்கின்றாய் காஸாவை...
அடி ரெபேக்கா நீயாடி - எம்
அடிநெஞ்சின் ஆழத்தில்
இஸ்லாத்தை ஏந்தி
இடர்படுவோர்க்கு நல்லன செய்த
பலஸ்தீன வீர மங்கை - தாதி
ரஸான் அல் நஜ்ஜாரை
குறிவைத்த மாபாவி?

ஷஹீதானாலும் பலஸ்தீனத்தின்
அசையாத நம்பிக்கைக் கொடியுடன்
எவ்விதப் பாரமுமற்ற - விலையற்ற

கவனுடன் வீரப் போர்செய்கின்ற
அல்லாஹ்வையே சதாவும்
நினைக்கின்ற
இன்ஸான்கள் வாழ்கின்ற பூமி
காஸா மண்!

அந்த மண்ணின் விடிவுக்காய்
உயிர்த் தியாகம் செய்கின்ற
உத்தமர்களின் காயங்களை
தன் காயமாய்க் கண்டு
செல்களின்
கனசத்தத்தையும்
காதுகளில் சேர்க்காமல்
பயங்கர பாலைவனத்தில்
கூடரங்களில் நின்று பணிபுரிந்த
வீரமங்கையடி ரஸான் அல்நஜ்ஜார்...!

அடி ரெபேக்கா...!
உன்னைப் போல் பதுங்கி
கோழைத்தனமாய் ஷஹீத் ரஸான்
ஒழித்துப் பணிபுரியவில்லையடி
பணத்துக்காக மனித நேயம்தொலைத்து
இரத்தக் காட்டேறியாக வலம்வரும்
உன்னைப் போல் இல்லையடி அவர்
எல்லாம் வல்ல இறைவனுக்காக
மறைத்தலின் அழகுடன்
அந்தக் கொடூர பூமியிலும்
நாளும் பணிபுரிந்த “டெஸட் குயின்”
எங்கள் ரஸான் அல் நஜ்ஜார்!

என்னதான் குரோதங்கள் என்றாலும்
பெண் பெண்ணுக்கு இரங்குவாள்

**மதுராப்புர, கலைமகன் பைரூஸ்**

நீ பெண்ணாயிருந்தால்தானே
அடுத்தவளின் துன்பம் உனக்குப் புரியும்.
ரஸான் “கிரேட் ரிட்டன்” னில் இறந்ததாக
உள்மனதில் ஆனந்தக் கூத்தாடுகிறாய்
கள்ளுண்ணும் பேடிகளுடன்....!

நிச்சயம் அல்லாஹ்வின் அரசுப் பூங்கா
ரஸான் அல்நஜ்ஜாருக்காகவும்
காத்துநிற்கும்...
அவன் தானே கூலிவழங்குவதாய்ச்
சொன்ன அருள்மிகு மாதத்தில்
நல்லியத்தை இம்சித்தாய்...

உலகினுக்கு உண்மைகளை உரத்துச்
சொல்லும்
ஊடகவியலாளனும் உதவிநல்கும்
தாதிமாரும்
உங்கள் குறியாக இருக்கலாம்... உங்கள்
இலக்குகள்
இலக்கு மாறி உங்களையே குறிபார்க்கும்
நாள்
மிக அருகிலேயே உங்களை அடையும்!
ரமழானின் பதினைந்தாம் பிறைபோன்ற
வதனம்

ரமழானில் ஈகைபுரியும் திருக்கரங்களில்
இரண்டு
இன்று ஜிஹாத் ஆனாலும்....
நோன்புடனும் நிலத்திற்காய் கல்லெறிய
இக்கணமும் காத்துநிற்கின்றவர்களை
அடி ரெபேக்கா உன்னால் எதுவும்
செய்யமுடியாது
மறைந்திருந்து சுடும் உன் துப்பாக்கி
ரவைகளுந்தான்
மானங்கெட்டவை என்பதைத்
தெரிந்துகொள்!

அமைதியை நேசிக்கின்ற பலஸ்தீனர்க்கு
இறைவா நிறைவான நிம்மதியைக் கொடு
இஸ்ரேலின் ஆட்டத்தை இந்தரமழானோடு
இல்லாதொழித்திடு எல்லாம் வல்லவனே!
இஸ்லாத்திற்காய் பலஸ்தீன
மண்ணுக்காய்

இளமை ததும்பும் வயதிலும்
தன்னுயிர் நீத்த
இனியதாதி ரஸான் அல் நஜ்ஜாருக்கு
இனிய சுவர்க்கம் நல்கிடு ரஹ்மானே...
இனிய சுவர்க்கம் நல்கிடு!


























# ஃபேஸ்புக்கில் காலா திரைப்படம்

ஃபேஸ்புக்கில் காலா திரைப்படத்தை நேரடி ஒளிபரப்பு செய்தவர் கைது செய்யப்பட்டுள்ளதாக, தமிழ் திரைப்பட தயாரிப்பாளர் சங்கத் தலைவர் விஷால் தெரிவித்துள்ளார்.


இந்தியாவில் வியாழக்கிழமை வெளியாகியுள்ள காலா திரைப்படம், நேற்று இரவு ஃபேஸ்புக்கில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது.

கிட்டத்தட்ட பாதிக்கும் மேற்பட்ட படம் லைவ் ஸ்ட்ரீமிங் செய்யப்பட்டிருந்த நிலையில், அந்த தகவலை கேட்டறிந்த படத்தின் தயாரிப்புக்குழு அதிர்ச்சியடைந்தது.

அது தொடர்பான தகவல்களும், பல்வேறு விமர்சனங்களும், கேள்விகளும் சமூக வலைத்தளங்களில் வெளிவந்த சூழலில், இது தொடர்பாக தயாரிப்பாளர் சங்கத் தலைவர் விஷால் தனது ட்விட்டர் வலைத்தளத்தில் விளக்கம் அளித்தார்.

அதில், காலா திரைப்படம் சிங்கப்பூரிலிருந்து நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டதாகவும், அதை செய்தவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.




Contact : WIMBLEDON ENGLISH SCHOOL,
414, Old Kalmunai Road, Manchanthoduwai, Batticaloa.
TP : 065 2245 880, 077 5047 775
Email : info@wimbledon.edu.lk
Web : www.wimbledon.edu.lk




**சிறுநீரகம் தேவை**

மட்டக்களப்பு நகரில் வசிக்கும், 42 வயதுடைய ஆண் சிறுநீரக பாதிப்பினை எதிர்கொண்டுள்ளார். அவருக்கு உடனடியாக சிறுநீரக மாற்று சிகிச்சை மேற்கொள்ள வேண்டுமென வைத்தியர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட நபருக்கு ஓ(O+) இரத்தவகையைச் சேர்ந்த சிறுநீரகமொன்றை வழங்கக்கூடிய நபரிடமிருந்து உதவி எதிர்பார்க்கப்படுகின்றது.

தொடார்புகளுக்கு : 0771837646



# திருக்கோவில் ஆடிவிழா - நானூறு ஆண்டுகளுக்கு முன்! (வரலாற்றில் திருக்கோவில் - பாகம் 01)



வி.துலாஞ்சனன்

"கோவில்" என்பது சைவரைப் பொறுத்தவரை மிகப்புனிதமான சொல். ஆனால், ஒரு ஆலயம் மாத்திரமன்றி, ஒரு ஊரே "திருக்கோவில்" என்று அழைக்கப்படும் பெருமையை, தமிழகத்தில் கூட எந்தவொரு தலமும் பெற்றதில்லை. அந்த விதத்தில் ஈழவளநாடும், கீழைக்கரையும் பெருமைப்படும் படி கோவில் கொண்ட இறைவன், திருக்கோவில் சித்திரவேலாயுதன். கிழக்கிலங்கையின் முதற்பெரும் தேசத்துக்கோவிலாகவும், புகழ்பெற்ற முருகத்தலமாகவும் விளங்குகின்ற திருக்கோவில் அருள்மிகு சித்திரவேலாயுத சுவாமி ஆலயம், எதிர்வரும் யூன் 25ஆம் திகதி அன்று திருக்குடமுழுக்குக் காண இருக்கின்றது. அதை முன்னிட்டு வெளியாகின்றது இந்த வரலாற்றுக் கட்டுரைத்தொடர்.

திருக்கோவில் இலங்கையின் மிகப்புராதனமான வழிபாட்டிடங்களில் ஒன்று. சரி, வெளிநாட்டிலிருந்து வந்த ஐரோப்பியர் திருக்கோவிலைப்பற்றி எங்காவது குறிப்பிட்டிருக்கிறார்களா? இன்றைக்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன், அக்கோவில் அவர்களால் எவ்வாறு அணுகப்பட்டிருக்கிறது? இப்படித் தேடிப்பார்த்தால் சுவாரசியம் கொஞ்சம் அதிகமாக இருக்கும். கூடவே, வரலாற்று ரீதியாக நம்பகத்தன்மை ஓரளவு கூடியதாகவும் இருக்கும், இல்லையா? அப்படியான குறிப்புகளை மாத்திரம் நாம் இத்தொடரில் ஆராய இருக்கிறோம்.

உண்மையில் திருக்கோவில் பற்றி ஐந்துக்கு மேற்பட்ட ஐரோப்பியர் குறிப்புகளும்,

## திருக்கோவில் பற்றி ஒல்லாந்துக் கடலோடி கூறும் கதை

பதினைந்துக்கு மேற்பட்ட வரைபடங்களும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. என்றாலும், வெள்ளையர் – ஐரோப்பியர் என்று சொல்லும் போது நாம் இன்னொரு விடயத்தை நினைவுகூரவேண்டி இருக்கிறது. அவர்கள் பிறசமயத்தவர்கள் என்பதால், சைவ சமயம் பற்றிய போதிய அறிமுகம் அவர்களுக்கு இருந்திருக்காது. உள்ளூர்ச் சமயங்கள் பற்றி அவர்கள் ஒரு உல்லாசப்பயணியின் பார்வையில் எழுதியிருப்பார்களே தவிர, ஒரு ஆய்வாளராகவோ, வரலாற்றறிஞராகவோ அல்ல. அவர்கள் கண்ட – கேட்ட விடயங்களில் சில, உள்ளூர்வாசிகளால் அவர்களுக்குத் தவறாகவும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கக்கூடும்.

இதைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு தான் அவர்களது குறிப்புகளை நாம் அணுக வேண்டும்.

1602ஆம் ஆண்டு ஒல்லாந்திலிருந்து கிழக்கு நாடுகளுக்கு வருகை தந்த ஒல்லான்டிஸ்சே சவுன் (Holländische zaun) எனும் கப்பலில் பயணித்தவர் "ஜொஹான் ஹேர்மன் வொன் ப்ரீ" (Johann Herman Von Bree) எனும் டச்சுப் பெருவணிகர். இந்தக் கடற்பயணத்திலேயே நோய்வாய்ப்பட்டு உயிர்நீத்த இவரது நாட்குறிப்பேடு இலங்கை தொடர்பான மிக முக்கியமான வரலாற்றுத் தகவல்களைக் கொண்டிருக்கின்றது. திருக்கோவில் பற்றி முதன்முறையாகக் குறிப்பிடும் ஐரோப்பியரும் இவர் தான்.

மட்டக்களப்புக்கு 1603இற்கு வருகை தந்த வொன் ப்ரீயின் கப்பல், மட்டக்களப்பை ஆண்ட வன்னிமையூடாக அப்போதைய கண்டி மன்னன் முதலாம் விமலதர்ம சூரியனைத் தொடர்பு கொண்டு தன் வணிக நோக்கங்களை நிறைவேற்றிக் கொண்டிருந்தது.

ஆனால் வொன் ப்ரீயின் குறிப்புகளில் மட்டக்களப்பு வன்னிமையும், "அரசன்" என்றே அழைக்கப்படுகிறான். மட்டக்களப்பு வன்னிமையையே அவர்கள் இலங்கையின் அரசன் என்று முதலில் கருதியதும், அவனை விட கண்டி மன்னன் பலம் வாய்ந்தவன் என்று அறிந்தபோது அவர்கள் அடைந்த அதிர்ச்சியும் இந்த ஒல்லாந்துக் குறிப்புகளில் விரிவாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. வேறு ஆதாரங்களின் மூலம் இந்த மட்டக்களப்பு வன்னிமையின் பெயர், தர்மசங்கரி அல்லது தர்மசிங்கத்துரை என்று தெரிகிறது. (இங்கு சொல்லப்படுகின்ற மட்டக்களப்பு, சம்மாந்துறைக்கு அண்மையில் இருந்த பழைய மட்டுநகர் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.)



தனது 1603ஆமாண்டு யூலை 13ஆம் திகதிய நாட்குறிப்பில், வொன் ப்ரீ, தமக்கு ஏற்பட்ட இக்கட்டான நிலைமை ஒன்றை எழுதுகின்றார். அவர்களது கப்பலும் படகொன்றும் அப்போது பொலிகாம நதியில் (பழுகாம ஆறு – மட்டக்களப்பு வாவி!) நங்கூரமிட்டிருந்தன. கண்டி மன்னன் விமலதர்மசூரியனிடம் தாங்கள் (ஒல்லாந்தர்) அனுப்பிய தூதர் திரும்பி வரவில்லை. அது தொடர்பான பதிலோ, கோரிய வணிகப்பொருட்களோ எதுவுமே கிடைக்கவில்லை. அவர்கள் உண்மையில் கண்டி மன்னனின் பதிலுக்காக மூன்று மாதங்களுக்கு மேலாக காத்திருந்தார்கள். எனவே அக்கப்பலை ஓட்டி வந்திருந்த ஒல்லாந்து துணைக் கடற்படைத் தளபதி பொறுமை இழந்திருந்தான். ஆனால், அன்றைக்கு மட்டக்களப்பிலிருந்து வந்திருந்த 'ஆராச்சி' ஒருவரை அவர்களால் சந்திக்கமுடிந்தது. அது தொடர்பாக வொன் ப்ரீ வருமாறு எழுதுகிறார்.

"மாத்துறை அல்லது அருகிலுள்ள வேறோர் இடத்திலிருந்து பாக்கு, கறுவா, மிளகு என்பன வருவதாகவும், அவற்றை எடுத்து வரும் இரு சம்பான்களுக்கு அனுமதிப்பத்திரங்களைத் தந்தால், அவற்றை ஒல்லாந்தர் எடுத்துக்கொள்ள அனுமதிப்போம் என்றும் ஆராச்சி தெரிவித்தார். அங்கிருந்து நான்கு அல்லது ஐந்து மைல் தெற்கேயுள்ள திரக்கோய் எனும் இடத்துக்கு மட்டக்களப்பு மன்னன் அடுத்த நாள் செல்லப்போவதாக அவர் மேலும் கூறினார்.

அங்குள்ள ஒரு கோவிலுக்கு அல்லது தெய்வத்துக்கு பெரிய விழா ஒன்று நடக்கப்போகின்றது. அந்த விழா முழுநிலவு வரை ஒன்பது, பத்து நாட்கள் நீடிக்கும். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று சுற்றிவர உள்ள எல்லா இடங்களிலுமிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு கூடுவார்கள். எனவே அந்த நாட்களில் எங்களுக்குக் பண்டமாற்றுக்காக வருகின்ற கோழியோ பழங்களோ மிகக்குறைவாகவே கிடைக்கும் அல்லது சிறிது கூட கிடைக்காமலும் போகலாம் என்பதைத் தெரிவிக்க விரும்புவதாக அவர் மேலும் குறிப்பிட்டார். இந்த வழக்கத்தை ஆண்டு தோறும் தீவின் வெவ்வேறு இடங்களில் அவர்கள் கடைப்பிடித்து வருகிறார்கள்."

சம்பான்கள் அதிக எண்ணிக்கையில் தங்கியிருந்த இடம் தான் சம்பாந்துறை - இன்றைய சம்மாந்துறை என்று முன்பே அறிந்திருப்பீர்கள். சம்பான் என்று அழைக்கப்பட்ட படகுகள் தான் அக்காலத்தில் இலங்கை வியாபாரத்தில் முக்கியமான பங்கு வகித்தன. ஆராச்சி என்பது, கண்டி இராசதானி காலத்தில் அரச அலுவலர் சிலருக்கு வழங்கப்பட்டிருந்த பட்டம். அந்தப் பட்டத்தைக் கொண்டிருந்த ஒருவர் மூலம், வணிக நோக்கில் வந்திருந்த ஒல்லாந்தர் இராஜதந்திர ரீதியில் கையாளப்பட்டிருக்கிறார்கள் என்பது வொன் ப்ரீயின் குறிப்பின் மூலம் புரிகின்றது. இனி திரக்கோய் என்று வொன் ப்ரீ குறிப்பிடுகின்ற இடம் திருக்கோயில் தான் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. மட்டக்களப்பிலிருந்து நான்கைந்து மைல் தெற்கே அது இருக்கின்றது என்கிறார் அவர். பழங்கால டச்சு மைல் ஒன்றின் அண்ணளவான தூரம், இன்றைய சர்வதேச அளவீட்டில் 5 – 6 கிமீ ஆகலாம். எனவே திருக்கோவில் மட்டக்களப்பிலிருந்து

20 – 30 கி.மீ தொலைவில் இருக்கின்றது. இங்கு சொல்லப்படும் மட்டக்களப்பு, சம்மாந்துறை என்பதை மீண்டுமொருமுறை நாம் நினைவில் கொள்ளவேண்டும். இன்றுள்ள பெருந்தெருக்களின் கணக்குப்படி, திருக்கோவிலுக்கும் சம்மாந்துறைக்குமான இடைத்தூரம் 35 கி.மீ.

முழுநிலவு வரை ஒன்பது பத்து நாட்கள் நடக்கப்போகும் விழாவுக்காக மட்டக்களப்பு மன்னர் அங்கு செல்கிறார். 1603ஆமாண்டு நாட்காட்டியைப் பார்த்தால், வொன் ப்ரீ இக்குறிப்பை எழுதும் யூலை 13இற்கு சரியாக பத்து நாட்கள் கழித்து யூலை 22ஆம் திகதி முழுநிலவு வருகின்றது. ஆடிப்பூரணை! திருக்கோவிலில் அப்போது தீர்த்த உற்சவம் இடம்பெற்றது ஆடிப்பூரணையில்!

ஆடிப்பூரணை இலங்கைப் பண்பாட்டில் இன்றும் மிக முக்கியமான நாளாக விளங்குவதைக் காணலாம்.

'தீவின் வெவ்வேறு இடங்களில் ஆண்டுதோறும் மக்கள் கடைப்பிடிப்பதாக' வொன் ப்ரீ குறிப்பது ஆடிப்பூரணை விழாவைத் தான் என்று கொள்ளமுடியும். கண்டிப் பெரகரா இடம்பெறுகின்ற சிங்கள நாட்காட்டியின் எசல போயா தினம் பெரும்பாலும் தமிழ் ஆடிப் பௌர்ணமியிலேயே வரும். கதிர்காமக் கந்தனின் ஆடிவேல் விழா முடிவடைவதும் அதே நாளில் தான். நானூறு ஆண்டுகளுக்கு முன், திருக்கோவிலிலும் அதுவே விழா நாளாக இருந்திருக்கிறது என்பதை இந்த ஒல்லாந்துக் குறிப்பு கூறுகின்றது.

ஆனால் இன்றைக்கு திருக்கோவிலின் தீர்த்தோற்சவம் இடம்பெறுவது ஆடி அமாவாசையில். இந்த உற்சவ தின மாற்றத்திற்கும் மட்டக்களப்புப் பூர்வ சரித்திரத்தில் வருகின்ற "ஆடகசௌந்தரி மாமாங்கத்தில் ஆண்டு தோறும் தீர்த்தமெடுத்துக் கொண்டு திருக்கோவில் சமுத்திரத்தில் கலந்து ஆடித்திங்கள் அமாவாசை அன்று ஸ்நானம் செய்து கொண்டாடி வந்தனள்" என்ற குறிப்புக்கும் தொடர்பு இருக்கக்கூடும்.

திருக்கோவில், மாமாங்கம் இரண்டின் திருவிழாக்களுமே கிழக்கிலங்கை மக்களின் பேச்சுவழக்கில் "தீர்த்தக்கரை" என்றே அறியப்படுகின்றது என்பதை நாம் இங்கு நினைவுகூரலாம்.

எது எப்படியோ, நானூறு ஆண்டுகளுக்கு முன், திருக்கோவிலின் ஆடிவேல் விழாவுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடினர் ; விழா முழுவதும் மட்டக்களப்பை ஆண்ட மன்னன் அங்கு சென்று தங்கியிருந்தான் ; அந்தப் பத்து நாட்களும் ஒல்லாந்தரின் வியாபாரம் வீழ்ச்சியைச் சந்தித்திருந்தது என்ற குறிப்புகள் மிக உறுதியாகச் சொல்வது ஒன்றையே. கிழக்கின் முதற்பெரும் தேசத்துக்கோவிலான திருக்கோவில், ஐரோப்பியர் கால் பதித்து விட்ட 16ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே இலங்கையில் – குறிப்பாக கிழக்கிலங்கையில் புகழ் பூத்திருந்த ஆலயம். அதற்கும் பல்லாண்டுகள் முன்பு அது எப்படி இருந்திருக்கும்? அதை நாமே கற்பனை பண்ணிப் பார்த்து புளகாங்கிதம் அடைந்து கொள்ள வேண்டியது தான்.



# மூதாதையரின் காலடிகள்

## கிள்ளைகள் விளையாட்டால் கிளிவெட்டியான தொல்லூர்





பாலசுகுமார் சேனையூர்
மேனாள் முதன்மையர்
கலை கலாசாரப் புலம்

"மாவலியாள் வந்து விழுந்து
வளைந்து வளம் சேர்க்கும்
வண்ணத் தமிழ் ஊர்

பொன்னாய் வயல் விளைய சென்னெல்
கதிரறுக்கும்
கிள்ளைகள் விளையாட்டால்
கிளிவெட்டியான தொல்லூர்

நெல்லும் நீள் வாழைத் தோட்டங்களும்
நன்னீரும் நல்ல மனிதர்களும்
முன்னோராய் தோன்றி மறைந்த
முது ஊர் கிளிவெட்டி

தயிரும் பாலும் தண்ணியாய்
இங்கிருக்க
ஆம்பல் பூக்கள் அழகுற வாய்
விரிக்கும்
தேம்பல் இல்லா வாழ்வு இவர்க்கு
திசையெங்கும் புகழ் படைத்த மாந்தர்
கொண்ட ஊர்"

கிளிவெட்டி ஈழத் தமிழ் நிலத்தில் பாரம்பரியம் மிக்க பழம் பெருமைகள் கொண்ட பெரு நிலப் பரப்பு. வயலும் வயல் சூழ்ந்த நிலத் திட்டும் மாவலியாறு சுற்றி வந்து வற்றாத நீர்வளத்தை எப்போதும் பொய்க்காத விவசாயத்தை வாழ்வாதாரமாக கொண்ட அழகிய கிராமம்.
மூன்று போகம் நெல் வேளாண்மையில் விளைந்து கிடக்கும் முன்னைய நாட்களில் கூட்டம் கூட்டமாக கிளிகள் வந்து நெற் கதிர்களை பறித்து சென்றாலும் அதை பற்றி கவலைப் படாதவர்களாய் மக்கள் இருந்ததாகவும் அதனால் கிளிகள் நெல்லை வெட்டி சாப்பிட்டு மகிழும் வளம் மிக்க இடம் என்பதால் கிளிவெட்டி எனப் பெயர் வந்ததாக இக் கிராமம் பற்றிய கதைகள் காலம் காலமாக பேசப் படுகின்றன.

மூதூரில் இருந்து பயணிக்கும் போது மட்டக்களப்பு செல்லும் வழியில் பத்து மைல் தொலைவில் இருபுறமும் வயல்கள் சூழபயணம் முழுவதிலும் பசுமையைசுவைக்க முடியும். கிழக்கே நீண்டிருக்கும் அல்லைக் குளமும் மேற்குப் புறமாக விரிந்திருக்கும் பழைய வரலாற்று தொல்லியல் சான்றுகள் மிக்க ஆதி அம்மன் கேணியும் கிளிவெட்டியின் புராதன பண்பாட்டை வெளிப்படுத்தி நிற்கின்றன.
குளக்கோட்டன் வகுத்தமைத்த நியமங்களின் படி விளை நிலங்களின் மூலம் கோணேசர் கோயிலுக்கு இங்கிருந்து நெல்லும் தாமரை மலர்களும் காணிக்கையாக செலுத்தப்பட்டதாக அறிய முடிகிறது.
சோழர் காலத்து வேலைக்காரப் படையினரின் ஒரு பகுதியினர் இங்கு குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டதாகவும் சில வரலாற்று செய்திகள் சொல்கின்றன.
ஆதியம்மன் கேணி தமிழ் தொல்லியல் சான்றுகள் நிறைந்த பகுதியாகும். அங்கு பழைய கோயிலின் இடி பாடுகளும் வாழ்விடங்களில் அழிந்த பகுதிகளும் உள்ளன.
கொட்டியாரத்துப் பிரதேசத்தில் மிகப் பழமையான மாரியம்மன் கோயில் இங்கேயே உள்ளது. இந்த கோயிலை சன்னியாசி ஒருவரே ஸ்தாபித்ததாக செவி வழிச் செய்திகள் கூறுகின்றன.

## சோழர் காலத்து வேலைக்காரப் படையினரின் ஒரு பகுதியினர் இங்கு குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டதாகவும் சில வரலாற்று செய்திகள் சொல்கின்றன

## கதிர்காம யாத்திரை செல்வோர் கிளிவெட்டியில் தங்கியே தங்கள் பயணத்தை தொடர்வர்

கதிர்காம யாத்திரை செல்வோர் கிளிவெட்டியில் தங்கியே தங்கள் பயணத்தை தொடர்வர். குறிப்பாக இந்த மாரியம்மன் கோயிலே அவர்கள் தங்கு மடமாக பாவித்து ஊரவரின் உபசரிப்பில் உண்டு மகிழ்ந்து யாத்திரையை தொடர்வர்.
வெருகல் கோயில் யாத்திரிகர்களின் களைப்பாறும் இடமாகமும் கிளிவெட்டி



நம் கிராமிய பண்பாட்டின் வழி பயணிக்கும் தமிழர் பண்பாட்டையும் கலாசார கூறுகளையும் சிறப்பாக காலம் காலமாக பின் பற்றும் ஒரு புராதன கிராமமாக வரலாற்றில் தடம் பதித்துள்ளது.

கிளிவெட்டி முன்னைய நாட்களில் எருமை மாட்டுப்பட்டிகள் நிறைந்த இடமாக இருந்தமையும் பல ஊர்களிலிருந்தும் குத்தகைக்கு வயல் வேலைக்காக இங்கிருந்து மாடுகளை எடுத்துச் செல்வதும் மரபாக இருந்தது. தம்பலகாமம் ஆலங்கேணி போன்ற இடங்களிலிருந்து மாடுகளை குத்தகைக்கு எடுத்துச் செல்வர்.
கிடா மாட்டு வளர்ப்போடு தொடர்புபட்ட நாயன்மார் வழிபாடு கிளிவெட்டியின் பழமை மிகு கலாச்சார கொண்டாட்டம். காலத்துக்கு காலம் நாயன்மார் வேள்வியும் அதனோடு தொடர்புபட்ட குழு மாடு பிடித்தலும் முக்கிய பண்பாட்டு மரபாக பேணப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.
பிரித்தானியர் காலத்திலும் கொட்டியார நிர்வாக முறைமையில் கிளிவெட்டி முக்கிய பங்கு வகித்ததாக ஊர் பெரியவர்களின் செவி வழி செய்திகள் தெரிவிக்கின்றன. இன்று தபால் கந்தோர் அமைத்துள்ள இடம் முன்னர் வன்னியனாரும் பிரித்தானிய அதிகாரிகளும் தங்கி இருந்த இடமாகப் பேசப்படுகிறது.
வேளாண்மையே பிரதான தொழில் என்பதால் விளைந்து ஓய்வு காலங்களில் நாட்டுக் கூத்துக்கள் அரங்கேற்றம் பெற்றதாகவும் பெரிய மரங்களில் சித்திரை மாதத்தில் ஊஞ்சல் பாடலோடு ஆடி மகிழ்ந்ததாகவும் அறிய முடிகிறது.
பெரியதொரு தாமரைப் பொய்கை கிளிவெட்டிக்கு அழகு சேர்த்ததாக வரலாற்று தகவல்கள் தெரிவிக்கின்றன. அந்த பொய்கையிலிருந்தே கோணேசர் கோயிலுக்கு தாமரைப் பூக்கள் காணிக்கையாக செலுத்தப்பட்டதை அறிய முடிகிறது.
ஊரை மறித்திருக்கும் ஆற்றுக்கு குறுக்காக இப்போது அழகிய பாலம் அமைக்கப்பட்டுள்ளது. முன்னர் மிதப்பு பாதையே பயன்படுத்தப் பட்டமையினால் இவ்வழி போவோர் இந்த துறயடியில் தரித்து நின்றே சென்றனர். அதனால் ஒரு சிறு வர்த்தக மையமாகவும் இது தொழிற்பட்டது. ஆனால் இன்று பாலம் அமைந்த பின்பு அந்த முக்கியத்துவம் குறைந்து போயிற்று என்றே சொல்ல வேண்டும்.
இன்றைய உள்ளூராட்சி முறைமை அறிமுகப்படுத்துவதற்கு முன்னர், பல கிராமங்களை இணைத்த கிளிவெட்டி கிராமசபை கிளிவெட்டி கிராமத்தையே தலைமை இடமாகக்கொண்டு இயங்கியமை குறிப்பிடத்தக்கது.
வீர மறவர்களின் விளை நிலமாகவும் கிளிவெட்டி வரலாற்றில் தன்னை நிருபித்து, நிமிர்ந்து நிற்கும் ஒரு பாரம்பரியம் மிக்க ஊர்.

# கல்லடியில் பூட்டப்படுமா? கண்காணிப்புக் கமறா



மட்டு. கல்லடிப் பாலத்துக்கருகில் அமைதியின்மை பெரும் வாகன நெரிசல் என்னும் செய்தியை செய்தி ஊடகம் ஒன்று கைப்படங்களுடன் தந்திருந்தது.

இச் செய்தியில் இப்பிரச்சினை எழ என்ன காரணம் என்பதையும் அது தெளிவாக சுட்டிக்காட்டியிருந்தது.

இளைஞர் ஒருவர் வந்தபோது அவரை மறித்து போக்குவரத்துப் பொலிசார் நடந்து கொண்ட செயற்பாடு அவ்விளைஞரால் ஏற்றுக்கொள்ள முடியாத காரணத்தினால் பொலிசாருக்கும் இளைஞருக்கும் முரண்பாடு உருவாகி அவ்விளைஞரை கைது பண்ணி காத்தாங்குடி பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றார்கள் என்ற தகவலையும் அச் செய்தி மேலும் தந்து இருந்தது.

இது முறை கேடான கைது எனக் குறிப்பிட்டு, அதைக் கண்டித்து இளைஞர்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கி அவரை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரியதால் அக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர் உடனடியாக விடுதலையும் செய்யப்பட்டார்.

இவை நிற்க!

கடந்த காலத்தில் சத்துருக்கொண்டான் சர்வோதயா நிறுவனத்தில் நடைபெற்ற “கெட்டி கதர“ என்னும் விருந்துபசாரத்தில் மட்டு மாவட்ட நீதிபதி மாண்புமிகு அப்துல்லா அவர்களும் பங்கு பற்றிய போது விருந்துபசார நேரத்தில் மட்டு போக்குவரத்து பொலிசார் மேற்கொண்டதாக அவரால் கூறப்பட்ட அடாவடித்தனங்கள் பற்றி அப்போது பேச்செழுந்தது. அவ்வேளை நீதிபதி மாண்புமிகு அப்துல்லா அவர்கள் தனக்கு கல்லடிப் பாலத்தருகில் நடந்த சம்பவத்தை நினைவு கூர்ந்தார். அதை இவ்விடத்தில் பதிவு செய்கிறேன்.

தான் மட்டக்களப்பிலிருந்து கல்முனை நோக்கி பயணத்தை மேற்கொண்டு செல்லும் வேளையில் கல்லடியில் கடமையாற்றிய போக்குவரத்து பொலிசார் வழிமறித்து வாகனத்தின் ஆவணங்களையும் எனது சாரதி லைசன்சையும் பரிசோதித்து விட்டு “ஓவர்ஸ்பீட்“ என வழக்குப்போட ஆயத்தமானார்கள். தான் இன்னார் என்று கடைசி வரை நான் சொல்லவில்லை. என்ன நடக்கிறது பார்ப்போம் என விட்டு பிடித்தேன். இந் நேரத்தில் தற்செயலாக மட்டக்களப்பு போக்குவரத்தப் பொலிசார் அவ்வழியாக வந்தவர்கள் என்னைக் கண்டு அருகில் வந்து என்னை வழிமறித்துச் சோதனையிட்ட பொலிசாருக்கு நான் யாரென தெரியப்படுத்தினார்கள். அதன் பின் சம்மந்தப்பட்ட பொலிசார் எனக்கும் செலுத்தப்படும்மரியாதையையும் தந்து மன்னிக்கும்படியும் விழித்துக் கொண்டார்கள் என்று அந்நேரத்தில் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை தெரிவித்திருந்தார்.

இப்படிக் காரணமில்லாமல் நிற்பாட்டுவதும் பரிசோதனையென்று பயணிகளை நச்சரிப்பதும் கல்லடிப்பாலத்தருகே அன்றாட நடைபெறும் வாடிக்கையான நிகழ்வாக மாறிவிட்டது என்று பலரும் குறைகூறுகிறார்கள்.

இம் மாதிரியான செயற்பாட்டிற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதற்காக மட்டு மாநகரசபை பொதுமக்களால் தெரிவு செய்து பதவி ஏற்க முன்பே மட்டு முன்னாள் பா.உ வும் கிழக்கு மாகாண முன்னாள் உறுப்பினருமான கோ.கருணாகரன்(ஜனா) மாநகர சபைக்கு முதல் கோரிக்கையாக கல்லடிப்பாலத்துக்கு கண்காணிப்பு கமரா பூட்டுமாறும் அது பல குற்றச்செயல்களையும் இடம்பெறும் தற்கொலைகளையும் இனங்காண உதவும் என்றும் எதிர்வு கூறியிருந்தார். தெரிவு செய்யப்பட்ட மாநகர சபை உறுப்பினர்களில் பலரை உருவாக்க ஏதுவாக இருந்தவர் ஜனா.




அவரின் உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் இந்த மாநகரசபையே பதவியேற்று இரண்டு மாதமாகியும் அவரின் கோரிக்கை எடுபடவில்லை.

தற்போது நடைபெற்ற இப்பிரச்சினையில் சம்பந்தப்பட்டவர்கள் என மாநகரசபை உறுப்பினர்களான கூளாவடி துரைமதன், இருதயபுரம் பூபால் ஆகியோருக்கு எதிராகவும் வழக்கு தொடரப்பட்டு எதிர்வரும் 12.06.2018ல் வழக்குத் தவணை என்பது குறிப்பிடத்தக்கது. ஜனாவின் கோரிக்கை நடைபெற்றிருந்தால் யார் குற்றவாளிகள் அவ்விடத்தில் என்ன நடந்தது. என்பதை ஆதாரத்தோடு அறிந்திருக்கலாம் அல்லவா?

இனியாவது காலந்தாழ்த்தாமல் ஜனாவின் சிபார்சில் தெரிவான அங்கத்தவர்களாவது இவ்விடத்தில் கரிசனை செலுத்த வேண்டும். கண்காணிப்புக் கமரா விரைவாக பூட்டப்படுமா? என்பதே அவதானியாரின் இவ்விதழ் ஆதங்கம்.

# இளம் விஞ்ஞானி விஜோஜ்குமாரின் 82வது கண்டுபிடிப்பு!

## கம்பிகளை இலகுவாக கட்டும் கருவியை (Wire Building Tool) உருவாக்கிய சம்மாந்துறை இளைஞர்

கட்டிட நிர்மாண வேலைகளின் போது சாதாரணமாக கம்பிகளை ஆணி அல்லது குறடுகளின் உதவிகொண்டு கையினால் திருகி இணைப்பது வழமையாகும். இதனால் கைகளில் வலிகளும்



காயங்களும் ஏற்படுவதுடன் விரைவாக கம்பிகளை இணைக்க முடியாது போகும். மேலும் கட்டும் கட்டுக் கம்பிகள் வீணாகும்.

அவ்வாறு அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வாக யாழ்.பல்கலைக்கழக தொழினுட்பபீடமாணவனான சோம சுந்தரம் வினோஜ்குமார் என்பவர் கம்பிகளை கட்டும் கருவியொன்றை ( Wire Building Tool )புதிதாக உருவாக்கியுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக மாணவனான இவர் சம்மாந்துறை கோரக்கர் கிராமத்தைச்சேர்ந்தவராவார்.


இக்கருவி மூலம் இரு கம்பிகளின்

காரைதீவு நிருபா
வி.ரி.சகாதேவராஜா

நான்கு பக்கங்களும் உறுதியாக இருக்குமாறு இணைப்பதுடன் இதில் உள்ள சூழலும் பொறியியல் தொழினுட்பத்தின் காரணமாக குறைந்த விசையைப் பயன்படுத்தி விரைவாகவும் நேர்த்தியாகவும் கம்பிகள் வீணாகாமலும் அழகாக கட்ட முடியும். இதன் ஒன்றின் உற்பத்தி விலை 370 ரூபாய் ஆகும். இக்கருவி கட்டிட நிர்மாண வேலை செய்யும் மேசன்மார்கள் மற்றும் கூலியாட்களுக்கு மிகப்பயன் வாய்ந்த கண்டுபிடிப்பாகும்.

மேலும் இக்கருவிக்கான ஆராய்ச்சி பற்றி வினோஜ்குமார் குறிப்பிடுகையில் :

“நான் ஒருவருடமாக ஆராய்ந்து 11



மாதிரி கருவிகளை உருவாக்கினேன். எனினும் சரியான முறுக்கம் வரவில்லை. அம்முறுக்கத்தைப் பெறுவதே பிரச்சினையாகக் காணப்பட்டது.

பின்னர் மின்சாரத்தில் இயங்கும் கருவியை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டேன். அது ஒன்றின் விலை 6500 ரூபாக்கு மேல் சென்றது.

இது கூலித்தொழிலாளிகளுக்கு ஏற்றதாக அமையவில்லை. எனினும் முயற்சியைக் கைவிடாமல் சிறிய உருளை வடிவான குழாய்க் கம்பியினுள் சூழலும் தொழினுட்பத்தைக் கொண்ட அமைப்பை உருவாக்கினேன்.


SAHASAK NIMAVUM – 2018
National Exhibition for Inventions & Innovations
PROVINCIAL LEVEL SELECTION
Eastern Province
CERTIFICATE OF PARTICIPATION
This is to certify that
S. Vinojkumar
of
University of Jaffna
actively participated (Individual / Group) under the category of School / University & Tertiary Educational Institutes / Open / Commercialized
by presenting the
Wire Building Tool
organized by the
Sri Lanka Inventors Commission
operative under the purview of the Ministry of Science, Technology & Research
Commissioner
Sri Lanka Inventors Commission
Ministry of Science, Technology & Research

அதன் பின்னர் அது வெற்றியளித்தது. மேலும் அது பற்றிய வரைபடங்கள் மாதிரிகளை உருவாக்கி செலவு குறைவான முறையிலும் இலகுவானதும் வினைத்திறனானதுமான ( Wire Building Tool இனை உருவாக்கினேன். இதற்கு ஆக்கவுரிமைப் பத்திரத்திற்கும் விண்ணப்பித்துள்ளேன்.

மேலும் எனது கண்டுபிடிப்புக்களுக்கு



ஊக்குவிப்புக்களை வழங்கிவரும் எனது பல்கலைக்கழகத்திற்கும்,UGC பல்கலைகழக பேராசியர் புத்திக்க சேர் அவர்களுக்கும், கொழும்பு பல்கலைகழக பேராசியர் தகுதன ஜெயரத்ன சேர் அவர்களுக்கும், தென்கிழக்குப் பல்கலைகழக பேராசியர் முசாதிக் சேர் அவர்களுக்கும் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கும் மற்றும் சுவிஸ் அன்பே சிவம் அறப்பணி அமைப்பிற்கும் என்பணிவன்பான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். “என்றார்.

இதுவரை 81 கண்டுபிடிப்புக்களுக்கு மேல் செய்த இவர் மூன்று சர்வதேச விருதுகளையும் 31 தேசிய விருதுகளையும் பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# வட்டவிதானை பதவி ஒழிக்கப்பட்டு விட்டதா?

‘தண்ணீர் பிரச்சினை, வடிச்சல் பிரச்சினை, நெல்வயல் பாதுகாப்புப் பிரச்சினை என எல்லாப் பிரச்சினையையும் அந்தக்காலத்தில் வட்டவிதானையே தீர்த்து வைத்தவர். வட்டவிதானைக்கும், அவரின் பேச்சுக்கும் நல்ல மரியாதை இருந்தது. வட்டவிதானையைக் கண்டாலே தலைகுனிந்து பலர் நின்ற வரலாறும் இருக்கு. இப்ப, எல்லாம் வட்டவிதானை என்ற பெயர் ஒருசில இடத்தில்தான் ஒலிக்கின்றது’ என வாதக்கல்மடு நெல்வயலொன்றின் நடுவில் அமைந்துள்ள புரையில் உள்ள சிறாம்பியில் அமர்ந்துகொண்டிருந்த வெள்ளையன் சிவசம்புவிடம் கூறிக்கொண்டிருந்தான்.

தற்காலத்தில் கிராமத்தில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக கிராமங்கள் என அழைப்பதுபோன்று முன்னர் வட்டை என்று அழைப்பர். அவ்வட்டையில் நடைபெறுகின்ற பிரச்சினைகளை தீர்ப்பவராகவும், விவசாயிகளையும் அரசாங்க விவசாயம்சார் உத்தியோகத்தர்களையும் இணைப்பவராகவும் வட்டவிதானை செல்வாக்கு பெற்றிருந்தார். மக்கள் மத்தியில் அரசினது விடயங்களை கொண்டு சேர்க்கும் ஊடகராகவும் காணப்பட்டதினால் கமநலசேவை நிலையங்களிலும், மக்கள் மத்தியிலும் மதிப்புமிக்கவராக வட்டவிதானை விளங்கினார்.

வட்டவிதானையை மக்கள் தெரிவு செய்தாலும், தெரிவின் போது சிலவிடயங்களையும் கவனத்தில் கொண்டிருந்ததாக வெள்ளையனும் சிவசம்புவும் பேசிக்கொண்டிருந்தனர்.

## வட்டவிதானையால் முடிந்தது இப்போதுள்ள அமைப்புக்களால் முடியாததாகியுள்ளது

அரசாங்கத்தினது பிரதிநிதியாகக் கிராமசேவையாளர் இருப்பது போன்று, அந்தக்காலத்தில் வட்டையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்கின்ற தீர்ப்பாளராக, வட்டையில் உள்ளவர்களினால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதியான வட்டவிதானை காணப்பட்டார்.

நெல்வயல்கள் அமைந்த ஒரு பகுதியை “வட்டை” என்று கூறுவர். தற்போது குறித்த வட்டையில், நெற்காணிகள் அதிகமுள்ளவராகவும், கற்றவராகவும் இருக்கவேண்டுமென்ற எழுத்தில் இல்லாத விதிகளைக் கொண்டே வட்டவிதானை என்ற இருப்பிடத்தினை நிரப்பினர்.

வயல்செய்கையின் போது நீர்பாய்ச்சுவதில் பிரச்சினைகள் ஏற்பட்டால், முன்னுக்கு பின் அறுவடைகள் இடம்பெற்று அதில் பிரச்சினைகள் நிகழ்ந்தால், காட்டுவிலங்குகளை நெல்வயலுக்குள் உள்நுழையவிடாது பாதுகாக்கும் பணியை முறையாக மேற்கொள்ளாமல், வயலுக்குள் காட்டுவிலங்குகள் உள்நுழைந்து நெற்பயிரையுண்டு அதனால்; பிணக்குகள் இடம்பெற்றால்,

படுவான் பாலகன்

அவற்றினை தீர்க்கும் தீர்ப்பாளராக வட்டவிதானை செயற்பட்டதுடன், தண்டணைகளையும் வழங்கியதாக இருவரும் பேசிக்கொண்டனர்.

இரவு நேரத்தில் காவல் செய்யாமல் நித்திரை செய்ததன் விளைவாக பயிர்களை விலங்குகள் அழித்தற்காக பலர் அடிவாங்கியதாகவும் கூறி பழைய நினைவை நீட்டிப்பார்த்துக்கொண்டிருந்தனர்.

நெல்வயல்களை கமநலசேவை நிலையத்தில் பதிவுசெய்வதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுத்தல், விவசாயத்திற்கான மானியங்களை பெற்றுக்கொடுத்தல் போன்ற காரியங்களையும் வட்டவிதானை நிறைவேற்றினார். அதேபோன்று வாராந்தம் கூட்டங்களுக்கு அழைப்புவிடுத்து, கூட்டங்களை நடாத்துகின்ற பணியினையும் வட்டவிதானை முன்னெடுத்தார். கூட்டங்களில் கலந்து கொள்ளாதோருக்கு தண்டணைகளும் வழங்கப்பட்டன. இதனால் கூட்டங்களுகளில் எல்லோரும் கலந்துகொண்டனர். இதன்பயனாக சொல்லப்படுகின்ற விடயங்கள் அனைவருக்கும் சென்றடைந்தன.

தற்காலத்தில் வட்டவிதானை என்கின்ற பதவி படிப்படியாக இல்லாமல் சென்று, கமநல அமைப்புக்கள் தோன்றியிருக்கின்றன. கமநல அமைப்புக்களுக்கு விவசாயிகள் தொடர்பிலான சகல அதிகாரங்கள் இருக்கின்றபோதிலும், வட்டவிதானைபோன்ற இறுக்கமான நடைமுறையை கடைப்பிடிக்க முடியாத நிலை கமநலசேவை நிலையங்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன. இதன்காரணமாக கூட்டங்களுக்கு விவசாயிகள் கலந்து கொள்வது குறைவானதாகவுள்ளன. இதனால் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்கள், கூறப்படும் விடயங்கள் விவசாயிகள் பலருக்கு தெரியாமலே சென்றுவிடுகின்றன. அதேவேளை அமைப்புக்களின் தீர்மானங்களுக்கு செவிசாய்க்காது செயற்படுகின்றதான செயற்பாடுகளும் நடந்தேறாமலல்ல. அதிகாரம் வட்டவிதானை என்ற பதவியில் செல்வாக்கு பெற்றிருந்தாலும், களவு செய்தவர்கள் தண்டிக்கப்பட்டனர். அதேவேளையை தண்டணையை ஏற்றும் கொண்டனர்.

‘வட்டவிதானை பதவி வகிப்பவருக்கு மாதாந்தம் சம்பளமாக கொடுக்காவிட்டாலும், காலத்திற்குகேற்ற வகையில் ஒவ்வொருவரும் நெல்லை கொடுத்தமையே பழமையானது’; என இருவரும் பேசிவிட்டு எழுந்து நின்று கூச்சலிட்டு நெல்வயலில் நின்ற பறவைகளை துரத்தினர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரைப்பகுதியில் நெல்வயல்கள் அதிகமாகவுள்ளதினால், இப்பகுதியில் அதிகாரத்திலிருந்த ஒரு பதவியே வட்டவிதானை. இன்று அப்பதவி, கமநல அமைப்புக்களின் வருகை, கிராமசேவையாளர்களின் வருகை போன்றவற்றினால் செயலிழந்து, இன்று வெளியில் தூக்கிவீசப்பட்டுள்ளது. ஆனாலும் இவ்வாறான பதவிகளைக்கூறி அழைக்ககூடிய ஒருசிலர் இன்னும் உயிரோடு வலம்வந்து கொண்டிருக்கின்றர். இன்னும் ஓர் தசாப்தங்களின் பின் வட்டவிதானை என்ற சொல்லை கண்டுபிடிக்க முடியாத நிலையேற்படும் என்பதே நிதர்சனம்.

# கறுவாக்கேணி மாணவர்களின் தெருவெளி அரங்க ஆற்றுகை



வாழைச்சேனை கோறளைப்பற்று பிரதேச செயலகமும் கோறளைப்பற்று உலக தரிசன நிறுவனமும் இணைந்து நடத்திய சிறுவர் பாதுகாப்பு தின நிகழ்ச்சிகள் கடந்த முதலாம் திகதி வாழைச்சேனையில் நடைபெற்றன. இந்நிகழ்வில் முதலாவதாக வாழைச்சேனை பொலிஸ் நிலையச் சந்தியிலிருந்து வாழைச்சேனை விளையாட்டு மைதானம் வரை விழிப்புணர்வு நடைபவனி இடம்பெற்றது.

இதனையடுத்து விளையாட்டு மைதானத்தில் ஏற்பாட்டாளர்களின் விழிப்புணர்வு உரையாற்றுகையும், தெருவெளி அரங்க அளிக்கையும் நடைபெற்றன. இத்தெருவெளி நாடகத்தினை வாழைச்சேனை கறுவாக்கேணி விக்னேஸ்வரா கல்லூரி மாணவர்கள் ஆற்றுகை செய்திருந்தார்கள். சமகாலத்தில் சிறுவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு நெருக்கடிகளைச் சித்தரித்து அது தொடர்பான ஆக்கபூர்வமான உரையாடல்களை வலுப்படுத்தும் ஆற்றுகையாக இது அமைந்திருந்தது.



# ஆதிகோணேஸ்வரா நூற்றாண்டு விழா



(கதிரவன் திருகோணமலை)

தம்பலகாமம் ஆதிகோணேஸ்வரா மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா திங்கட்கிழமை 2018.06.04 மாலை நடைபெற்றது. பட்டிமேடு சிதம்பரநாதன் அறக்கட்டளை நிறுவனத்தால் வித்தியாலயத்திற்கு 650,000 ரூபாய் செலவில் வாயில் முகப்பு அமைத்துக் கொடுக்கப்பட்டது. இதனை கிழக்கு மாகாண கல்வி அமைச்சு செயலாளர் ஐ.எம். முத்துண்டா, அறக்கட்டளை நிறுவத்தின் இயக்குநர் மருத்துவர் த.சிவநாதன் ஆகியோர் இணைந்து நாடாவை வெட்டி திறந்து வைத்தனர்.

# சல்லி வைகாசிப் பொங்கல்



(கதிரவன் திருகோணமலை )

சல்லி முத்துமாரியம்மன் கோயில் வருடாந்த வைகாசி பொங்கல் திருவிழா செவ்வாயக்கிழமை 2018.06.05 மாலை நடைபெற்றது. பெருமளவிலான அடியவர்கள் பல பாகங்களில் இருந்து வந்து கலந்து கொண்டு அம்மனை வழிபட்டனர்.

திருகோணமலை நகரில் இருந்து அடியவர்கள் தமது நேர்த்திக்கடனை செலுத்துவதற்காக காவடி, கரகம், பாற்செம்பு எடுத்து தீர்த்துக் கொண்டனர். பலர் தமது உடல் வருத்தி நேர்த்திகளைச் செய்தனர்.

# இந்துப் பண்பாட்டில் கவனிக்கப் பட வேண்டிய பக்கம்-5

## (மட்டக்களப்பின் இந்துத் தெய்வங்களையும் வழிபாட்டினையும் மையப் படுத்திய சில சிந்தனைகள்)

சமஸ்கிருத மயமாக்கம் என்றால் சமஸ்கிருத நெறி நின்ற ஆரிய பிராமண வாழ்க்கை முறைகளை ஏனைய இந்திய மக்கள் மத்தியில் தம் அறிவு பலத்தாலும், அதிகார பலத்தாலும் புகுத்தி அம் மக்களையும் தம் வழிக்குத் திருப்புவதாகும். ஆங்கிலேயர் தம் மதத்தாலும் மொழியாலும் தமிழ் மக்களை ஐரோப்பிய வாழ்க்கை முறைக்குள் இழுத்தமையை ஐரோப்பிய மயமாக்கம் என்பர். ஆரியர் இழுத்தமையை சமஸ்கிருத மயமாக்கம் என்பர்.



சமஸ்கிருத மயமாக்கம் என்ற கொள்கை பற்றி ஆராய்ச்சியாளரிடையே பல அபிப்பிராய பேதங்கள் உள்ளன. இந்திய பிரதேச தெய்வங்கள் ஆரியமயமாகியது என்பதனை விட ஆரியம் இந்திய மயமாகியது என்பதே சரி என்பர் சிலர்.

**மட்டக்களப்பிலே அண்மைக்காலமாக இச்சிறு தெய்வ வழிபாட்டில் சமஸ்கிருத மயமாக்கம் நடந்து வருகிறது**

அது ஒரு வகையில் உண்மையும் தான்.

சிவன், விஷ்ணு ஆகிய இரு தெய்வங்களும் வேதங்களில் முக்கியம் பெறாத இரு தெய்வங்கள். அவை பிரதேச தெய்வங்கள். ஒரு வகையில் ஆரியருக்கு முன்னர் திராவிடர் மத்தியில் வணக்கத்திலிருந்த தெய்வங்கள் வேதங்களில் இந்திரன், அக்கினி, வரணன் என்பவையே பிரதான தெய்வங்கள்; எனினும் நடந்தெறிய ஆரிய திராவிட இந்திய கலப்பில் சமஸ்கிருத மயமாக்கலில் ஆரியத் தெய்வங்கள் மறைந்து போக இந்திய பழைய தெய்வங்களான சிவனும், விஷ்ணுவும் பெரும் தெய்வங்களாக மாறிய விந்தை நடந்தேறியுள்ளது. வடநாட்டில் விஷ்ணுவும்;, தென்னாட்டில் சிவனும் இன்று பிரதான பெரும் தெய்வங்கள்

சமஸ்கிருத மயமாக்கம் இவ்வண்ணம் நடந்தேறிய போதிலும் மக்கள் தம்



பழைய தெய்வங்களையும், வழிபாட்டு முறைகளையும் இலகுவில் விட்டு விடவில்லை. சமூக மேல் நிலையத்தில் வசதி படைத்த உயர் நிலையில் இருந்தோர் மத்தியில் இருந்த கிராமியத் தெய்வங்கள் பெரும் தெய்வங்களுடன் இணைக்கப்பட்டன. ஆகம பூசை முறைகள் அங்கு நடாத்தப்பட்டன. அம்மன் கோயில்கள் யாவும் இராஜேஸ்வரி கோயில்களாகின. வைரவர் கோயில்கள் சிவன் கோயில்களாகின. எனினும் இந்த மாற்றத்திற்குள் தூரத்திலிருந்த கிராமிய மக்கள் தம் பழைய மத வழிபாடுகளையும் கடவுளரையும் பேணினர். மிக இறுக்கமாக பழைய மரபுகளைப் பேணினர். அத்தகைய மத வழிபாடுகளையும் கடவுளரையும் சிறுதெய்வ வழிபாடுகள் எனவும் சிறுதெய்வங்கள் எனவும் கூறி இந்துமதம் தன்னுள் இணைத்துக் கொண்டது.

சமணர்கட்கு எதிரான சமயப் போரில் அகச்சமயம், அகப்புறச்சமயம் என பெரும் தெய்வ வழிபாட்டுடன் இணையாத இந்துமத புறச்சமயங்களையும் சைவசித்தாந்த ஆசிரியர்கள் தம்முடன் இணைத்துக் கொண்டனர். சமண, பௌத்த மத எதிர்ப்பிலே வைஷ்ணவமும், சைவமும் கைகொர்த்துக் கொண்டன. நாயக்கர் காலத்தில் அந்நியரான இஸ்லாமியருக்கு எதிராகவும் இந்துக்கள் ஒன்றுபட வேண்டி ஏற்பட்டபோது, சிதறிக்கிடந்த அனைத்து இந்திய மதங்களையும் இந்துக்கள் என்ற குடைக்குள் கொண்டு வரவேண்டியேற்பட்டது. இதே நிலைதான் 18 ம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் தம் மதமான கிறிஸ்தவத்துடன் இந்தியாவுக்குள் புகுந்த போதும் ஏற்பட்டது.

காலனித்துவ வாதிகளுக்கெதிரான போரில் இந்துமதம் அனைவரையும் இணைத்த முற்போக்குப் பாத்திரம் வகித்தது. ராஜராம் மோகன்ராயின் பிரம்ம ஞான சந்தம்,விவேகானந்தரின் ராமக்கிருஸ்ண மிஸன் என்பன இந்துமக்கள் அனைவரையும் இந்துக்களாக இணைத்த இயக்கங்களாகும்.

எனினும் இந்துப் பண்பாடு கட்டமைக்கப்படுகையில் ஆகம நெறிகள் மரபு உயர் மரபே இந்து மரபு என்று கட்டியமைக்கப்பட்டது.

உண்மையில் அந்நியர் வருகையின் போது மதம் மாறாமல், இறைபக்தி குன்றாமல் இந்து மதத்தினைக் கட்டிக்காத்தவர்கள் இறைவனுடன் தன் வழிபாட்டாலும், கிரியை முறைகளாலும் நெருக்கமான உறவு கொண்டிருந்த சிறுதெய்வ வழிபாட்டினை மேற்கொண்டிருந்த கிராமிய இந்து மக்களே.

இந்துமதம் சார் கிராமிய தெய்வ வழிபாட்டு முறைகளும், அக்கோயில் சார் கலைகளும் இந்துமத புராணங்களையும், இதிகாசங்களையும் உள்ளடக்கமாகக் கொண்டிருந்த இந்துக் கூத்துகளும், கிராமிய இந்து வாழ்க்கை முறைகளுமே அம்மக்களை மதம் மாறாமல் வைத்திருந்தனர். மேல் நிலையில் இருந்த பலர் உத்தியோகம், சுகமான வாழ்வு என்பதற்காக மதம் மாறியபோதும் அக்கிராமிய மக்கள் இந்துக் கடவுளரைத் தம்மோடு உடனுறையும் உறவுகளாக வாழ்ந்தனர். இதனால் அவர்களை எளிதில் மனமாற்ற முடியவில்லை.

மட்டக்களப்பிலே அண்மைக்காலமாக இச்சிறு தெய்வ வழிபாட்டில் சமஸ்கிருத மயமாக்கம் நடந்து வருகிறது. சடங்கு என்ற சொல்லைப் பாவிப்பதற்குப் பதிலாக உற்சவ விழா என்ற சொற்களையே பாவிக்கின்றனர். அம்மன் கோயில்கள் பலவற்றில் தெய்வம் ஏறி ஆடும் சடங்கு முறைமாரி திருவிழா முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. காவியம் முதலிய அம்மன் பாடல்களுடன் தேவாரங்களும் பாடப்படுகின்றன. கோயிற் கும்பாவிஷேங்கள் பிராமணரைக் கொண்டு நடாத்தப்படுகின்றன. கோயில்களும் அகமக் கோயில்கள் அமைப்பின் படி கட்டப்படுகின்றன.

மட்டக்களப்பின் சில மாரியம்மன் கோயில்கள் முற்றாக ஆகம முறைக்



கோயில்களாகிவிட்டன. அங்கு பிராமணர்களே பூசை செய்கின்றார்கள். இது சமஸ்கிருத மயமாக்கலின் ஒரு விளைவே. சில கோயில்கள் ஆகம

**இங்கு செய்யப்படும் பேயோட்டும் நிகழ்வு ஒரு வகையில் பண்டைய உளநோய்ச் சிகிச்சை நெறியாகும். அதை நாம் ஒரு வகையில் பண்டைய இந்து விஞ்ஞானம் எனலாம்**

முறைக்குள் ஆகியும், ஆகாமலும் இருக்கின்றன. வரலாற்றுப் போக்கில் இவை தவிர்க்க முடியாதவை.

எனினும் சதாரண மக்களும் கிராமிய மக்களும் இம்மாறுதல்களுக்குள் இலகுவாக வந்து விடமாட்டார்கள். தம் முன்னோர் பேணிவந்த சிறுதெய்வ வழிபாட்டு முறைகளையும்,சிறுதெய்வ கோயிற் இந்துக்கலை



பாரம்பரியங்களையும் தொடர்ந்து பேணுவர். அதிற் காணப்படும் பேதமின்மையும், தெய்வ நெருக்கமும், உரிமையும், நம்பிக்கையும் அச்சிறு தெய்வ பாரம்பரியத்துடன் அவர்களை இறுகப் பிணைத்துள்ளன. இன்றைய மத மாற்றச் சூழலில் வசதி படைத்த இந்துமக்கள் மதம் மாறிச் சுகம் அனுபவிப்பினும் மதம் மாறாமல்




உண்மை இறை பக்தியுடன் இந்துவாக வாழ்வோர் கிராமிய இந்து மக்களே.

இத்தகைய செழுமை பொருந்திய இந்துப்பண்பாட்டு மரபினை இந்துப்பண்பாட்டுக்குள் இணைக்காமல் புறக்கணிப்பது பிழையாகும். சிறு தெய்வங்கள் அதன் வழிபாட்டு முறைகள் அதனடியாக எழும் சிறு தெய்வக் கட்டிட,சிற்ப,இசை,நடன,நாடக இந்துக் கலைகள் என்பன இந்துப் பண்பாட்டுடன் இணைக்கப்பட வேண்டும். கவனிக்கப்படாத இந்த இந்துப் பாரம்பரியம் கவனிக்கப்பட வேண்டும். இச் சிறு மரபுக் கலைகள் இந்துக்கலைகளின் முக்கியமான கூறுகள் என்ற கருத்து அழுத்தப்பட வேண்டும்.

இச் சிறு தெய்வக் கோவிகளிற் கைக்கொள்ளப்படும் சாங்கிய நெறி புராதன இந்து நெறியாகும். இங்கு செய்யப்படும் பேயோட்டும் நிகழ்வு ஒரு வகையில் பண்டைய உளநோய்ச் சிகிச்சை நெறியாகும்.அதை நாம் ஒரு வகையில் பண்டைய இந்து விஞ்ஞானம் எனலாம். இப்பண்டைய இந்து விஞ்ஞான நெறியின் தன்மைகள் ஆராயப்பட வேண்டும். இந்தப் பண்டைய இந்து உளவியல் விஞ்ஞானம் நுணுக்கமாக ஆராய்ந்து நிறுவப்பட வேண்டும்

இதுவரை பெரு நெறி நின்ற இந்துச் சனாதனிகளால் கவனிக்கப்படாதிருந்த வலிமை வாய்ந்த இப்பக்கம் கவனிக்கப்பட வேண்டும். உயர்வு தாழ்வு அற்ற இந்து சமூகத்தை உருவாக்க இவ் அணுகுமுறை உதவவும் கூடும்.

இம்மறு பக்கத்தின் ஆழ அகலங்கள் தேடப்பட வேண்டும்.இந்து மத ஆராய்ச்சிகளை இவற்றை நோக்கி ஊக்கப்படுத்த வேண்டும். இவை பற்றிய தகவல்கள் ஆவணப்படுத்தப்பட வேண்டும்

இந்துப் பண்பாட்டு ஆய்வாளர் முன் பெரும்பணி காத்துக்கிடக்கிறது.

(முற்றும்)





# இசையும் காமமே



## இராவணனின் கையில் கிடைத்த வீணைக்கு நிகரான இம்சையை அனுபவித்தது ராஜேஸ் வைத்தியாவின் வீணை

சஞ்சயன் செல்லமாணிக்கம்

பேரண்டவெளி என்று கூறுவார்களே, அது எவ்வளவு பெரியது என்று உங்களுக்குத் தெரியுமா? அந்தளவு பெரியது சஞ்சயனுக்கும் அவனது இசை அறிவுக்குமான இடைவெளி. அப்படிப்பட்டதோர் இசைஞானி நான்.

எனது சங்கீத வகுப்பில் உன்னைக் கண்டால் கொலைசெய்வேன், என்று மாகாலிங்கம் மாஸ்டரால் மட்டக்களப்பு மத்திய கல்லூரியில் அடித்துக் கலைக்கப்பட்ட பெரும் பெருமையும்



எனக்கிருக்கிறது.

ஆனால் பாருங்கள், காலம் என்னை உலகம்போற்றும் பல பல இசை மேதைகளை சந்திக்க வைத்துக்கொண்டிருக்கிறது.

அவர்களை சந்திக்கும்போது “முதலாவது வசனத்திலேயே, எனக்கு சங்கீதம் தெரியும் என்று நீங்கள் நினைத்தால் அதற்கு கம்பனி பொறுப்பல்ல” என்று கூறிவிடுவேன்.

இதையும் மீறி ஒரு முறை அனந் வைத்தியநாதன் பலர் முன்னிலையில் என்னைப் பாடக்கேட்டார். அந்த நிமிடம்தான் அவரது இசைவாழ்க்கையின் அதிமோசமான நிமிடம். அதன்பின் அவர் அந்தத் தவறை செய்யவே இல்லை. இனி நிச்சயமாகச் செய்யமாட்டார்.

ராஜேஸ் வைத்தியா நோர்வே வருகிறார் என்றவுடனேயே ஒரு ஆசனத்தை பதிவுசெய்துகொண்டேன். சில தினங்களுக்கு முன்னர் அவரது இசைநிகழ்வு ஒஸ்லோ (நோர்வே தலைநகர்) முருகனின் நகரத்தில் நடைபெற்றது.

வார்த்தைகள் கடந்த இசையனுபவம், அது.

இதுவரை இப்படியானதொரு அனுபவம் ஒரே ஒருமுறை எனக்குக் கிடைத்திருக்கிறது. இது இரண்டாவது.

நான் கவாலி இசையின் பரம ரசிகன். அதிலும் நுஸ்ரத் ∴பத்தே அலிகானின் பாடல்கள் என்றால் காலம் மறந்து கேட்டுக்கொண்டே இருப்பேன்.

16 ஆகஸ்டு 1997 அன்று நுஸ்ரத் ∴பத்தே அலிகானின் இசை நின்றுபோனது. அவரது சீடரான மருமகன் அவரது இசையைத்தொடர்ந்தார். அவர் நோர்வேயின் ஒப்ரா அரங்கத்தில் கச்சேரி நடாத்தியபோது அங்கு சென்றேன். மண்டபம் நிறைந்து வழிந்தது. விரல் விட்டு எண்ணக்கூடிய தமிழர்கள்.

நான் வாங்கியது அடிமட்ட விலையுள்ள இருக்கைக்கான நுழைவுச்சீட்டு. அதன் விலையே 130 அமெரிக்க டாலர்கள் (1000 குறோணர்கள்).

வாழ்வில் மறக்க முடியாத அனுபவம். அழுதழுது ரசித்த இசை நிகழ்வு அது.

நேற்றுக் கிடைத்தது அதை விஞ்சிய அனுபவம். ராஜேஸ் வைத்தியாவின் வீணையை நினைத்தால் பாவமாக இருக்கிறது. மனிதர் அதைப்படுத்தும்பாடு மிகக் கொடுமையானது. ஒரு ராட்சசனின் கையில் வீணையைக் கொடுத்தது போலிருந்தது அவர் கையில் வீணை. மனிதரின் அத்தனை இம்சைகளையும் அது தாங்குகிறதே.

ராட்சனைப்போன்று கையால் அதனை அடிக்கிறார். நரம்புகளை மீட்டுகிறார், அதனுடன் உரையாடுகிறார், கெஞ்சுகிறார், கொஞ்சுகிறார். பெருங்காமம் கொண்ட காதலர்களைப்போல் வீணையும் அவரும் தொட்டுக்கொள்கிறார்கள், தழுவிக்கொள்கிறார்கள், முறுகுகிறார்கள், முயங்குகிறார்கள்.

மணிக்கணக்காய் முடிவற்றுத்



தொடர்ந்த ஆலிங்கனம் கண்டேன். ராஜேஸ் வைத்தியா மட்டும் நேற்று காமுறவில்லை. அனைத்துக் கலைஞர்களும் ஏன் பார்வையாளர்களும் அப்படியே. இசையும் காமமே.

தபேலாவும், கடம் இவற்றை வாசித்தவர்களும் இசை ராட்சகர்கள். இவர்களுடன் இணைந்துகொண்ட எம்மவர்களும் சளைத்தவர்கள் அல்ல.

எந்தக் கலைஞனால் சாமான்யமான மனிதர்களுடனும் சக கலைஞர்களுடனும் ஒரே அலைவரிசையில் உரையாடி கலைபடைக்க முடிகிறதோ அவரையே காலம் நினைவில் கொள்கிறது. அவர்களே ரசிகர்களின் மனதில் இடம்பிடிக்கிறார்கள்.

இசைநிகழ்வின்போது நோர்வே கலைஞரான அஸ்வினுக்கு, அவரது திறமையை காண்பிப்பதற்காய் தனது மேடையில், அவரே அஸ்வினை ஊக்குவித்து, இவனைக் கவனியுங்கள் என்பது போன்ற சைகையில் ரசிகர்களிடம் கூறிய பெருந்தன்மை பல கலைஞர்களிடம் இல்லாத ஒரு பண்பு.

பொறாமையற்ற நிலையை அடைவதே ஒரு கலைஞன் கலைக்குச் செய்யும் பெரும் பணியாய் இருக்கும் என்பது எனது கருத்து. இதைப் புரிந்திருக்கிறார் ராஜேஸ் வைத்தியா.

மாலை ராஜேஸ் வைத்தியாவின் குழுவிரை பார்வையாளர்கள் சந்திப்பதற்கு இராப்போசனம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

அங்கு சென்றிருந்தேன். மிகச் சிலரே நின்றிருந்தனர். எனக்கு அறிமுகமான இரண்டு பிரபல பாடகிகளுடன் உட்கார்ந்துகொண்டேன். ராஜேஸ் வைத்தியா வந்தார். அழைத்தோம். வந்தார், அருகில் உட்கார்ந்தார். அருகில் இருந்த அர்ச்சனா வியப்பில் நடுங்கியபடியே அழுதுகொண்டிருந்தாள். பிரவீனா அதிர்ச்சியில் இருந்து மீளவில்லை. எம்முடன் உட்கார்ந்திருந்த பானுஷாவும் அப்படியே.

இவர்கள் நோர்வேயின் சிறந்த பாடகர்கள். இவர்களின் மனேஜர் நான் என்று ஆரம்பித்தேன். இரண்டு பாடகிகளும் இல்லை, இல்லை என்ற போது “அப்ப நீங்க பாடமாட்டீங்களா” என்ற கேள்வி அவர்களை சிரிக்கவைத்து, அங்கு நிலவிய இறுகிய நிலையை இல்லாதாக்கியது.

அங்கு வந்திருந்த பல இளையோர்களுடன் நண்பர்களைப்போன்று அவர் உரையாடியதும், அவர்களை பாடவைத்து மகிழ்ந்ததும், பியானோ இசையில் அனைவருடன் இணைந்து, பாடி மகிழ்ந்ததும் அவர் சாதாரண மனிதர்களையும் புரிந்த கலைஞர் என்றே அறிவித்தன.

அங்கு நின்றிருந்த 2 மணிநேரமும் என்னைப் பார்த்து அவர் எதையும் கேட்கவில்லை. அவர் கலைத்தாய்க்கு செய்த இன்னொரு பெரும் சேவை அது.

என்னிடமும் அவரிடம் கேட்க எதுவும் இருக்க முடியாதல்லவா, இதுவும் ஒருவிதக் கலைச்சேவைதான்.

இப்படியானவர்களை தூர இருந்து தரிசிப்பதும் கலையுணர்வுதான்.

“இராவணனுக்கு” திருதராஷ்டிரனின் “தேரோட்டி(சஞ்சயன்)” தலைவணங்குகிறான்.

## ரவீஸ் அவுட்ஸ்கோன் வெற்றிக் கிண்ணத்தை இரண்டாவது முறையாகவும் வென்ற சீலாமுனை யங்ஸ்டார்!



மட்டக்களப்பின் கால்பந்தாட்டத் துறையில் 1990 களில் பிரகாசித்த முன்னணி வீரரான அமரர் ரவீஸ் அவுட்ஸ்கோன் அவர்களின் ஞாபகார்த்தமாக கூளாவடி டிஸ்கோ விளையாட்டுக் கழகத்தினர் ஆண்டு தோறும் நடத்திவரும் மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்டச் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் கழகங்களுக்கிடையிலான வெற்றிக் கிண்ண கால்பந்தாட்டம் இம்முறை அணிக்கு ஒன்பது வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான போட்டியாக கடந்த முதலாம் திகதி தொடக்கம் மூன்றாந் திகதி வரை மட்டு வெபர் மைதானத்தில் நடைபெற்றது.

இச்சுற்றுப்போட்டியில் பங்குபற்றிய சீலாமுனை யங்ஸ்டார் கழக அணியினர் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டார்கள். இறுதிப் போட்டியில் கூளாவடி டிஸ்கோ கழக அணியும் யங்ஸ்டார் கழக அணியும் போட்டியிட்டன. இரு அணிகளும் எவ்வித கோல்களையும் பெறாத நிலையில், தண்டனை உதைப் போட்டியூடாக வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இத்தண்டனை உதைப் போட்டியில் யங்ஸ்டார் அணியினர் வெற்றி பெற்று ரவீஸ் அவுட்ஸ்கோன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். கடந்த 2017 ஆம் வருடமும் யங்ஸ்டார் கழக அணியினரே இக்கிண்ணத்தை வென்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. யங்ஸ்டார் கழகத்தின் நா.மயூரன், ம.அனுசன் ஆகிய வீரர்கள் சிறந்த கோல் காப்பாளர், சிறந்த பின்கள வீரர் ஆகியோருக்கான விருதுகளையும் பெற்றுக் கொண்டார்கள்.

மொத்தம் 16 அணிகள் பங்குபற்றிய இச்சுற்றுப் போட்டியில் இரண்டாமிடத்தை டிஸ்கோ கழகமும் மூன்றாமிடத்தை நாவலடி கோல்ட்பிஸ் கழகமும், நான்காமிடத்தை கல்லடி கடல்மீன்கள் கழகமும் பெற்றுக் கொண்டது.


மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஞா.சிறிநேசன், அவர்களும் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு மா.உதயகுமார் அவர்களும் மற்றும் விளையாட்டுத் துறை சார்ந்த பிரமுகர்களும்; அதிதிகளாகப் பங்குபற்றி வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களை வழங்கி கௌரவித்தார்கள்.

# இலங்கை இறாலில் வைரஸ் : ஒரு வதந்தி

பவித்திரன் மணிசேகரன்

இலங்கை இறால் சாப்பிட்டால் உயிராபத்து ஏற்படும் என எச்சரிக்கும் வகையில் சமூக வலைத்தளங்களில் தகவல்கள் பரவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

“இலங்கை கடலிலுள்ள இறால்களில் அடையாளம் காணமுடியாத ஒருவகையான வைரஸ் உள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. அதனை குணப்படுத்தவும் முடியாதென சில தகவல்களைப் பெற்றுள்ளோம்” என அந்தத் தகவல்களில் கூறப்பட்டுள்ளது.



இதனால் உடனடியாக இறால் உட்கொள்வதனை இலங்கையர்கள் தவிர்க்குமாறும். நீர்கொழும்பிலுள்ள வைத்தியர் ஒருவர் இந்த வைரஸ் தொற்று நோயால் பாதிக்கப்பட்டு, உயிரிழந்து விட்டார் எனவும் தகவல் சமூக வலைத்தளங்களில் பரவியது.

ஆனால் இவை முற்றிலும் பொய்யான தகவல் என தேசிய நீரியல்வள ஆராய்ச்சி முகாமை(NARA) சேர்ந்த வைத்தியர் வசந்தா அகலவர்தா ஆராச்சி கூறியுள்ளார்.

ஆனாலும் உலகளவில் இறால்களுக்கு வைரஸ் தொற்று ஏற்படுகின்றது என்ற செய்தி உண்மைதான். குயின்ஸ்லாந்து இறால்களில் காணப்படும் வெள்ளை புள்ளி நோய் (WSD) ஒருவகை வைரஸ ால் தொற்றும் ஒரு நோயாகும். இது இறால்களின் உயிருக்கு ஆபத்தானது மற்றும் இறால் பண்ணை உற்பத்தியை 40 சதவிகிதம் வரை குறைத்துவிட்டது. வெளிநாடுகளுக்கான ஏற்றுமதியும் குறைந்துள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதல் தென்கிழக்கு குயின்ஸ்லாந்தில் கோல்ட்கோஸ்ட்டுக்கும் பிரிஸ்பனுக்கும் இடையில் லோகன் ஆற்றில் உள்ள ஏழு இறால் பண்ணைகளில் இந்த வைரஸ் இருக்கின்றதா என்று அறிய மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில், அது பரவியுள்ளமை உறுதி செய்யப்பட்டது.

வைரஸ் தொற்று இறால்களுக்கு மாத்திரமே ஒழிய, மனிதர்களுக்கு இதனால் எந்தவித பாதிப்பும் இல்லையெனவும் குயின்ஸ்லாந்து தலைமை ஆய்வக அதிகாரி ஜிம் தாம்சன் தெரிவித்திருக்கின்றார்

”ஆஸ்திரேலியா மாத்திரந்தான் வெள்ளை இறக்கை நோயைக் கொண்டிராத இறால்களைக் கொண்ட ஒரேயொரு வளர்ச்சியடைந்த நாடாக இதுவரை இருந்து வந்தது,” என்றும் அவர் கூறியுள்ளார்.

இறால்களுக்கு வைரஸ் தொற்றும் இந்தப் பிரச்சினை அங்கு சிலகாலமாகவே இருந்து வருகின்றது. கடைசியாக இந்த மே மாதத்தில் வைரஸ் தொற்றால் அங்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.



இதன் தொடர்ச்சியாகவே இதே காலப்பகுதியில் இலங்கையை சேர்ந்த புலம்பெயர்ந்தவர்களால் இச்செய்தி பரப்பப்பட்டுள்ளது. அதாவது, செய்தியை சரியாக பகுத்தறியாமல், அவர்கள் சமூக வலைத்தளங்களில் பதிந்துள்ளனர். இதுவே இலங்கையில் இவ்வதந்தி பரவக் காரணமாகும்.

எதிர்காலத்திலாவது எந்தவொரு செய்தியையும் தீரவிசாரித்த பின்பே பகிரும் வழக்கத்தை சமுகவலைத்தள பாவனையாளர்கள் கையாளும் பட்சத்தில் மாத்திரமே உண்மைச் சம்பவங்களுக்கு முக்கியத்துவம் கிடைக்கப்பெறும்.

## குறுக்கெழுத்துப்போட்டி இல:–08

அரங்கம் இரா. தவராஜா.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | 5 | |
| 6 | | 7 | | 8 | | |
| | | | | | 9 | 10 |
| 11 | | | 12 | | | |
| | | 13 | | | 14 | |
| 15 | 16 | | 17 | | | |
| 18 | | | | | | |

**இடமிருந்து வலம்:**

01. மாமாவின் பெண் பால்.
03. பாரங்களை தாங்கிய இடம் கடைசி எழுத்தை இழந்து விட்டது.
06. வானத்தில் மின்னுவது.
08. வில்லை வளைக்கும் கயிறு.
09. வெடித்தது கடைசி எழுத்து பறந்து விட்டது.
11. ராமரின் குலகுரு.
13. தவிலில் அடித்தால் வரும் சத்தம்.
14. அறிவு.
15. பாதை.
17. பார்த்தால் பங்காளி ஆனால் கருமி.
18. கப்பல், படகுகளைச் செலுத்தும் பொறி.

**மேலிருந்து கீழ்:**

01. அம்மாவே தான்.
02. புரட்சி செய்பவனிடம் இருக்கக் கூடாதது.
04. “நானாவந்தி“ என்கிற பறவை பழக்கினால் பேசும்.
05. தடைகளை வெற்றி உமக்கே.
07. கையெழுத்துப் போடத்தெரியாதவன்.
10. வலைஞன் இங்கே மறு பெயரில்.
11. கடைக்கு போக கை வீசு, மீன் பிடிக்க .
12. வீண் ஆடம்பரம் செய்பவன்.
14. இன்று நம் நாட்டில் குறைந்து விட்டது.
16. “கு“வை சேர்த்தால் திசை தெரியும்.

இதற்குரிய சரியான விடையை அரங்கம் செய்திக் கூப்பனில் நிரப்பி அஞ்சல் அட்டையில் ஒட்டி 28.06.2018க்கு முன்னர்

அரங்கத்துக்கு அனுப்பி வைக்கவும்.

அரங்கம் நிறுவனம்:
227 பார் வீதி, மட்டக்களப்பு.

சரியான விடையை எழுதி அனுப்புவர்களில் அதிஸ்டசாலிகள் மூவருக்கு தலா 100 ரூபாய் பரிசளிக்கப்படும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல:–02 இன் விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 அ | ம் | 2 வ | 3 சு | | 4 மா | 5 து |
| க | | 6 தி | க் | 7 கு | த | ல் |
| 8 ம் | 9 த | வா | கு | தி | | லி |
| | 10 ரு | க | | 11 கா | ம் | ய |
| 12 தி | ம | | 13 இ | ல் | ல | ம் |
| 14 க | ர் | ண | ன் | | ல் | |
| 15 ச | | | று | | 16 வெ | ளி |

சரியான விடைகளை எழுதி பரிசு பெறும் அதிஸ்டசாலிகள் மூவர்:-

01. த.குலசேகரம் (மட்டிக்களி)
02. தவநாயகி ஸ்ரீகிருஷ்ணராஜா (செல்வநாயகம் வீதி)
03. எஸ்.கோணேசப்பிள்ளை (பார் வீதி)

-- இவர்களுக்குரிய பரிசுப் பணம் அனுப்பி வைக்கப்படும்.

-- இப் போட்டியில் கலந்துகொண்ட போட்டியாளர்களுக்கு அரங்கம் பத்திரிகையின் நன்றிகள்.

## மண்சரிவில் குழந்தை பலி

தொடர்ச்சி...

குழந்தை ஒன்று பலியானதுடன், மேலும் இருவர் காயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தெரணியகல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையிலேயே இந்த இரண்டு வயதுக் குழந்தை மரணமடைந்துள்ளது. அதன் தாயும் நான்கரை வயதான சகோதரமும் காயமடைந்தவர்களில் அடங்குவர்.

அந்தப் பகுதியில் பெய்த கடுமையான மழை காரணமாகவே மண் சரிவு ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.








# கட்டிளமைப் பருவ உளநலம் 07
# பரீட்சைக்கால நெருக்கீடுகள்

“கருவறையில் இருந்து கல்லரை வரை“ யாராவது நெருக்கீடுகள் பற்றிக்கேட்டால் அதன் ஆரம்பம் முடிவாக இரண்டையும் குறிப்பிடலாம். வாழ்க்கையின் ஒவ்வொரு கட்ட நெருக்கீடு, குழந்தை கருவறையில் இருக்கும் காலமும், அது அங்கு இருக்கும் நிலையில் இருந்து ஆரம்பித்து, கட்டிளமைப் பருவத்தை அடையும் போது சந்திக்கின்ற இரண்டு முக்கியமான

அவ்வாறான பயம் ஆரோக்கியமானது. அதனால் சிறிது காலத்திற்கு ஏற்படுகின்ற நெருக்கீடு தற்காலிகமானது. பரீட்சை முடிந்து பெறுபேறுகள் நல்லமுறையாக அமைய, அந்நெருக்கீடும் விடைபெற்றுவிடும்.


நெருக்கீட்டின் உடற்தொழில் செயற்பாடு ஏற்கனவே மூளையில் பதிவாகியுள்ள, நல்ல பெறுபேறு என்ற எண்ணம் படிப்படியாக வலுப்பெற அவை மெதுவாக அடைவதில்லை. இது ஓர் சீர்திடநிலை எனப்படுகின்றது. ஆகச்சுழலின் வெப்பநிலை, குருதி வெல்லம்,இதய துடிப்பு, சுவாசவீதம், குருதிஅமுக்கம், அமிலகாரப் பெறுமானம் என்பன மாற்றம் அடைவதில்லை. தேவையைப் பொறுத்து உதாரணமாக குறுந்தூர ஓட்டவீரனிற்கு அந்த இலக்கடையும் வரை அவனது இதயதுடிப்பு, சுவாசம், குருதியமுக்கம்,தசை இறுக்கம், புலன் ஒருமைப்பாடு என்பனவற்றுடன் கண்ணின் கதிராளி விரிவடைதல்,காது கூர்மை அடைதல், உடல் உணர்ச்சிகள் அருட்டப்பட்ட நிலை என்பன அதிகரித்து வெற்றி கம்பத்தை அடைந்த சில மணி நேரங்களில் வழமையான நிலைக்கு திரும்புகின்றன. ஒரு வாகனத்தின் “கியர்“ வேக இயக்கி போன்று பரிவு நரம்புத்தொகுதி உடலை வேகப்படுத்திய நிலையில் வைத்துக்கொள்ளும். அதே வாகனத்தின் “பிரேக்“ பொறி போன்று பரபரிவு நரம்புகள் அகிகரித்த வேகத்தை படிப்படியாக குறைத்து, பழைய மாறிலி வேகத்திற்கு கொண்டு வருகின்றன. எமது நாளந்த வாழ்க்கையில் இவை பல தடவைகள் நடைபெறுகின்றன.



யேர்க்ஸ் / டொன்சன் விதி (Yerkes / Dodson Law)

நெருக்கீடுகளைப்பற்றி ஆய்வு செய்த உளவியலளர்களான ரொபேட் யேர்க்ஸ் மற்றும் டேவிட் டொன்சன் ஆகியோர் நல்ல நெருக்கீடு, கூடாத நெருக்கீடு ஆகிய இரண்டைப்பற்றி விபரித்துள்ளனர்.

இவ்வாய்வின்படி நெருக்கீட்டுடன் வினைத்திறன் / தொழிற்பாடு.˙. செயற்பாடு என்பன அதிகரித்தபோதும் ஒரு அளவிற்கு மேல் அதனால் எதிரான விளைவுகளே ஏற்படத் தொடங்குகின்றன. அத்துடன் அவ்நெருக்கீட்டை எதிர்கொள்பவர்கள் நெருக்கீட்டு விளைவுகளால் நெருக்கீட்டு கோளாறுகள்,பதகளிப்புக் கோளாறுகள், தற்கொலை முயற்சிகள், மது போதைப்பொருள் / புகை பாவித்தல், வன்முறை, அதிக கோபம், அதிகமாக உணவு அருந்துதல் போன்ற எதிர்மறையான செயல்களிலும் ஈடுபடலாம். எனவே பயனுடைய, சாதகமான, நல்ல, சரியான நெருக்கீட்டை வைத்துக்கொள்வதன் மூலமாக மாணவர்கள் பரீட்சைக்கு தயார்செய்து, பரீடசையை நன்றாக எழுதி நல்ல பெறுபேற்றை பெறமுடியும்.



போட்டி பரீட்சைகளின் தயார்ப்படுத்தலில் பரீட்சைகால நெருக்கீடாகிறது. சாதாரணமாக எல்லோருமே ' Stress' என்று வாய்க்குள் முணுமுணுத்துக் கொள்வோம். அதை நாளாந்தம் அனுபவிக்கின்றோம். காலை முதல் மாலை வரை ஓடுகின்ற வாழ்க்கையில் இரவு நித்திரை ஓரளவு அமைதியை தருகிறதா? அல்லது கெடுக்கிறதா? என்ற தலைப்பில் பட்டிமண்டபம் ஒன்று வைத்தால், முடிவு; கெடுக்கிறது என்பதாக அமையலாம். நாளைக்கு “லீசிங்“ கட்டவேண்டும்.? வங்கிக்கடன் நிலுவை செலுத்தவில்லை? இம்முறையும் குருதிவெல்லம் கூட என்றால் “வாட்டில்“ நின்று இன்சுலின் போட வேண்டும்? இப்படி பலரின் கவலைகள் ஏற்படுத்தும் நெருக்கீடுகள், இறுதியில் நித்திரை குழப்பம் பின் பதகளிப்புக் கோளாறு, மனச்சோர்வு, உளநலத்துறையை நாடுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்தே செல்கின்றன.

நெருக்கீடுகள் என்றால் என்ன?
எமது வாழ்க்கை எதிர்பார்ப்புகளுடன் நெருங்கிய தொடர்பற்றது. எதிர்பார்ப்புகள் நிறைவேற கடின உழைப்பு, அர்பணிப்பு, செயலாற்றல், விடாமுயற்சி, தோல்விகளை எதிர்கொள்ளுதல் போன்றன தேவைப்படுகின்றன. உடலும், உள்ளமும் இணைந்து செயற்பட்டே எதிர்பார்ப்பை வெற்றிக்கொள்ள வேண்டும். இதற்காக உடல், உள, தொழிற்பாடுகளில் தற்காலிக மாற்றங்கள் ஏற்பட்டு, எம்மை ஒரு அவசர நிலைமைக்குள் வைத்திருக்கின்றன. இதனால் ஏற்படும் உடல், உள உபாதைகள் ஒன்றாக நெருக்கீட்டு விளைவுகள் எனப்படுகின்றன. உதாரணமாக பரீட்சைக்கு தயார்ப்படுத்துகின்ற கட்டிளமைப்பருவத்தினரில் ஒருசாரார் அந்த பரீட்சையில நல்லமுறையாக தோற்றி நல்ல பேறுபெற்றை பெறவேண்டும் என்ற மனநிலையுடன் படிக்கின்றனர். பெற்றோர், ஆசிரியர்கள் உட்பட ஏனையோரும் அவ்வாறான எதிர்பார்ப்பை ஏற்படுத்த அதற்காக அவர்கள் கடினமாக உழைக்கிறார்கள். அத்துடன் அவர்களில் “நன்றாக செய்ய வேண்டும் என்ற பயம்“ பதகளிப்பை (Performance Anxiety) ஏற்படுத்துகின்றது.

உடலில் செயற்படுகின்ற “தாக்கு, தப்பிவிடு“ (Fight / Flight) என்கின்ற பொறிமுறையுடன் தொடர்புறுகிறது. தன்னாட்சி நரம்பு தொகுதியின் (Autonomic Nervous System) பரிவு (Sympathetic) பரபரிபு (Parasympathetic) ஆகிய இரண்டு பிரிவுகளும் அதிரனல் சுரப்பியினால் சுரக்கப்படுகின்ற ஓமோன்களான Norepinepranine, Epinephrine உடன் கபச்சுரப்பி, பரியகிக்கீழ் சுரப்பிகளின்; சுரப்புகளும் சேர்ந்து தொழிற்பட்டு நெருக்கீட்டு நிலையை ஏற்படுத்துகின்றன.

தன்னாட்சி நரம்புத்தொகுதி

எமது உடலின் உள்ளுறுப்புகளை கட்டுப்படுத்துகின்ற செயற்பாடுகளிற்கு



பொறுப்பாக தன்னாட்சி நரம்புத்தொகுதியுள்ளது. இவை உடலில் உள்ள அனைத்து உறுப்புகளையும், உடலின் தேவைக்கு ஏற்ப அவற்றின் தொழிற்பாட்டை அதிகரிப்பது பின் அத்தேவை நிறைவடைந்தவுடன் பழைய நிலைக்கு கொண்டு வருவது ஆகிய செயற்பாடுகளை புலனுறுப்புகள், ஓமோன்களுடன் சேர்ந்து செய்கின்றன. மனிதனின் புறச்சுழல் மாற்றம் அடைந்தாலும் அகச்சுழல் மாற்றம்

இங்கு நெருக்கீடு பயம் (Fright), “தாக்கு, தப்பிவிடு“ (Fight / Flight) உடன் சம்பந்தப்பட்டு நல்ல விளைவை ஏற்படுத்துகின்றன. மறுதலையாக அதிக நெருக்கீடு சில வேளைகளில் (Freezed) “உறைத்து போ“, (சந்திரமுகி படத்தில் வேட்டையாடு அரண்மனைக்கு சென்று திரும்பிய வடிவேல் போலாகிவிடும்) என்ற நிலையை ஏற்படுத்தினால் பரீட்சைக்களத்திற்கு செல்ல முதல் சிகிச்சைகளத்திற்கு செல்ல வேண்டி ஏற்படும்.

நெருக்கீட்டு விசவட்டம்
பரீட்சைக்காலங்களில் ஏற்படுகின்ற நெருக்கீடு, அது ஏற்படுத்தும் விளைவுகள், எதிர்கொள்ளல், முகாமைத்துவம் பற்றி மாணவர்கள் அறித்திருக்க வேண்டும். நெருக்கீட்டு முகாமைத்துவத்தில் மிகப்பிரதானமானது,

டாக்டர். பி. யூடி ரமேஸ் ஜெயக்குமார்
உளநல மருத்துவர்
வாழைச்சேனை மருத்துவமனை

நெருக்கீட்டைப் பற்றிய அறிவதாகும். ஆசிரியர்கள் மாணவர்களிற்கு இவற்றை வகுப்பறையில் போதிக்க வேண்டும். அத்துடன் அதுவோர் தற்காலிக நிலை பரீட்சைகள் முடிவதுடன் அதுவும் விடைபெற்று விடும். பின் பெறுபேறு வரும் காலத்தில் ஏற்படும். பெறுபேற்றை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கிற்கும் (வெற்றி / தோல்வி) ஆயத்தப்படுத்த வேண்டும். இங்கு நெருக்கீட்டை சரியான முறையில் கையாளாத போது அது விச வட்டமாக சுழல, நெருக்கீட்டு விளைவுகள் பாதகமாக அமையும்.

நெருக்கீட்டு விளைவுகள்
உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை உள்ள அனைத்து தொகுதிகளிலும், அங்கங்களினதும் அதன் உறுப்புகளிலும் நெடுக்கீட்டு விளைவுகள் உடலிலும், உள்ளத்திலும் மாற்றங்களை ஏற்படுத்தும். இதன் குணக்குறிகளாக மனத்தளவில் அந்தரம் (ஓரிடத்தில் இருக்க முடியாத நிலை) அலைபாயும் மனநிலை பரீட்சைக்கு தோற்றுவதா? பின்வாங்குவதா?, மன ஒருநிலைப்படுத்துதல் குறைவடைதல், யோசனை (நல்ல பெறுபேறு கிடைக்குமா? எதிர்பார்த்து நடக்குமா?), கவலை, தனக்கு என்ன பிரச்சினை இருக்கும் என்பதை இனங்காண கஸ்டப்படுதல் , அதேவேளை உடல் அறிகுறிகளாக தலையிடி, தலைப்பாரம், தசைப்பிடிப்பு, குத்து, நோ, வலி, பசியின்மை, வயிற்றெரிவு, அதிகரித்த இதயதுடிப்பு, அதிக சுவாசம் (சிலவேளைகளில் பெருமூச்சு) குடற்புண், குடலழற்ச்சி, வயிற்றோட்டம், வாந்தி, குமட்டல், அதிக சிறுநீர் கழித்தல் எந்த நேரமும் சிறுநீர் வரும்போல் உணர்வு, அதிக வியர்வை, நடுக்கம் என்பன காணப்படலாம்.

பரீட்சைக்கு தயார்ப்படுத்துகின்ற அதிக எதிர்பார்ப்புடன் கல்வி கற்கின்ற மாணவர்களிற்கு இவை ஏற்படும். அத்துடன் ஏற்கனவே தனது பரீட்சை பெறுபேற்றை தெரிந்து வைத்திருக்கின்ற படிக்காத மாணவர்களிற்கு இவை ஏற்படப் போவதில்லை.

# மனதைக் கவரும் மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள்

(இந்தப் பகுதியில் பெண்கேட்டுத் தூது செல்வதுபோன்ற சில பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.)

அவள் குங்குமப் பூப்போல செந்நிற அழகி. வாளிப்பான உடற்கட்டுக் கொண்டவள். பார்த்தவர்களை மீண்டும் ஒருமுறை பார்க்கத் தூண்டும் பருவ அழகு நிரம்பப் பெற்றவள். பலருக்கு அவளிலே ஒரு கண். அந்த ஊர்ப் பணக்காரர் ஒருவருக்கும் அவளிலே தீராத ஆசை. வீடு-வாசல், மாடு-



கன்று, தோட்டம்-துரவு, காணி, வயல் என்று நிறையச் சொத்து அவருக்கு உண்டு. இந்தச் சொத்துகளில் மயங்கி அவளைத் தனக்குக் கட்டிவைக்க அவளது பெற்றோர் சம்மதிப்பார்கள் என்ற நம்பிக்கையில் அவர் ஒரு பெண்மணி மூலம் தூது அனுப்புகிறார். இவ்வாறு வயதான பாட்டிமார் திருமணத் தூது செல்வது கிராமங்களில் வழமை.

அவளது "தாய்" வீட்டு முற்றத்திலே பாய் இழைத்துக் கொண்டு இருக்கிறார். தூது சென்ற பெண்மணி மெல்லச் சென்று அவளருகே அமர்ந்து தான் வந்த காரணத்தை மறைமுகமாகச் சொல்கிறாள்

காலையில்லை மாலையில்லை
கடும் பகலும் சாமமில்லை
வாயில் வெள்ளைச் சுருட்டுடனே இந்த
வளவைச்சுற்றித் திரியுறாண்டி


ஊரிலுள்ள பணக்காரர் ஒருவர் உன் மகளுக்குக்காகச் சுற்றித் திரிகின்றார் என்பதைக் கூறிய அவள், பெண்ணின் தாயைக் கவர்வதற்காக மேலும் சொல்கிறாள்.

அட்டியலும் மோதிரமும்
அழகான றவுக்கைகளும்
வாங்கித் தருவாருனக்கு
வயதுமென்ன நாற்பதுதான்

உடனே மணப்பெண்ணின் தாய் கூறுகிறாள் இப்படி,

நாணல் பூப்போல
நரைத்த கிழவனுக்கு
கும்மாளம் பூப்போல இந்தக்
குமர்தானா வாழுறது?

தூது வந்த பாட்டி அனுபவம் உள்ளவளல்லவா? உடனே, இப்படிச் சொல்கிறாள் -



## தூது செல்லல்

தங்கத்தால் சங்கிலியும்
தகதகென்ற பட்டுடையும்
பட்டணத்துச் செப்புமிட்டுப்
பகல் முழுதும் சுற்றிவாறான்

பெண்ணின் தாய்க்கு இந்தச் சம்பந்தமே பிடிக்கவில்லை. சற்று வெறுப்பாகக் கூறுகிறாள்.

அத்தர் புனுகுகளாம்
அழகான பவுடர்களாம்
இஞ்சிதின்ற குரங்குபோல
இவருக்கேனோ இச்சொகுசு?

வந்த காரியம் சரிவராதுபோல் தெரிவதால் தூதுவந்த கிழவி வேறுவிதமாகக் கதைக்க முயல்கிறாள். மாப்பிளைக்குத்தான் சீதனம் கொடுப்பது வழமை. இந்த மாப்பிள்ளை சீதனமில்லாமல் உங்கள் பிள்ளையை

**சட்டத்தரணி, பாடும் மீன், சு.ஸ்ரீகந்தராசா**

முடிப்பதுடன் உங்களுக்கு அன்பளிப்பும் செய்வார் என்று சற்று இதமாகக் கேட்கிறாள்.

சட்டிவரும் பொட்டிவரும்
பொட்டகத்தில் பூட்டிவரும்
வண்ணக் குதிரையிலே
மாப்பிள்ளையும் கூடவரும்
ஏழவண நெல்லும்
எருமைமாடு கண்டுகளும்

தாறதுதான் உங்களுக்குச்
சம்மதமோ சொல்லிடுகா

தாய்க்குக் கோபம் வந்து விடுகிறது. இருந்தாலும் வாசலுக்கு வந்தவளை அதுவும், தூதாக வந்தவளை கோபத்தோடு ஏசுவது பண்பாடல்ல என்பதால் இப்படிப் பாடுகிறாள்.

காலக் கொடுமையிது
கலிபுரண்டு போச்சுதடி
நாலுதுட்டுக்காசு இப்போ
ஞாயமெல்லாம் பேசுதடி

மேலும் அந்த மாப்பிள்ளையின் இலட்சணங்களை அடுக்காகக் கூறுகிறாள்.

கச்சான் அடித்தபின்பு
காட்டில் மரம் நின்றதுபோல்
உச்சியில் நாலுமயிர்
ஓரமெல்லாம்தான் வழுக்கை
முப்பத்திரெண்டிலேயும்
மூணுபல்லுதான் மீதி
காகக்கறுப்பு நிறம் - ஒரு
காலும் பிசகாமே
கண்ணுமொரு பொட்டை
காதுஞ் செவிடாமே
குருத்தெடுத்த வாழைபோல
கூனிவளைஞ் சிருப்பார்

விட்டாளா தாய்...தன் வெறுப்பையெல்லாம் கொட்டித் தீர்த்துவிடுகிறாள். இறுதியில் தன்மகளைப் பெண்கேட்டு வர அவருக்கு என்ன தகுதி என்ற தோரணையில் இப்படிக் கேட்கிறாள்.

சுட்டகட்டைபோல அவன்
சுடுகாட்டுப் பேய்போல
அட்ட முகறன் என்ர,
அடுப்படிக்கும் ஆகுமோகா

இழைத்த பாயைத் தூக்கித் தட்டி, சுற்றிக் கொண்டே அவள் இவ்வாறு கேட்டபடி உள்ளே செல்கிறாள். தூதுவந்த கிழவி முணுமுணுத்துக் கொண்டு வெளியேறுகிறாள்.

# குன்றுகள் உடைபடும் கொட்டியாரம் - சேனையூர், கட்டைபறிச்சான் பிரதேசம்




இயற்கையின் பின்னணியில் குன்றுகள் சூழ, குளங்களும் வயல்களுமாய், வரலாற்று தடங்கள் கொண்ட, ஈழத் தமிழர்களின் தொன்மையை பறை சாற்றும் தொல்லியல் சான்றுகள் நிறைந்த இடம்.

மூன்றாம் கட்டை மலை என்று பேசப்படும் ஆஜவந்தான் மலை முதல் இளக்கந்தை வரை நீளும் படையாண்ட கல் வரை நீளும் குன்றுகளின் தொடர்ச்சியில் ராஜவந்தான் மலையின் அடிவாரம் முதல் படையாண்ட கல் வரையில் சேனையூர் கட்டைபறிச்சானின் வயல் நிலங்களை அண்டி நிமிர்ந்து நிற்கின்றன.

கிணாந்தி மலை, சாமி மலை, பாண்டியாண்டி மலை, கயமொந்தான் மலை, கயல்கொடி மலை, குறவன்பட்ட மலை, கறி மூடி மலை, மயிலி மலை என முழுக்க முழுக்க

**பாலசுகுமார்**

தமிழ் பெயர்களால் அழைக்கப்படும் இம்மலைகளில் புராதனமான தமிழ் பிராமிக் கல்வெட்டுக்களும் இரண்டாயிரம் வருசங்களுக்கு முதலான காலம்



தொட்டே தமிழர்கள் வாழ்ந்ததற்கான தொல் பொருளியல் சான்றுகளும் பரவிக் கிடக்கின்றன. இந்த குன்றுகள் இப்போது வெடி வைத்து தகர்க்கப்பட்டு எங்கிருந்தோ வந்தவர்கள் அதனை குத்தகைக்கு எடுத்திருக்கிறார்களாம். உடைக்கப்பட்ட கற்கள் வேறு பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப் படுகின்றன.

இந்த குன்றுகளை அண்டி இப்பிரதேச மக்களுக்கு வாழ்வாதாரமாக விளங்கும் பல குளங்கள் உள்ளன. குளங்களின் நீரேந்தும் கொள்திறனுக்கு இந்த குன்றுகளே ஆதாரமாய் அமைவன. நீண்ட காலம் குளத்தில் நீர் தங்குவதற்கும் இந்த மலைகளே புவிச்சரிதவியல் நோக்கில் அடிப்படை வளமாக உள்ளன. இந்த குன்றுகள் உடைக்கப்படுவது நமது பிரதேசத்தின் வரலாற்றையும் வாழ்வாதாரத்தையும் அழிக்கும் முயற்சியாகும். ஏன் சிகிரியாவிலும், மிகிந்தலை குன்றுகளிலும் இன்னும் சிங்கள மக்கள் பெரும் பான்மையாக வாழும் பிரதேசங்களிலும் உள்ள குன்றுகளில் இவர்கள் கை வைக்கவில்லை.



நாளை கோணேசர் மலையும் உடைக்கப்படலாம். சமூக அக்கறை உள்ளவர்களும் அரசியல்வாதிகளும் இதில் அக்கறையுடன் செயல்பட்டு இந்த கலாசார, வாழ்வாதார அழிப்பையும் உடன் நிறுத்துவதோடு உள்ளூர் முகவர்களாக செயல்படுவோர் மக்கள் நன்மை கருதி இதிலிருந்து விலகிக் கொள்ளுதல் நன்மை பயக்கும். இது தொடருமானால் நம் பிரதேசம் நீண்ட காலத்தில் பாலை வனமாக மாறிப் போகும். (படங்கள் மது மதுரன் முகநூலிலிருந்து)



## மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

# ''அமிர்தகழியான்'' செ. குணரத்தினம் வாழ்வும் பணிகளும்



அமிர்தகழியான் செ. குணரத்தினம்.

எழுத்தாளர்கள் எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் நேரம் தேடுபவர்கள். விமானம், ரயில், பஸ் பயணங்களில் வாசிக்க முடியும். எழுதவும் முடியுமா? தற்காலத்தில் கணினி யுகத்தில் பயணித்துக்கொண்டே தம்வசமிருக்கும் மடிக்கணினியில் அல்லது ஸ்மார்ட் போனில் எழுதமுடியும்.

இத்தகைய வசதிகள் இல்லாத அக்காலத்தில் நம்மத்தியில் ஒரு எழுத்தாளர் மட்டக்களப்பு - கொழும்பு இரயில் மார்க்கத்தில் பயணிக்கும் வேளைகளிலும் ரயிலிலிருந்தவாறே படைப்பிலக்கியம் படைத்திருக்கிறார் எனச்சொன்னால் நீங்கள் நம்பத்தான் வேண்டும்.

அவர்தான் அமிர்தகழியான் என்ற புனைபெயருடன் வாழும் மட்டக்களப்பு எழுத்தாளர் செ. குணரத்தினம். ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்காக கிழக்கிலங்கையிலிருந்து செழுமை சேர்த்தவர்தான் இந்த அமிர்தகழியான்.

தமது கலை, இலக்கிய மற்றும் சமூகப்பணிகளின் ஊடாக தாம் பிறந்த ஊருக்கு பெருமை சேர்த்தவர்கள் பற்றி அறிந்திருக்கின்றோம். குணரத்தினம் பிறந்திருக்கும் அமிர்தகழி, மட்டக்களப்பில் மண்முனை வடக்கு பிரதேசத்திற்குள் வரும் இயற்கை வளம்பொருந்திய கிராமம். மட்டக்களப்பிற்கு செல்லும் தருணங்களில் அமிர்தகழியில் அமைந்துள்ள மாமாங்கேஸ்வரர் ஆலயத்தையும் தரிசிப்பது எனது வழக்கம். அதன்




சுற்றாடல் ரம்மியமானது. தென்னை, ஆலம், அரசு, வேம்பு முதலான மரங்களும் தாமரை மலரும் குளமும் மனதைக்கவரும்.

இந்த ஆலயம் பற்றி பல கர்ணபரம்பரைக்கதைகள் இருக்கின்றன. அந்தக்கதைகளையும் கவிதையாக்கியும் மெல்லிசைப்பாடலாக்கியும் காவடிச் சிந்துகளாக்கியுமிருப்பவர்தான் அமிர்தகழியான் செ. குணரத்தினம்.


அயராமல் எழுதிக்குவித்திருக்கும் இந்தப் படைப்பாளி இலக்கிய உலகிற்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகளையும் முந்நூறுக்கும் மேற்பட்ட மெல்லிசைப்பாடல்களையும், இருநூறுக்கும் மேற்பட்ட நகைச்சுவை நடைச்சித்திரங்களையும், பல்வகையான இலக்கிய கட்டுரைகள், விமர்சனங்களையும் பத்துக்கும் மேற்பட்ட நாவல்களையும் இருநூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் எழுதியிருப்பவர்.

1942 ஆம் ஆண்டில் கிழக்கிலங்கையில் மட்டக்களப்பில் வரலாற்றுச் சிறப்பும்










ஐதீக மகிமையும் கொண்டிருக்கும் அமிர்தகழியில் பிறந்திருக்கும் குணரத்தினம், தனது பவளவிழாவையும்

**ரயிலில் எழுதி இலக்கியம் படைத்தவர்**

கடந்த நிலையில் இன்றும் எழுதுகிறார். இலக்கியம் பேசுகிறார்.

தான் பிறந்த ஊரின் பெருமையையும் கவிதைகளில் பாடியிருப்பவர். ஒரு காலத்தில் வனவிலங்குகளுடன் வாழ்ந்த வேடர்களின் குலதெய்வமாகவே அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் திருத்தலம் துலங்கியிருக்கும் செய்தியை அவற்றில் பதிவு செய்தவர்.

மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கத்தை ரீ.பாக்கியநாயகம், ஜெயசிங்கம், அன்புமணி நாகலிங்கம் ஆகியோர் 1961 ஆம் ஆண்டளவில் தொடங்கிய வேளையில் இந்த இலக்கிய அமைப்பிலும் இணைந்துகொண்டு இயங்கியிருக்கும் செ. குணரத்தினம், ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களின் வரிசையில் இடம்பெறுபவர்.

**முருகபூபதி – அவுஸ்திரேலியா**

இலங்கை வானொலி கலையகம் முன்னர் பல ஈழத்துப்பாடல்களை தொகுத்து மெல்லிசைப்பாடல் வரிசையில் ஒலிபரப்பியது. குணரத்தினத்தின் " ஓயாமல் நான் பாடும் ஓராயிரம் பாடல்" என்ற பாடலும் இதில் இடம்பெற்றுள்ளது. ஆர்.முத்துசாமியின் இசையில் ரி. கிருஷ்ணன் என்ற பாடகர் அதனைப்பாடியுள்ளார்.

அமிர்தகழி ஆரம்பப்பாடசாலையிலும் அரசடி மகா வித்தியாலயத்திலும் கற்றிருக்கும் குணரத்தினம், கிழக்கிலங்கை காகித ஆலை கூட்டுத்தாபனத்தில் எழுதுவினைஞராக பணியாற்றியவர். அங்கு காகிதமலர் என்ற இதழ் வெளியானபோது அதன் ஆசிரியர் குழுவிலும் இடம்பெற்றவர்.

**கிழக்கிலங்கை காகித ஆலை கூட்டுத்தாபனத்தின் காகிதமலர் என்ற இதழில் ஆசிரியர் குழுவில் இடம்பெற்றவர்.**

தனது படைப்பிலக்கியங்களுக்காக பரிசுகள், விருதுகள் பல பெற்றவர். இலக்கியப்போட்டிகளில் மிகுந்த ஆர்வம்கொண்டிருந்தமையால், தேசிய , சர்வதேசிய மட்டத்திலும் கவனத்திற்குள்ளானவர். தேசிய கலை இலக்கியப்பேரவை தமிழ்நாடு சுபமங்களா இதழ் என்பன இணைந்து நடத்திய நாவல் போட்டியில் இவரது " துன்ப அலைகள்" முதல் பரிசுபெற்றது.

வீரகேசரி, கொழும்பு பல்கலைக்கழகம், பிரதேச அபிவிருத்தி அமைச்சு, நோர்வே தமிழ்ச்சங்கம், அவுஸ்திரேலியா ஈழத்தமிழ்ச்சங்கம் என்பன நடத்திய போட்டிகளிலும் பரிசுபெற்றவர். ஆளுனர் விருதும் பெற்றிருக்கும் குணரத்தினம், கவிமணி, இலக்கியமணி, தமிழ்மணி முதலான "மணி"ப்பட்டங்களையும் வரவாக்கியிருப்பவர்.

ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் மண்வாசனை, பிரதேசமொழி வழக்கு என்பன முக்கிய அம்சங்கள். கிழக்கிலங்கையின் அமிர்தகழி பிரதேசத்தில் கடற்றொழிலை நம்பி வாழும் மாந்தர்களின் ஆத்மாவை பிரதிபலிக்கும் கதைகளை எழுதியதன் மூலம் அவர்களின் பேச்சுவழக்கை ஈழத்து இலக்கியத்திற்கு வரவாக்கியவர்தான் குணரத்தினம்.
பிரதிமைச்சர் ஹிஸ்புல்லாவின் 50 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு, கிழக்கு மண் பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட " நதியைப்பாடும் நந்தவனங்கள்" என்ற 50 கிழக்கிலங்கை கவிஞர்களின் கவிதைத்தொகுதியிலும் குணரத்தினத்தின் கவிதை இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இலக்கிய வட்டம் வெளியிட்ட இரசிகமணி கனகசெந்திநாதன் கதா விருதுபெற்ற கதைகளின் தொகுப்பிலும் குணரத்தினத்தின் பரிசுபெற்ற "யாதும் ஊரே" என்ற சிறுகதை இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு பிரதேச திருத்தலங்கள் குறித்து இவர் எழுதியிருக்கும் காவடிச்சிந்துப் பாடல்களும் இலங்கை வானொலியில் அருமையான இசையில் ஒலிபரப்பாகியுள்ளன.

இவ்வாறு பல்துறை ஆற்றல் மிக்கவராக விளங்கியிருக்கும் செ. குணரத்தினம், விரைந்து எழுதும் இயல்புகொண்டவர். இலங்கையில் வீரகேசரியில் நான் பணியாற்றிய காலப்பகுதியில் கொழும்பு பக்கம் வரும் இவர் எங்கள் அலுவலகத்திற்கும் தவறாமல் வருவார். அவ்வாறு வரும்போது அவர்வசம் ஒரு கவிதையோ, கட்டுரையோ, சிறுகதையோ இருக்கும். வாரவெளியீட்டுக்கு பொறுப்பான ஆசிரியர் (அமரர்) பொன். ராஜகோபாலிடம் அவற்றை ஒப்படைத்துவிட்டு நேரம் இருப்பின் என்னுடனும் உரையாடிவிட்டுத்திரும்புவார்.

அழகான கையெழுத்துக்கு சொந்தக்காரர். இவரது எழுத்துக்களை வீரகேசரிக்காக ஒப்புநோக்கியுமிருக்கின்றேன். மல்லிகை இதழும் இவரைப்பாராட்டி அட்டைப்பட அதிதியாக கௌரவித்துள்ளது.

மட்டக்களப்பிலிருந்து முன்னர் வெளியான தினக்கதிர் பத்திரிகையின் ஆசிரியர் குழுவிலும் அங்கம் வகித்தவர் குணரத்தினம். இவரது வாழ்வையும் பணிகளையும் அவதானிக்கும்போது, அயராமல் இயங்கியிருக்கும் ஆளுமையாகவே தென்படுகிறார்.

(பயணங்கள் தொடரும்)


ANVER
MOTOR TRADERS
NO. 284, GALLE ROAD, MT. LAVINIA.
077 7 732 832
077 7 701 779
HONDA CIVIC
2018, BRAND NEW, FULLY LOADED, PROVIDED WITH COMPANY WARRANTY
TOYOTA LAND CRUISER PRADO
2017 G, FRONTIER, BRAND NEW, PEROL, TRANSFERABLE
TOYOTA PRADO TXL
2018, NEW FACE, FULLY LOADED, TRANSFERABLE
HYUNDAI SANTA FE
2017, DIESEL, BRAND NEW, WARRANTY PROVIDED
TOYOTA LANDCRUISER D/ CAB
2018, BRAND NEW, DIFF LOCK, 4.2 LITER, FULLY LOADED, COMPANY WARRANTY AVAILABLE
MINI COOPER
2016, CHILLI PACK, BUCKET SEATS, COUPE, UNREGISTERD, 2000KM
SUZUKI STINGRAY
X SAFETY, 17 & 18 UNITS AVAILABLE, COLORS AVAILABLE, LANE ASSIST, HEAD UP DISPLAY, FULLY LOADED
MERCEDES BENZ C180
AMG, PETROL, 2016, 1600CC, FULL OPTION
SUZUKI SPACIA - 2016
CUSTOM, DAY TIME RUNNING LIGHTS, AUTO DOOR, FULLY LOADED
TOYOTA PRADO
LC 5, BLACK PACK, DIESEL, DONE BY 8,000KM, HEIGHT CONTROL, REAR ENTERTAINMENT, FULLY LOADED
SUZUKI WAGON R
FX SAFETY, 2017, PEARL WHITE, AUTO BRAKING, LANE ASSISTS, FULLY LOADED
TOYOTA VITZ - 2018
F SAFETY, PUSH START, AUTO BRAKING, LANE ASSISTS, BRAND NEW UNITS
HONDA N BOX
HONDA N BOX
2016
16,000KMS
2013 A6 S LINE
2013 A6 S LINE
25,000 KMS
FULLY LOADED
FIRST OWNER
PRADO 120
PRADO 120
DIESEL
MANUAL
300,000KM
FABRIC SEATS